₹10

fmpb

# அறைகூவல்

Volume 51 | Issue 12 | December 2021



**தம்முடைய ஒரேபேறான குமாரனாலே
நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே
அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த
அன்பு வெளிப்பட்டது.**

(1 யோவான் 4:9)

*கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி, உங்கள் உள்ளத்தையும்
இல்லத்தையும் நிரப்பி, அளவில்லா ஆசீர்வாதங்களை உங்களுக்கு அனுதினமும் நல்கட்டும்.
உங்களனைவருக்கும் எமது கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்!*

# தெய்வமே தெய்வத்தை அனுப்பிய மகிமை!



# ஆரம்ப வரிகள்...

கிறிஸ்துமஸ் நிகழ்வு, இயேசுகிறிஸ்து
இவ்வுலகிற்கு வந்துப்பிறந்த
ஒரு முக்கியமான அத்தியாயத்தின்
தொடக்கமாக இருக்கலாம்;
ஆனால் அது கிறிஸ்துவின் ஆரம்பம் அல்ல,
“அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய
பூர்வத்தினுடையது” (மீகா 5:2).
கிறிஸ்துவைப்போல் வேறு எவரும்
உலக வரலாற்றில்
இம்மகிமையை அடைந்ததில்லை.
அவர் உண்டாக்கப்படாமல் ஜெநிப்பிக்கப்பட்டவர்;
பிதாவோடே ஒரே தன்மையுடையவர்;
திரியேக தேவனுள் ஒருவரான அவர்
பிதாவினால் இவ்வுலகிற்குள் அனுப்பப்பட்டவர்.
அவரே இறங்கி வந்து, நம்மில் ஒருவரானார்.
ஆம்,
தெய்வமே தெய்வத்தை அனுப்பிய
மகிமை விந்தையிலும் விந்தையே!

பெத்லகேமில் இருதுருவங்களான
‘மகிமையும் தாழ்மையும்’ இணைந்தன,
இது எத்தனை மாபெரும் தாழ்ச்சி! – பரலோக
மாட்சிமையிலிருந்து பூலோக தாழ்விடத்திற்கு;
புகழின் உச்சக்கட்டத்திலிருந்து
அவமானத்தின் அடிமட்டத்திற்கு;
மேலான மகிமையிலிருந்து
கீழான சிறுமைக்கு;
உயர் சிம்மாசனத்திலிருந்து
சிலுவைமர அடிவாரத்திற்கு;
மாசில்லா கண்ணியத்திலிருந்து
மாசுபடிந்த உலகின் கடைநிலைக்கு;
பரிசுத்த வழிபாட்டு நிலையிலிருந்து
அசுத்த வசைபாடல் நிலைக்கு;
சொர்க்க வாசலிலிருந்து பாதாள வல்லடிக்கு;
முடிசூட்டலிலிருந்து முள்முடியணிதலுக்கு;
மகிமையின் பேரின்பத்திலிருந்து
பாடு நிறைந்த சிலுவையின் அகோரத்திற்கு
கிறிஸ்தேசு இவ்வுலகில் பிறந்து
பயணித்ததை அறிகிறோம்.
தமக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்களை மீட்க
கிறிஸ்து வலிமைமிக்க போர் படையோடு வரவில்லை;
மாறாக, முன்னணையிலே தாம் இரட்சிக்க வந்த
மானிடர்களின் கரங்களிலேயே தாழ்மையாக வந்து
வீழ்வதைப் பார்க்கிறோம்.
என்ன ஆச்சரியம்!

இயேசுவின் பிறப்பு,
உலக வரலாற்றையே புரட்டிப்போட்டது.
அவரே காலத்தால் அழியாத
‘வரலாற்றின் மையம்’
என்று குறிப்பிடப்படுகிறார்.
மனுக்குலப் பிறவிகளில் வேறெவரும்
இயேசுவைவிட இம்முக்கியத்துவத்தைப்
பெற்றதுமில்லை, பெறப்போவதுமில்லை.
அவரைவிட சரித்திர சாதனைப் புரிந்த, வேறொரு
பேரரசரோ, தீர்க்கதரிசியோ, ஆன்மீகத்தலைவரோ
தோன்றியதுமில்லை, தோன்றப்போவதுமில்லை.
இதுவே, உலக வரலாற்றை இரண்டாகப்பிரித்தது!
இயேசுவே, உலக சரித்திரத்தில்
பேராதிக்கம் பெற்ற முக்கியஸ்தராகத் திகழ்கிறார்.
ஆம், உலகத்தையே தலைகீழாக மாற்றியவர்
அவர்தான் என்பது உண்மையிலும் உண்மையே!

கிறிஸ்து பிறப்பின் மூலம்,
தெய்வமே மானிட லோகத்திலும்
சரித்திரத்திலும் இடம் பிடிக்கிறார்.
குறிப்பாக, அவர் ஒவ்வொரு
தனிநபரின் வாழ்வில் பிரவேசிக்கவும்,
அவர் ‘இம்மானுவேலர்’ என்பதால்
நம் ஒவ்வொருவருடனும்
மிக நெருக்கமான சொந்தமாக
இருக்கவும் விழைகிறார்.
இயேசுகிறிஸ்துவே மகிமைக்கான ஒரே வழி!
நாமெல்லாரும் அவருடைய மகிமையைக்
காணவேண்டுமென அவர் விரும்புவதோடு, அதை
நம்முடன் பகிர்ந்து கொள்ளவும் விரும்புகிறார்.
நாமும் அவரது மகிமையின் சாட்சிகளாக
அவருடைய தாழ்மையின் அடிச்சுவடுகளைப்
பின்பற்றினால், நமக்கும் அந்த மகிமையின்
கிரீடம் காத்திருக்கிறது (2 கொரி.3:18).

ஆம்,
சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த
கிறிஸ்து பிறப்பின் மகிமையை நாம்
ஒவ்வொருநாளும் பெற்றனுபவிக்கவும்,
கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு
அம்மகிமையை அறிமுகம் செய்யவும்
இக்கிறிஸ்துமஸ் காலங்கள் நமக்கு
மறுபடியும் நல்வாய்ப்பளிக்கிறதன்றோ!

- **JJ. ஹாரிஸ்** (தகவல் தொடர்புத்துறை)

**என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன். -இயேசு (யோவான் 12:46)**

**“கிறிஸ்துமஸ் என்பது ஓர் பரிசுப் பரிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். மனிதன் தன்னையே தேவனுக்கு ஜீவபலியாக - பரிசாகக் கொடுக்க வேண்டுமென்பதற்காக, பிதா தமது ஏகசுதனையே மனுக்குலத்திற்குப் பரிசாகக் கொடுத்தார்.” - வான்ஸ் ஹாவ்னர்**

**“சாவாமையையுடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிறந்ததால், சாவுக்குரிய மனிதன் நித்திய வாழ்வைப் பெறும் சிலாக்கியம் பெற்றான்.” - ஜாண் ஹஸ்**

**ஈசாயின் வேரும் புறஜாதியாரை ஆளும்படிக்கு எழும்புகிறவருமாகிய ஒருவர் தோன்றுவார்; அவரிடத்தில் புறஜாதியார் நம்பிக்கைவைப்பார்கள் என்று ஏசாயா சொல்லுகிறான். (ரோமர் 15:12)**

### நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

**நமது தரிசனம்:**

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும், இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தை பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம் :
**feedbackfmpb@fmpb.org**


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பு**

ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப் பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப் பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை 53. தொலைபேசி 044-26570404
பேக்ஸ் 044-26573353 கைபேசி 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*



# பொதுச்செயலாளரிடமிருந்து...

கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்றும் பணியில் எனது அன்பு உடன்பங்குதாரர்களே,

மனுக்குலத்தை மீட்பதற்கு இரட்சகராக இவ்வுலகிற்கு வந்த நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையின் பண்டிகை நாட்களை முன்னிட்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு குடும்பத்தின் சார்பாக உங்களனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தலையங்கத்தைத் தாங்கள் படிக்கும் போது, கிறிஸ்தவ நாட்காட்டியில் நவம்பர் 28-ம் தேதியே ஆரம்பித்துவிட்ட கிறிஸ்து வருகை நாட்களுக்கான காலங்களில் (Advent Season) நாம் இருந்துக்கொண்டிருக்கிறோம் என்பதை அறியலாம். 'அட்வெந்த்' என்றால் லத்தீன் மொழியில் 'வருதல்' என்பதாகும். இது, இயேசுவின் இவ்வுலக முதலாம் வருகையைக் குறிப்பிடுகிறது. புதிய ஏற்பாட்டில் இதே வார்த்தைதான் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஆகையால், 'அட்வெந்த்' என்பது நாம் கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடுவதற்கும், அவருடைய இரண்டாம் வருகையைச் சந்திப்பதற்கும் ஆயத்தப்படுவதற்கான காலமாகும்.

கிறிஸ்தவ விசுவாசத்தின் அதிபுனிதமான காலங்களில் ஒன்றான இயேசுவின் பிறப்பை நினைவுகூரும் இம்மாதக் காலத்தில், நாம் கேளிக்கை விருந்துகள் மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்குவதற்கு முக்கியத்துவம் தராதிருக்க இந்த அட்வெந்த் காலங்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றது. அதுமட்டுமல்லாது, இது இயேசுவின் வெற்றிகரமான இரண்டாம் வருகையைப் பற்றியும் சிந்திக்க வேண்டிய காலமும்கூட.

பாவியிலும் பிரதான பாவியான நம்மை மீட்பதற்காக, தமது ஒரேபேறான குமாரனை அனுப்பிய பிதாவுக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதை இப்பண்டிகைக் காலம் நமக்கு நினைவூட்டுகிறது. மேலும், நமது தேசத்திலுள்ள அனைத்து ஆத்துமாக்களுக்கும் நாம் இந்த இரட்சிப்பின் நற்செய்தியை அறிவித்து, அவர்களையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுத்துவதற்கான நமது பொறுப்பையும் இது நினைவூட்டுகிறது. முதலாம் உலகப்போரின்போது, 'கிறிஸ்துமஸ் போர்நிறுத்தம்' என்கிற உடன்படிக்கை அநேகருக்கு ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்கியதுபோல, ஆண்டவர் இயேசுவின் வருகையும் தனிப்பட்ட மக்கள் யாவரின் இதயங்களையும் மாற்றுகிறது.

'கிறிஸ்துமஸ் போர்நிறுத்தம்' என்பது 1914-ம் ஆண்டு நடந்த உலகப்போரின்போது, கிறிஸ்துமஸ் காலங்களில் மேற்கு போர் முனையில் பரவலாக ஏற்பட்ட அதிகாரப்பூர்வமற்ற போர்நிறுத்தங்களின் ஓர் தொடராகும். கிறிஸ்துமஸ் காலங்களில் ஏறக்குறைய 1,00,000 பிரிட்டிஷ் மற்றும் ஜெர்மன் போர் படைகள் மேற்கு போர்முனையில் போரிடுவதை முறைசாரா விதத்தில் நிறுத்துவதில் ஈடுபட்டன. ஜெர்மானியர்கள் தங்களுடைய போர் எல்கைகள் மற்றும் கிறிஸ்துமஸ் மரங்களில் மெழுகுவர்த்திகளை ஏற்றிவைத்து, கிறிஸ்துமஸ் கேரல் பாடல்களைப் பாடிக்கொண்டாடினர். இதைக்கண்ட ஆங்கிலேயப் படைகளும் தங்களுடைய கேரல் பாடல்களைப் பாடினர். அதைத்தொடர்ந்து, இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை உரக்கச் சத்தத்தில் கூறி தெரிவித்துக் கொண்டனர். பின்னர் கூட்டு ஆராதனைகளும் நடைபெற்றன. பல போர்ப்பகுதிகளில், இந்தப் போர்நிறுத்தம் கிறிஸ்துமஸ் நாளின் இரவுவரை மட்டும் நீடித்ததோடு, புத்தாண்டு நாள்வரையும்கூட அது தொடர்ந்தது.

இத்தகைய மனித நல்லிணக்கத்தை தேவன் இந்தக் கிறிஸ்துமஸ் காலங்களில் நமது ஒவ்வொரு தனிப்பட்ட, குடும்ப மற்றும் சமுதாயத்

திற்கிடையே ஏற்படுத்துவாராக. “உன்னதத்தி லிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக...” (லூக்கா 2:14).

### கண்ட்வா விடுதிப்பிரதிஷ்டை:

2021, அக்டோபர் 20-ம் தேதி மத்தியப் பிரதேசத்திலுள்ள கண்ட்வாவில் கட்டப்பட்டுள்ள சிறுவர் விடுதிக்கான கட்டிட அறைகள் யாவும் தேவநாம மகிமைக்காகப் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இந்த வளாகத்தில் தங்குமிடம், மிஷனெரி மற்றும் பணியாளர்கள் குடியிருப்பு, அலுவலக அறை, சமையலறை, உணவருந்தும் அறை மற்றும் உபயோகப் பொருட்களின் சேமிப்பறை ஆகியவைகள் புதிதாகக் கட்டப் பட்டுள்ளன. கண்ட்வா பிராந்தியத்திலுள்ள நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு நல்ல தங்குமிடத்தைக் கொடுப்பதற்கான இக்கட்டிடத் திட்டத்தில் தங்களது பங்குகளை அளித்த அனைத்து நன்கொடையாளர்களுக்கும் நான் நன்றி கூறுகிறேன்.

### குஜராத் பேராயரோடு சந்திப்பு:

நமது இயக்கத்தின் தலைவரும், நானும் பணித்தள மற்றும் விரிவுப்பணி செயலாளர் களோடு இணைந்து குஜராத் பேராயத்தின் பேராயர் மாமறைதிரு. சில்வான்ஸ் கிறிஸ்டியன் அவர்களையும், அப்பேராயத்தின் உதவி தலைவர், நிதிக்காவலர் மற்றும் செயற்குழு அங்கத்தினர்களையும் 2021, அக்டோபர் 23-ம் தேதி குஜராத், நேத்ரங்கில் உள்ள ஃபோக்டியிலிருக்கும் நமது தலைமைப்பயிற்சி மையத்தில் வைத்து சந்தித்தோம். இந்தச் சுமூகமான சந்திப்பில், குஜராத் பேராயத் திற்கும் நமது இயக்கத்திற்கும் இடையேயான உறவு, ஜெபம், ஆதரவு மற்றும் இணைந்து செயல்படுவது குறித்ததான முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

### மிஷனெரிகள் தேவை:

நமது தேசத்தில் சுவிசேஷம் சென்றடையாத திரளான மக்களின் எண்ணிக்கையை நாம் பார்க்கும்போது, அது நமக்கு ஒரு பெரிய ஆத்தும பாரத்தைத் தருகிறது. கடந்த அக்டோபர் 24-ம் தேதி மத்தியப் பிரதேசத்திலுள்ள விந்தியா மலையில் நடந்த ஒரு ஆராதனையில் கலந்து கொண்டோம். அதன் மற்றொரு பகுதியிலுள்ள 70 கிராமங்களை இன்னும் சுவிசேஷம் சென்றடையவில்லை என அங்குள்ள நமது மண்டல செயலாளர் அருள்திரு. ஜோசப் துரைராஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதுபோல இன்னும் ஆயிரக்கணக்கான பகுதிகள் நற்செய்தியைப் பெற காத்திருக்கின்றன. எனவே, கலாச்சாரம் கடந்து ஊழியம் செய்ய மிஷனெரிகள் தேவை. மத்.9:38-ல் “அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்,” என்று சொல்லப்பட்டிருக்கிறபடி, இம்முக்கியமான தேவைக்காக அநுதினமும் ஜெபிக்க முன் வரும்படி பட்சமுடன் கேட்டுக்கொள்கிறேன்.

### கிறிஸ்துவுக்குள் நம்பிக்கை தரும் எதிர்காலங்கள்:


கடந்த நவம்பர் 4-ம் தேதி, சென்னை - ஆவடியில் நடந்த விரிவுப்பணி ஊழியத்தின் போது, 19 இளைஞர்கள் ஜெபக்குழுத் தலைவர்களாக தேவனுக்கு ஊழியம் செய்ய தங்களை ஜெபத்தோடு அர்ப்பணித்தனர். நமது ஜெபக்குழுத் தலைவர்களின் தன்னார்வ ஊழிய ஈடுபாடுகள் தலைமுறை தலைமுறையாகத் தொடர்கின்றன என்பது நமது ஊழியத்தின் எதிர்காலத்திற்கு ஒரு பெரிய நம்பிக்கையை அளிப்பதாக அமைகிறது.

### திருமதி. லிடியா ஜூலியட் அகஸ்டஸ் அவர்களின் பிரிவு:

தமிழ்நாடு - மேற்கு மண்டல விரிவுப்பணி நமது மிஷனெரி திருமதி. லிடியா ஜூலியட் அகஸ்டஸ் அவர்கள், தனது 49-வது வயதில் 2021, நவம்பர் 16-ம் தேதி தேவ மகிமைக்குள் பிரவேசித்தார்கள். மேற்கு மண்டல விரிவுப்பணி செயலாளரான அவரது கணவர் அருள்திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ் அவர்களையும், அவர்களது மகன் ஜோனத்தானையும் தேவன் பெலப்படுத்த தயைகூர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நமது இயக்கத்தின் மிஷனெரிகள், ஜெபக்குழுத் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எனது அன்பின் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்!

தேவஊழியத்தில் தங்கள் சகஊழியன்,



**அருள்திரு. S. ஜாண் பெர்லின்**



# கால தேவனின் வருகையும், அழைப்பும்!

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் மாதம் இது. அவர் பிறந்து ஆயிரங்களாய் ஆண்டுகள் ஓடிவிட்டாலும், இன்னும் நம் நாட்டில் கோடிக்கணக்கான மக்கள் அவர் நாமம் அறிந்திடவில்லை. ஆதாம் பாவத்தில் விழுந்தபோது மனிதனை மீட்பதற்காக தேவன் மீட்பின் திட்டம் வகுத்தார், வாக்கும் கொடுத்தார் (ஆதி.3:15). ஆதியாகமம் 12-ம் அதிகாரத்தில் ஆபிரகாமிற்கு வந்த தேவ அழைப்பைப் பார்க்கிறோம். 75-வது வயதில் அழைத்தார்; 100-வது வயதில் குழந்தை ஈசாக்கைக் கொடுத்தார்; ஆயிரமாய்ப் பெருகுவாய் என்றவர் பெருகப்பண்ணினார். யோசேப்பின் காலத்திற்குப்பின் ஆபிரகாமின் வம்சாவளியினர் எகிப்தின் அடிமைகளானார்கள். பின்பு மோசேயின் தலைமையில் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை – சுதந்திர பூமிக்குப் பயணம் – பின்னர் யோசுவா கானானில் இவர்களைக் குடியமர்த்தினார். அதன்பின் நியாயாதிபதிகள் தோன்றினார்கள். பின்பு சாமுவேலின் காலத்தில் மக்கள் மன்னனைக் கேட்டதினால், அரசர்கள் தோன்றினார்கள். தாவீது தலைசிறந்த அரசனாய் தன் மக்களை ஆட்சி செய்தான். சாலமோனுக்குப்பிறகு வடக்கு – தெற்கு என இராஜ்யம் இரண்டானது. வடப்பகுதி விழுந்துபோனது, தென்பகுதி மக்கள் எரேமியாவின் கூற்றுப்படி பாபிலோனுக்கு 70 ஆண்டுகள் சிறையிருப்புக்குக் கொண்டு போகப்பட்டார்கள். பின்பு செருபாபேலின் தலைமையில் திரும்பி வந்தார்கள்; ஆலயம் கட்டினார்கள்; பாரம்பரியம் தலைதூக்கியது. பாரம்பரியத்தை நியாயப்பிரமாணத்திற்குச் சமமாக்கினார்கள. தீர்க்கர்கள் கர்த்தரின் செய்தியைச் சொன்னாலும் கடினமனம் கொண்ட மக்களோ மாறிடவில்லை. எனவே கர்த்தர் தமது கோபத்தின் உச்சத்தில், “என் ஆலயத்தின் கதவைப் பூட்டினால் நலமாயிருக்கும். கூலியில்லாமல் யார் பணி செய்வீர்கள்? நான் உங்களிலும் உங்கள் காணிக்கையிலும் பிரியம் கொள்ளவில்லை” என்றார் (மல்.1:10). அதன்பின் சுமார் 400 ஆண்டுகள் தேவன் மனிதனோடு பேசவில்லை. சரித்திரம் இதை ‘இருண்ட காலம்’ என்றே அழைக்கிறது.

மல்கியா தீர்க்கதரிசன காலத்திற்கும் மத்தேயு நற்செய்தி நூலுக்கும் இடைப்பட்ட காலங்கள் சுமார் 400 ஆண்டுகள். காலங்கள் உருண்டோடிக்கொண்டிருந்தாலும், காலத்தைக் கடந்து உலகினுள் இருப்பவர் சும்மா இருந்திடவுமில்லை; அவர் தம் சொல் தவறிடவுமில்லை. உலகை தம் வருகைக்காக ஆயத்தப்படுத்தினார்.

"காலம் நிறைவேறினபோது ... தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்'' (கலா.4:5).

## கிரேக்க மொழி:

கிரேக்க தத்துவ ஞானிகளான சாக்ரடீஸ் (கி.மு.469-399), பிளாட்டோ (கி.மு.428-348), அரிஸ்டாட்டில் (கி.மு.384-322) போன்றவர்கள் வாழ்ந்த காலம், 'ஏன்? எதற்கு? என கேள்விகளைக் கேள்!' எனப் பறைசாற்றிய காலம். அறிவினால் கடவுளை அடையலாம் என்றார்கள். ஆனால் இவர்களின் அறிவுப்பூர்வமான சிந்தனை சொற்களெல்லாம் சாதாரண மனிதர்களைச் சென்றடையவில்லை. கிரேக்க மொழி உலக மொழியாகக் கருதப்பட்ட அக்காலத்தில், கிரேக்க மொழி ஒருவனுக்கு 'கற்றவன்' என்ற அந்தஸ்தையும் மரியாதையையும் பெற்றுத் தந்தது. பவுலடியார் இம்மொழியைப் பயன்படுத்திய பொழுதெல்லாம் மற்றவர்கள் கூர்ந்து கவனித்தார்கள். எருசலேம் கலகத்தில் சேனாபதியிடம் பவுலடியார் கிரேக்க மொழியில் பேசினார் (அப்.21:37). மிஷனெரிப்பணியின் அறிமுகத்திற்கும் வளர்ச்சிக்கும் இது பேருதவியாக இருந்தது.

## ரோம ராஜ்யம்:

கிரேக்க ராஜ்யத்திற்குப் பின்பு ரோம ராஜ்யம் உலக ராஜ்யமாக வர்ணிக்கப்படுகிறது. அவர்களது ஆட்சிக்காலத்தில் சாலை வசதிகள், நீதி விசாரணைகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கவைகள். "எல்லாச் சாலைகளும் ரோமுக்கு நேராய்" என்ற சொற்றொடர் பழக்கத்திலிருந்தது. எனவே ரோம ராஜ்யத்தின் தலைநகரமான ரோமாபுரிக்கு எல்லாப் பட்டணங்களிலிருந்தும் சாலை வசதிகள் செய்துவைத்திருந்தனர். பவுலடியார் சுவிசேஷத்தை எல்லாப் பட்டணங்களுக்கும் எடுத்துச்செல்ல இது வசதியாக இருந்தது. நீதி விசாரணைகள் முறையானதாகவும், நேர்மையுடனும் நடந்தது. அவைகள் முறையாக நடைபெற்றதினால் ஒரு அமைதியான நிலை எல்லாப் பட்டணங்களிலுமிருந்தது. இது சுவிசேஷம் எடுத்துச்செல்ல உதவியாக இருந்தது. முக்கியமான பட்டணங்களில் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடத்தப்பட பிரம்மாண்டமான அரங்க சாலைகள் அமைக்கப்பட்டிருந்ததால், அங்கே அடிமைகளின் சண்டைக்காட்சிகள் நடைபெற்றன. பல வேளைகளில் பரிசு வாங்குவதற்கு ஒருவரும் இருக்கமாட்டார்கள். அவ்வாறு மனிதர்கள் ஒருவரையொருவர் அடித்துக் கொல்வதைப் பார்த்து ரசித்த காலத்தில், மனித நேயத்தைப் பற்றி போதிப்பதற்கு தெய்வம் மனிதனானார். ஆம், "உன்னைப் போல் பிறனையும் நேசி!'' என்றார், இயேசு (மாற்கு 12:31). 'வெட்கம்' என்ற சொல்லுக்கு அர்த்தமில்லா ஆண், பெண் உறவு இருந்த காலம் அது. எனவே 'ஒரு பெண்ணை இச்சையோடு பார்ப்பதே பாவம்' என பரிசுத்தம் பற்றிப் போதிக்க வந்தார், இயேசு (மத்.5:28).

## மேசியாவை எதிர்பார்த்தல்:

அந்நாட்களில் யூதர்கள் ரோம ராஜ்யம் முழுவதும் பரவி வாழ்ந்தார்கள். இவர்களது வாழ்க்கை முறை வித்தியாசமானது - தெய்வ வணக்கமானாலும், உணவு முறையானாலும், பழக்கவழக்கமானாலும், கலாச்சாரமானாலும் மற்ற மக்களைவிட வேறுபட்டதாகவே காணப்பட்டது. பல தெய்வ வணக்கம் இருந்த காலத்தில், இவர்கள் ஒரு தெய்வ வணக்கமுள்ளவர்களாயிருந்தார்கள். எனவே, மற்ற மக்கள் இவர்களைக் கவனித்துக் கொண்டே இருந்தார்கள். இவர்கள் சொன்ன செய்தி, " 'மேசியா' என்றொருவர் வரப்போகிறார்; அவர் தாவீதைப் போல அரசாளுவார்!" என

சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆகவே ஒரு யூத பெண்மணி ஆண் மகவைப் பெற்றெடுப்பாளென்றால், ‘அவன் மேசியாவாக இருக்க மாட்டானா’ என்ற எதிர்பார்ப்போடே வளர்ப்பார்களாம். இந்த எதிர்பார்ப்போடு யூதர்கள் வாழ்ந்ததினால்தான், சாஸ்திரிகளின் வரவைத் தொடர்ந்து ஏரோது, பிரதான ஆசாரியர் மற்றும் வேதபாரகரை அழைத்து விசாரித்தான் (மத்.2:4); அவர்களும் உடனடியாக மீகா 5:2-ஐ கோடிட்டுக் காண்பித்தார்கள். அதே விதமாக சமாரிய பெண்ணோடு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சம்பாஷணை செய்யும்போது, “கிறிஸ்து என்னப்படுகிற மேசியாவின் வரவை அறிவேன்” என்றாள், அப்பெண் (யோவான் 4:25).

‘யூத மன்னனாக மேசியா வரவிருக்கிறார்’ என்ற எதிர்பார்ப்பின் காலத்தில் “தெய்வம் மனிதனானார்.’’ உலகில் அநேக மகான்கள் தோன்றியிருக்கிறார்கள்; அவர்கள் சமுதாய மாற்றம் மற்றும் தேசங்களுக்குச் சுதந்தரம் பெற்றுத் தந்திருக்கிறார்கள். ஆனால், இயேசு மனிதகுலத்துக்கு இரட்சகராக வந்தார். தெய்வம் மனிதனாகப் பிறக்கிறாரென்றால் அதை நிச்சயமாக முன்னறிவித்திருக்க வேண்டும். மீகா 5:2-ல் அவர் எந்த ஊரில் பிறப்பாரென்பதையும், ஏசா. 11:1-ல் எந்தக் குடும்பத்தில் பிறப்பாரென்பதையும், ஏசா.7:14-ல் கன்னியின் வயிற்றில் பிறப்பாரென்பதையும், ஏசா. 9:6-ல் அவர் எப்படிப்பட்டவரென்பதையும், ஏசா.53-ம் அதிகாரத்தில் அவர் மனுக்குலத்தின் பாவத்தைச் சுமப்பாரென்பதையும் தீர்க்கர்கள் முன்னறிவித்தார்கள். ஆம், அவர் சொன்னபடியே வந்தாரென்பது சரித்திர உண்மை.

இனி மற்ற அறிஞர்களின் கூற்றையும் பார்ப்போம். ரோம வரலாற்று ஆசிரியர் டாசிட்டஸ், மார்க்க பக்தியில் கிழக்கத்திய நாடுகள் மேலோங்கி நிற்குமென்றும், யூதேயாவிலிருந்து உலகத்தை ஆளுகிறவர் வருவார் என்று கூறும் பழங்கால தீர்க்கதரிசனங்கள் மக்களால் பரவலாக நம்பப்படுகின்றன என்றும் எழுதியிருக்கிறார். சீன வரலாறும், ஷவாங் என்ற சீன மன்னனின் 24-ம் ஆண்டு 4-ம் மாதம் 8-ம் நாள் தென்மேற்கில் ஒரு வெளிச்சம் தோன்றி அரண்மனையை ஒளிமயமாக்கியது என கூறுகின்றது. அதற்கு அங்கிருந்த ஞானிகள் சொன்ன காரியம், ‘மேற்கத்திய பிராந்தியத்தில் ஒரு மகான் தோன்றுவார். அவரின் போதனை சீக்கிரமாய்ச் சீனாவில் போதிக்கப்படும்’ என்றார்கள். கிரேக்க ஞானிகளும், “கடவுள் தோன்றி உன் பாவங்களைத் தன்மேல் ஏற்றுக்கொள்ளும்வரை வேறு முடிவை எதிர்பார்க்காதே!” என்றார்கள். சாக்ரடீஸ், அரிஸ்டாட்டில் கூட ‘லோகோஸ்’ என்ற உலக ஞானி தோன்றுவார் என எதிர்பார்த்தார்கள். ரிக் வேதமும், ‘மனிதருக்காகப் பலியாகும் பொருட்டு ‘பிரஜாபதி’ என்ற தெய்வ மனிதர் தோன்றுவார்; இவர் இயற்கைக்கு அப்பாற்பட்டவராய் இருப்பார்’ என கூறுகிறது. ஆக உலக சரித்திரமும் அவர் வருகையை எதிர்பார்த்ததோடு, அவர் வந்தது உண்மை என்பதையும் அது வெளிப்படுத்துகிறது. அதுபோல அவர் இனி வரவிருப்பதும் உண்மையே.

## தற்போதைய அடையாளங்கள்:

ஆண்டவரின் முதலாம் வருகையான அவரது பிறப்புப்பண்டிகை கொண்டாட்டத்திற்கு ஆயத்தப்படும் நாம், அவருடைய இரண்டாம் வருகையைப் பற்றி மத்தேயு 24, மாற்கு 13, லூக்கா 21, 2தீமோ.3&4, 2பேதுரு 3 ஆகிய அதிகாரங்களில் தெளிவாய்ப் பார்த்து அறிந்து கொள்ளலாம். அவருடைய இந்த வருகையைக் குறித்தும் அநேக

தீர்க்கதரிசிகளும், பவுலும் பேதுருவும்கூட கூறியுள்ளனர்; இயேசுவும் தமது இவ்வருகையைப் பற்றி கூறியுள்ளார். வேதாகமத்தின் முடிவுரையும் "கர்த்தராகிய இயேசுவே, வாரும்'' (வெளி.22:20) என்றுதான் முடிவடைகிறது.

இயேசுகிறிஸ்து அவருடைய இரண்டாம் வருகைக்கு அடையாளமாக அரசியல் குழப்பங்கள், இயற்கையின் சேதங்கள் மற்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் பற்றி அநேக காரியங்களைச் சொன்னார் (மத்.24:11). அவைகள் நாம் வாழும் இக்காலங்களில் நடந்து வருகின்றதைக் காண்கின்றோம். நாடுகளுக்கிடையில் ஏற்படுகின்ற மோதல்கள், யுத்தத்தின் சத்தம் நம்மை அச்சுறுத்தும் விதத்தி லேயே இருக்கின்றன. அணு ஆயுத சோதனைகள், விண்வெளியில் ஏற்படும் போட்டிகள் இவைகள் எல்லாமே பெரும் யுத்தங்களுக்கான ஆயத்தம் என்பதையே உணர்த்துகின்றன. சொந்த தேசத்து மக்களையே கூட மதத்தாலும் இனத்தாலும், நிறத்தாலும் பிரித்து ஆளுவதைப் பார்க்கிறோம். ஒரு மக்கள் இனம் அடுத்த மக்கள் இனத்தை ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. இவைகள் எல்லாமே அரசியல் குழப்பத்தைக் காண்பிக்கின்றன. பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும் (மத்.24:7). ஆம், கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாய்க் கோவிட்-19 உலகை இயங்கவிடாமல் தடுத்த காரியம், கொள்ளைநோய்ப் பற்றி உலகத்தின் அனைத்து தரப்பு மக்களும் அறிந்து கொள்ளும் விதத்தில் அமைந்திருக்கிறது. அடுத்தது உணவு தட்டுப்பாடு உலகெங்கும் தலைதூக்க ஆரம்பித்து விட்டது. "நீங்கள் உண்ணும் உணவைக் குறைத்துக் கொள்ளுங்கள்!" என ஒரு தேசத்தின் அதிபர் தன் தேசத்து மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இது பஞ்சங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறது. 'பூமியதிர்ச்சி' என்பது ஒரு காலத்தில் செய்தித்தாள்களில் தலைப்புச்செய்தியாக இடம் பிடிக்கும். ஆனால் இன்று பூமியதிர்ச்சி என்பது பொதுச்செய்தியாக மாறிவிட்டது. இயற்கை யினால் வரும் சேதங்களான இவைகள் யாவும் ஆண்டவரின் இரண்டாம் வருகையை நமக்கு நினைவூட்டுகின்றன. இவைகளெல்லாமே வேதனைகளுக்கு ஆரம்பம். ''வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். பூமிக்கு வரும் ஆபத்தை எதிர்நோக்கி மனிதனின் இதயம் சோர்ந்து போகும்'' என வேதம் சொல்லுகிறது. இதற்கிடையில் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி தங்களையே தெய்வமாகக் காண்பித்து மக்களை வஞ்சிப்பார்கள். பெரிய அடையாளங்களையும், அற்புதங் களையும் செய்வார்கள். ஆகவே எல்லாச் சமயங்களிலும் குழப்பம் இருக்கும்.

சன்மார்க்க வாழ்க்கையும் சீராய் இராது. அக்கிரமம் மிகுதியாவதினால் அன்பு தணிந்துபோம் (மத்.24:12). செய்தித் தாள்களில் தினமும் வருகின்ற செய்தி களில் பெரும்பான்மையானவைகள் அக்கிரமமாகவே இருக்கின்றன. குழந்தை களுக்கு ஆசானாய் இருக்க வேண்டி யவன், குழந்தையின் கால்களைப் பிடித்து மாடியிலிருந்து தலைகீழாகத் தொங்கவிடுகிறான். ஆக மனிதனின் சுபாவ அன்பு தணிந்து போய் (2தீமோ. 3:2), அவனது சுபாவமே மாறிவிட்டது. 'பணம் மட்டுமே குறிக்கோள்' என வாழும் கூட்டமாக மனிதஇனம் மாறி வருவதைப் பார்க்கிறோம். இவைகள் எல்லாம் அவரின் அடுத்த வருகையைக் காண்பிக்கின்றன.

ராஜ்யத்தின் சுவிசேஷம் அனைத்து ஜாதி களுக்கும் பிரசங்கிக்கப்படும்; அப்போது முடிவு வரும் (மத்.24:14). தாய்லாந்து தேசத்தில் கடந்த ஆண்டு செப்டம்பர்

மாதத்தில் ஒரே நேரத்தில் 1,435 பேர் திருமுழுக்கு பெற்றிருக்கிறார்கள். கோவிட்–19 மத்தியிலும் இது நடைபெற்றிருக்கிறது. இவ்விதமாக உலகின் அனைத்துப் பகுதிகளிலும் சுவிசேஷம் வேகமாகப் பரவிக்கொண்டிருக்கிறது. இவைகள் யாவும் நமக்குச் சொல்லுகின்ற செய்தி, ஆண்டவரின் வருகை மிகச் சமீபமாக இருக்கின்றது என்பதேயாகும். இன்று அவர் வருவாரானால் நம் நிலை என்ன? இதுவரைக்கும் ஆண்டவரை நாம் சொந்தமாக்கிக் கொள்ளவில்லை யானால், இன்றே சொந்தமாக்கிக் கொள்வோம். அதற்கு நம் பாவங்களை நாம் அறிக்கை செய்து மனந்திரும்பி, அவரை ஏற்றுக்கொள்வோம். ஏனெனில், இரட்சிப்பின் அனுபவம் கொண்டிராத யாரும் அவருடைய ராஜ்யத்திற்குச் சொந்தமாக முடியாது. இந்த இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றிருக்கும் நாம் நமது இரட்சகரைப் பிறருக்கு அறிமுகம் செய்கிறோமா?

“அவருடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்” எனப் பேதுருவும் 2பேதுரு 3:12–ல் எழுதுகிறார். அதில் ‘காத்திருங்கள்’ என்ற பதத்தைத் ‘துரிதப்படுத்துங்கள்’ எனவும் மொழி பெயர்க்கலாம். எனவே ஆண்டவருடைய வருகையைத் துரிதப்படுத்த, நாம் அவரது சுவிசேஷத்தைத் தீவிரமாய்ப் பிறரிடம் எடுத்துச்செல்ல வேண்டும். இதிலே நமது பங்களிப்பு என்ன? ‘எனக்கும் அவர் பணி செய்ய வாய்ப்பிருக்கிறதா?’ என்போருக்கு எத்தனையோ வாய்ப்புகள்! அறியாதோர் அறிந்திட அறைகூவல் பயன்படுத்தி ஜெபிக்கலாம்; தெய்வத்தைத் தேடி அலைகின்ற மக்களை நாடிச்சென்று நற்செய்தியை அறிவிக்கலாம்; சீராக சமுதாயம் வளர்ந்திட சமுதாயப்பணி செய்யலாம்; கல்விக்கு வாய்ப்பில்லாத மக்களினங்களின் மத்தியில் கல்விப்பணி செய்யலாம். இவ்வாறு ஏராளமான வாய்ப்புகள், தீர்மானிக்க வேண்டியதோ நம் கரத்தில்! ‘வா!’ என அழைக்கிறார், இயேசு. எனவே அவரது பிறப்புப் பண்டிகையின் கொண்டாட்டத்திற்கு முன் நம்மையே அவரிடம் அர்ப்பணிப்போம். அதுவே அர்த்தமுள்ள கொண்டாட்டமாக இருக்கும்.

**– அருள்திரு. பால் சாலமோன்,**
FMPB.

---



## மகிமைக்குள் பிரவேசித்தார்

சாயர்புரம் – திரு. J. பீட்டர் லெனின்பால் அவர்கள், தனது வாலிபப்பிராயத்திலிருந்தே நமது இயக்கத்தோடு தொடர்பு உள்ளவர்கள். நமது சாயர்புரம் பகுதியில் கௌரவ முன்னேற்றப்பணி செயலராகக் கடந்த 12 வருடங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விதத்தில் ஊழியம் செய்து வந்த இவர், சமீபத்தில் கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டு சுகமடைந்து வந்தபோதும், இவரது சரீரத்தில் காணப்பட்ட அதிக பலவீனம் காரணமாகக் கடந்த 02.11.2021 அன்று தன்னுடைய 66–வது வயதில் தேவ ராஜ்யத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். இவர் விட்டுச்சென்றுள்ள இவரது குடும்ப மக்களின் மனஆறுதலுக்காக ஜெபித்துக்கொள்வோம்.

# முதல் தலைமுறையினராக கிறிஸ்துமஸ் கொண்டாடும் குருக் இன மக்கள்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, சத்தீஸ் கட்டிலிலுள்ள குருக் இனமக்கள் மத்தியில் 1993-ம் வருடம் அக்டோபர் மாதத்தில் தமது ஊழியங்களை ஆரம்பித்து, சுமார் 12,500 மக்களை இம்மட்டும் கிறிஸ்துவின் மந்தையில் சேர்த்துள்ளது. இம்மக்கள் மத்தியில் லுடேக், பத்தல்காவ், சீத்தாபூர், அம்பிகாபூர், தப்காரா, லக்கன்பூர், ராஜ்பூர் ஆகிய 7 பணித்தளங்கள் காணப்படுகின்றன. லுடேக் சிறுவர்கள் காப்பகம், பத்தல்காவ் சிறுமிகள் காப்பகம், தில்டேகா பகல்நேர காப்பகம், ரகுநாத்பூர் சிறுவர்கள் காப்பகம், ரகுநாத்பூர் சிறுமிகள் காப்பகம் ஆகிய 5 காப்பகங்களின் மூலமாக சுமார் 500 பேர் பயன்பெற்று வருகின்றனர். இம்மக்கள் மத்தியில் 15 ஊழியர்களும், 25 சுதேச ஊழியர்களும் ஊழியம் செய்கின்றனர். குருக் இனமக்கள் திராவிட இன மக்களாவர். இவர்கள் இந்தியாவில் சத்தீஸ்கட், ஜார்க்கண்ட், ஒடிசா, பீஹார், மேற்கு வங்காளம், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களிலும், வங்காள தேசத்திலும், நேபாளிலும் சுமார் 50 லட்சம் மக்களாக வாழ்கின்றனர். சத்தீஸ்கட்டில் மட்டும் சுமார் 10 லட்சம் மக்கள் உள்ளனர். திராவிட மக்கள் இவர்கள் மத்தியில் ஊழியத்திற்குச் சென்றால் உருவ, நிற அடிப்படையில் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புகள் இல்லை. காடுகளிலும், மலைகளிலும், வயல் வெளிகளிலும் வாழும் இம்மக்களை விருந்தோம்பலில் எவரும் மிஞ்சிவிட முடியாது. உயர் ஜாதி மக்களுக்கு மிகவும் பயப்படும் இம்மக்கள் மத்தியில் ஆட்டம்பாட்டம் மது இல்லாத பண்டிகைகளும் விழாக்களும் இல்லையென்றே சொல்லலாம்.

இவர்கள் நெல் பயிரிடுகிற மக்களாவர்; அரிசி இவர்களுடைய உணவாகும். வெந்ததையும் வேகாததையும் சாப்பிட்டு எதற்கும் கவலைப்படாத எளிய எண்ணம் கொண்ட இவர்கள் குழந்தைகளுக்கு அரிசி உணவைப் பழக்கும்போதே சாராயத்தையும் பழக்குவிக்கின்றனர். ‘சுத்தம் சோறு போடும்’ என்ற முதுமொழிக்கேற்ப வீட்டைச் சுத்தமாக வைத்திருக்கும் நல்ல மக்கள், இவர்கள். எனவே வெளி மக்கள் இவர்களது வீட்டிற்கு வரும்போது, இவர்கள் அவர்களுடைய கால்களைக் கழுவிச் சுத்தப்படுத்தி, கால்களில் எண்ணெய்ப் பூசி மாலிஸ் செய்து, கால்வலியைப் போக்கி, மனதைக் குளிரச் செய்து தங்கள் வீட்டிற்குள்





அவர்களை வரவேற்கின்றனர். இத்தகைய இவர்களுடைய நற்செயல்பாடுகளைக் கண்ணோக்கிய தேவன், இவர்களை நினைவுகூர்ந்து, இவர்கள் மீது அளவில்லா கருணை கொண்டார். எனவே நமது மிஷனெரிகளை இவர்களின் மத்தியில் அனுப்பிக்கொடுத்து, கெட்டப் பழக்க வழக்கங்களை இவர்களிடமிருந்து துரத்திவிட்டார். தமது ராஜ்யத்தைப் பற்றி இவர்கள் அறியவும், ஆயத்தப்படவும், ஆயத்தப்படுத்தவும் சித்தம் கொண்டார்.

## கிறிஸ்து பிறப்பால் ஏற்பட்ட மாற்றம்:

அன்று ஆட்டம்பாட்டம் மது இல்லாத திருவிழாக்கள் இல்லை; இன்று ஆட்டம் உண்டு, பாட்டம் உண்டு, மதுவோ மாயமாகி விட்டது. அன்று திருவிழாக்களின்போது, மக்கள் குடித்து வெறித்து தெருக்களிலும் வீதிகளிலும் களைத்து விழுந்து கிடந்தனர்; இன்று கிறிஸ்து பிறப்புப் பண்டிகையின் போது, மகிழ்ச்சியில் திளைத்து ஆடிப்பாடி ஜீவ தேவனை ஆராதிக்கின்றனர். பின்பு தங்கள் வீடுகளுக்குச் சென்று முன்பே தயாரித்து வைத்த உணவுப்பண்டங்களைத் தாங்களும் உண்டு, மற்றவர்களுக்கும் கொடுத்து அகமகிழ்கின்றனர். அன்று குடித்து வெறித்து மதிகெட்டுச் சீரற்ற ஆடையுடன் புலம்பித் திரிந்த இம்மக்கள், இன்று பண்டிகையின்போது புத்தாடை அல்லது சுத்தாடை அணிந்து, சுயநினைவுடன் ஏகசுதன் இயேசுகிறிஸ்துவின் பிறப்பை கருத்தாய்க் கொண்டாடி மகிழ்கின்றனர். ஆஹா, என்ன விந்தை! கிறிஸ்துவின் பிறப்பால் விளைந்த அழகிய விந்தை!!

## கிறிஸ்து பிறப்பு பண்டிகை மாதம்:

டிசம்பர் மாதத்தின் இரண்டாம் வாரத்தி லிருந்தே கிறிஸ்து பிறப்புப் பண்டிகைக்கான ஆயத்தப்பணிகளை இம்மக்கள் செய்யத் தொடங்குகின்றனர். முதலில் தமது வீட்டைச் சுத்தம் செய்து, சுவர்களில் வெள்ளையடிக்கின்றனர். இவர்களில்





சிறந்த கலா ரசிகர்களும் உண்டு. ஏனெனில் பலர் சேறுண்டாக்கி, அதில் வைக்கோலை எரித்து சேற்றோடு சேர்த்து சுவற்றில் பூசுவார்கள்; அது கருப்பு நிறப் பெயிண்ட் அடித்தது போல காணப்படும். பின் சுவற்றின் கீழ் பகுதியில் சானியால் அல்லது சானியோடு சிவப்பு மண் சேர்த்து மொழுகுவார்கள். இது பார்ப்பதற்கு மிக அழகாக மேல் சுவற்றில் கருப்பு நிறத்திலும், கீழ் சுவற்றில் சிவப்பு நிறத்திலும் காணப்படும். ‘வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்!’ என்பாற் போல வைக்கோலையும் மண்ணையும் பெயிண்டாக மாற்றும் வல்லவர்கள், இம்மக்கள்.

கிறிஸ்தவ கிராமங்களில் இவர்களது வீடுகள் சிறியதாக இருப்பதால் 40 – 50 முழ உயர மூங்கிலில் ‘ஸ்டார்’ கட்டி, அதை உயரத்தில் பறக்கவிட்டு அதன் மூலம் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி

யைக் கொண்டாடுகின்றனர். சிலர் அதோடு சேர்த்து கவர்ந்திழுக்கும் நிறத்திலான ஒரு நீள முக்கோண வடிவிலான கொடியையும் பறக்க விடுவார்கள். சில வீடுகளில் சிறிய ஸ்டார் தொங்க விடுவார்கள். இயேசுவைப் பற்றிய அறிவு குறைவாக இருந்தாலும், இவ்வாறு அவரைத் தங்களால் முடிந்த மட்டும் உயரத்தில் உயர்த்திக் காட்ட விரும்பும் உயர் உள்ளம் கொண்டவர்கள், இம்மக்கள். முன்பு உயர் ஜாதியினருக்கு அஞ்சிய இவர்கள், இப்போது கிறிஸ்து பிறப்புப் பண்டிகையின்போது 'தாங்கள் கிறிஸ்தவர்கள்' என்றும், 'தங்கள் கிராமம் கிறிஸ்தவ கிராமம்' என்றும் பிறருக்கு பறைசாற்றுவதற்கு அஞ்சாதவர்கள். கிறிஸ்து இவர்கள் உள்ளத்தில் பிறந்ததால், அச்சம் இவர்களிடமிருந்து அறுப்புண்டு போனதில் ஆச்சரிய மென்ன? இவர்கள் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை நமது ஊழியர்களிடத்தி லிருந்து ஏற்றுக்கொண்டது போல, கிறிஸ்து பிறப்பு கேரல் முறைமை களையும் ஏற்றுக்கொண்டுள்ளனர். எல்லாச் சபைகளிலும் கேரல் ரவுண்ட்ஸும் நடைபெறுகிறது.

## கிறிஸ்து பிறப்பு வாரம்:

கிறிஸ்து பிறப்பு வாரத்தில் நமது விசுவாசிகள் தமது குழந்தைகளுக்குப் புது ஆடைகள் எடுக்கின்றனர். ஆனால் நமது விடுதிகளில் படிக்கிற குழந்தைகளாக இருந்தால் அந்தக் குழந்தைகளுக்கு இவர்கள் புதிய ஆடைகள் எடுப்பதில்லை. ஏனெனில் அவர்களுக்கு நமது விடுதி களிலிருந்து புதிய ஆடைகள் கிடைத்து விடுகின்றன. தேவன் நமது விசுவாசிகளை ஆசீர்வதித்து வருகிறதினால், இந் நாட்களில் பெற்றோர்களும்கூட புதிய ஆடைகள் எடுக்கின்றனர். பின்பு பண்டங் களைத் தாங்களாகவே செய்வது மாத்திர மல்லாமல் சில பண்டங்களைக் கடைகளி லிருந்தும் வாங்குகின்றனர். சில நேரங் களில் புதிய ஆடைகள் கூட வாங்காம லிருப்பார்கள்; ஆனால், பண்டங்கள் செய்யாமலிருப்பதில்லை. இந்த வாரத்தில் நமது எல்லாக் காப்பகங்களிலும் சிறப்பு கிறிஸ்துமஸ் ஆராதனை நடத்தி, அதில் பங்கேற்கும் குழந்தைகளுக்குப் புதிய ஆடைகள் மற்றும் இனிப்புகள் வழங்கு கின்றனர். அவ்வாராதனையில் குழந்தை களின் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடை பெறும். இதில் குழந்தைகளின் பெற்றோர் களும் கலந்து கொண்டு, அன்பின் விருந்தோடு இதை நிறைவடையச் செய்கின்றனர். மற்றும் நான்கைந்து சபைகள் கூடி கிறிஸ்து பிறப்பு ஐக்கிய ஆராதனையை நடத்துகின்றனர். இது முழுப்பகல் நேர நிகழ்வாக ஒருநாள் நடைபெறும். பின்பு பணித்தள அளவில் இந்த வாரத்தில் ஒருநாள் பாரம்பரிய கலாச்சார நிகழ்வு போட்டிகளும் நடத்தப் படுகிறது. இவ்விரண்டிலும் ஒவ்வொரு சபையும் அவரவருடைய சிறப்பு நிகழ்ச்சி களைக் கொடுப்பார்கள். முக்கியமாக அவர் களின் பாரம்பரிய கலாச்சார நடனம் ஆடுவார்கள்; பரிசுகளும் வழங்கப்படும். கடைசியில் அசைவ உணவோடு அன்பின் விருந்து நடைபெறும். இவ்வாறு அவ்வாரம் முழுவதையும் கொண்டாடிச் சிறப்பிக்கின்றனர்.

## டிசம்பர் 25-ம் தேதி:

அதிகமான சபைகளில் முந்தின ஞாயிறு ஆராதனை சமயத்திலேயே சிறப்பு ஆராதனையாக கிறிஸ்துமஸ் ஆராதனை நடைபெறுகிறது. சில சபைகளில் இது அதிகாலை ஆராதனையாக டிசம்பர் 25-ம் தேதியில் நடைபெறுகிறது. இவர்கள் இஸ்ரவேல் மக்களைப் போல உணவையெல்லாம் ஆயத்தப்படுத்தி விட்டு, வீட்டை மொழுகி, குளித்து சுத்தமாக ஆராதனைக்கு வருவார்கள். ஆராதனை முடிந்த பிறகுதான் சாப்பிடுவார்கள். ஆராதனைக்கு வரும்போது எல்லாக்

குடும்பத்தினரும் தமது சிறப்புக் காணிக்கைகளோடுகூட கிறிஸ்துமஸ் வாரத்தில் தாம் செய்த எல்லாப் பண்டங்களிலும் ஒரு பாகத்தைக் கொண்டு வந்து ஆலயத்தில் படைப்பார்கள். இந்தப் பண்டங்களை ஆராதனை முடிந்தபின்பு, எல்லோரும் சமமாகப் பங்கிட்டுச் சாப்பிடுவார்கள். ஆராதனையின்போது பிள்ளைகளின் சிறப்பு நிகழ்ச்சிகளும், வசனம் சொல்லுதலும் நடைபெறும். ஆராதனையில் பங்குப்பெறும் சிறப்பு விருந்தினர்களை, ஊழியர்களை மற்றும் சுதேச ஊழியர்களை உணவு அருந்தாமல் இம்மக்கள் விடுவதேயில்லை. இவ்வாறு குருக் இனமக்கள் கிறிஸ்து பிறப்புப் பண்டிகையை வெகு நேர்த்தியாகக் கொண்டாடுகின்றனர். தேவனுக்கே மகிமை!

**அருள்திரு. R. தாமஸ்,**
சத்தீஸ்கட் பிராந்தியம்.

## திருச்சபைப் பிரதிஷ்டை வைபவம்




மகாராஷ்டிரா மாநிலம், சுர்கானா மாநிலத்திலுள்ள உம்பச்சபாடா என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ள தேவாலயம், கடந்த 2021, அக்டோபர் 15-ம் தேதி தேவநாம மகிமைக்காகப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. சென்னை, பெரம்பூர் விரிவுப்பணிமாவட்டத்தைச் சார்ந்த ஜெபக்குழுத்தலைவர்களும், சுமார் 400 விசுவாசிகளும், சுதேச ஊழியர்களும், மிஷனெரிகளும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்.



## பணித்தள விஜயம்

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுத் தலைவர்கள், ஆதரவாளர்கள் மற்றும் முழுநேர ஊழியர்களாக நாங்கள் 16 பேர் ஓர் குழுவாக அக்டோபர் 2, 3 ஆகிய தேதிகளில் நமது முதல் பணித்தளமாகிய பெரிய மலைக்குச் செல்ல தேவன் கிருபை செய்தார். ஊழியர் அருள்திரு. எஸ். ஜெபராஜ், சுதேச ஊழியர் திரு. சாலமோன் சங்கர் ஆகிய இருவரும் அப்பகுதியில் நடைபெற்ற மற்றும் நடைபெறுகின்ற ஊழியங்களை மிகுந்த பாரத்துடன் உணர்ச்சிப்பூர்வமாகப் பகிர்ந்து கொண்டார்கள். அப்பகிர்வு, 55 வருடங்களுக்கு முன்பாகக் களமிறங்கிய நமது முதல் ஊழியருடைய குடும்பத்தின் மிக உன்னத அர்ப்பணிப்பு மற்றும் அவர்களின் மாபெரும் தியாகத்தை நாங்கள் ஒவ்வொருவரும் உணரும்படியாக அமைந்தது. பின்னர் ஞாயிறு காலை காளிங்காவரம் ஆலய ஆராதனையில் பங்குப்பெற்றோம். பணித்தள விஜயம் மிகவும் முக்கியமானது என்பதை மனதில் உணர்ந்தோம். எனவே இப்பணித்தள விஜயத்தில் கலந்துகொண்ட நாங்கள், இதுபோல மேலும் பல பணித்தளங்களுக்குச் செல்வோம் என்றும், வர இயலாதவர்களிடம் எங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வோம் என்றும் தீர்மானித்தோம். தொடர்ந்து நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தைத் தாங்கவும், ஜெபிக்கவும், தலைவர்களாக, தலைவிகளாகச் செயல்படவும் தீர்மானித்து எங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பினோம். தேவனுக்கே மகிமை!

FMPB – ஊழியர், ஊரப்பாக்கம்.

# காலச் சுவடுகள்

## கிறிஸ்துமஸில் ஓர் அர்ப்பணிப்புப் பாடலின் அழைப்பு!

கிறிஸ்துமஸின் அடிப்படை செய்தியே, 'முழுமையான அர்ப்பணிப்பு' என்பதாகும். 'எந்தன் ஜீவன் இயேசுவே, சொந்தமாக ஆளுமே!' என்ற பாடல் வரிகள், நமது பாலன் இயேசு பிறந்த முன்னணையின் செய்தியைக் குறிப்பிடுகின்றன.


பிரான்சிஸ் ஹேவர்கல்

அது டிசம்பர் 2, 1873, கிறிஸ்து வருகையின் ஞாயிறு (Advent Sunday); அன்றுதான் பிரான்சிஸ் ரிட்லி ஹேவர்கல் என்ற பெண்மணி முதன் முதலில் மெய்யான அர்ப்பணிப்பின் முழுமையான ஆசீர்வாதத்தைத் தன்னில் தெளிவாகக் கண்டார். அதை அவர் தன் சகோதரியிடம், "நான் அந்த மெய்யான அர்ப்பணிப்பை மின்சார ஒளியின் ப்ளாஷ் போலப் பார்த்தேன்; அவ்வொளியை எவராலும் எளிதில் பார்க்க முடியாது. அந்த மெய்யான அர்ப்பணிப்பின் முழு ஆசீர்வாதத்தை நாம் பெற வேண்டுமானால், அதற்கு முன்பு நம்மை நாம் முழுவதுமாக தேவனிடம் அர்ப்பணித்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் தேவன் அந்த மெய்யான அர்ப்பணிப்பின் ஆசீர்வாதத்தை நம்மிலிருந்து பிறரும் பெற்றுக்கொள்ளும்படி வழிநடத்துவார். ஆம்! எனக்குள் அந்த மெய்யான அர்ப்பணிப்பின் புதுப்பித்தல் - நான் ஒரு நற்கருணை ஆராதனையில், "இதோ ஆண்டவரே என் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் உமக்கே அர்ப்பணிக்கிறேன்!" என்று சொல்லி, அதில் கலந்து கொள்வதுபோல இருந்தது" எனப் பகிர்ந்து கொள்கிறார்.

இவ்வாறாக பிரான்சிஸ் ஹேவர்கலிற்குள் நடந்த இந்த முழுமையான அர்ப்பணிப் பிற்குப் பிறகு, அவர் சிலகாலம் கழித்து வொர்செஸ்டர்ஷைரில் உள்ள அரேலி ஹவுஸுக்கு ஒருமுறை விஜயம் செய்த போது, அந்த ஆவிக்குரிய எழுச்சி மீண்டும் அவருக்குள் வந்தது. அதை அவர் தன் சொந்த வார்த்தைகளில் இவ்வாறாக விவரிக்கிறார்– "நான் ஒரு விடுதியில் ஐந்து நாட்கள் தங்கியிருக்கச் சென்றிருந்தேன். அங்கு ஏற்கனவே 10 நபர்கள் இருந்தார்கள். அவர்களில் சிலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள்; மற்றவர்கள் அவரை ஏற்றுக்கொண்டும், அவருக்குத் தங்களை முழுவதுமாக அர்ப்பணிக்காததால், மகிழ்ச்சியற்றுக் காணப்பட்டனர். "ஆண்டவரே, இவர்கள் அனைவரையும் உம்மிடம் வழிநடத்த எனக்கு உதவிசெய்யும்!" என்று ஜெபிக்க நான் உந்தப்பட்டு ஜெபித்தேன். ஆண்டவர் அந்த ஜெபத்திற்கு பலன் அளித்தார். நான் அந்த விடுதியை விட்டு வெளியேறுமுன், அனைவரும் அவ்வர்ப்பணிப்பின் ஆனந்தத்தை அனுபவித்தனர். அதனால் நான் பெரும் மகிழ்ச்சியடைந்து அடுத்தநாள் இரவு தூங்காமல், அந்த இரவை ஜெபத்திலும் தேவனை மகிமைப்படுத்துவதிலும் செலவிட்டு, மேலும் என்னை தேவனிடம் அர்ப்பணித்தேன். அதன் விளைவாக 'எந்தன் ஜீவன் இயேசுவே, சொந்தமாக ஆளுமே!' என்ற வார்த்தைகள் முதல் வரியாக என்னிலிருந்து உருவாகி, அதன் இறுதிவரியான 'என்னையே சமூலமாய் தத்தம் செய்தேன் நித்தமாய்!' என ஓர் பாடலாக வெளிவந்தது."

ஆம், உண்மையிலேயே பிரான்சிஸ் ஹேவர்கலின் பாடல்கள் அனைத்தும் தேவ அர்ப்பணிப்பு நிறைந்த பாடல்களாகும். அவர் அப்பாடல்களை

எழுதிய முறைகளை, “என்னால் ஒருபோதும் நானாகவே இருந்து பாடல் வரிகளை எழுதமுடியாது. தேவன் என்னில் ஒரு கருத்தைத் தோன்றச்செய்து, அதன் ஓரிரு வரிகளை எனது காதில் ஒலிக்கச் செய்வார்; அதை நான் மகிழ்வுடன் ஏற்று நன்றியோடு எழுத ஆரம்பிப்பேன். அதன்பின் அவைகள் எனக்குள்ளிருந்து பாடல்களாய் வெளி வரும். ஆனால் ‘எந்தன் ஜீவன் இயேசுவே, சொந்தமாக ஆளுமே!’ என்ற அர்ப்பணிப்பின் பாடலை நான் எழுதியப் பிறகு, எனக்குள் அமைதி நிலவியது. பல நாட்களுக்கு வேறு பாடல்கள் இயற்ற எனக்குள் எவ்வித தேவதூண்டுதலுமின்றி காணப்பட்டது. தேவன் எனக்கு மீண்டும் அவ்வுணர்வைத் தரும்வரை நான் அமைதியாக காத்தி ருந்தேன். அவர் என்னைத் தூண்டும்போது, அவைகளை வரவேற்கவும் நான் தயாராக இருந்தேன். ஆனால், அத்தூண்டுதலைப் பெற நான் ஒருபோதும் அவருக்கு அதிக அழுத்தம் கொடுத்து முயற்சித்தது இல்லை,” என விவரிக்கிறார்.

இப்பாடல் பிறந்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, அதிலுள்ள ‘எந்தன் ஆஸ்தி தேவரீர் முற்றும் அங்கீகரிப்பீர்!’ என்ற இவ்வரியைக் குறித்து 1878-ம் ஆண்டில் பிரான்சிஸ் ஹேவர்கல் தனது நண்பருக்கு எழுதும்போது, “தேவன் எனது அர்ப்பணிப்பில் ஓரடியை மட்டும் காட்டினார்; அதை நான் மகிழ்ச்சி யான முழுஒப்புக்கொடுத்தலுடன் ஏற்றுக் கொண்டேன். ‘எந்தன் ஆஸ்தி தேவரீர் முற்றும் அங்கீகரிப்பீர்!’ என்ற இவ்வார்த்தைகள், எனக்குரிய அனைத்து வெள்ளி மற்றும் பொன்னினாலான எண்ண முடியாத அனைத்து ஆபரணங்களையும் 50-க்கும் மேற்பட்ட பெட்டகங்களிலிருந்து எடுத்து, அதை ஒரு பெரிய பொதியலாகக் கட்டி, CMS மிஷனெரிப்பணிக்கு மிகவும் மகிழ்வுடன் அனுப்பிவைக்க என்னை வழிநடத்திற்று,” என எழுதுகிறார். ஆ, என்ன அர்ப்பணிப்பு! என்ன ஆசீர்வாதம்!!

மேலும் பிரான்சிஸ் ஹேவர்கல் எங்குச் சென்றாலும், ஆவிக்குரிய அர்ப்பணிப் பிற்கான ஆராதனைகளை தேவநாம மகிமைக்காக நடத்தி வந்தார். “சிலசமயங் களில் தன்னார்வ ஊழியர்கள் இப்படிப்பட்ட அர்ப்பணிப்பின் ஆராதனைகளை நடத்தும் போது, அதன் முடிவில் அக்கூடுகையில் கலந்துகொள்ளும் ஒவ்வொருவருக்கும், இப்பாடல் அச்சிடப்பட்ட அட்டையைக் கொடுத்து, அதை வீட்டிற்கு எடுத்துச்சென்று, முழங்காலில் நின்று அப்பாடலைப் பாடி, அதைத் தங்களுக்குச் சொந்தமாக்கி அதில் கையெழுத்திட ஊக்கப்படுத்தினர்,” என இக்கூடுகையின் நிகழ்வுகளை அவர் பகிர்ந்து கொள்கிறார். ஆம், அவர் தன் வாழ்நாளில் அனைத்து கிறிஸ்தவர்களிடமும் அப்பேர்பட்ட அர்ப்பணிப்பு உருவாக மிகவும் வாஞ்சித்தார். அதன் விளைவாக பலர் கிறிஸ்துவிடம் திரும்புவதற்கும், அவரைப்போன்று ஆழமான அர்ப்பணிப்புடன் செயல்படுவ தற்கும் முன்வந்தனர்.

உண்மையிலேயே, உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்களை முழுமையான அர்ப் பணிப்பிற்குத் தொடர்ந்து ஊக்குவிக்கும் பிரான்சிஸ் ஹேவர்கலின் இப்பாடலைக் காட்டிலும், சிறப்பான பாடலைக் காண்பது இன்றும் மிக அரிதாகவே காணப்படுகிறது. ஆம்! அவருடைய ஆவியும், ஆத்து மாவும் தேவனுக்கு மட்டுமே அர்ப்பணிக்கப் பட்டிருந்தது. அவருடைய ஆவி, ஆத்துமா, சரீரம் அனைத்தும் பரிசுத்தமாக்கப்பட்டு, அவர் ஆவியானவருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து அவருடைய அனைத்தையும் தேவராஜ்ய கட்டுமானத்திற்காக முதலீடு செய்ய இப்பாடல் அவரை வழிநடத்தியதோடு, பிறரையும் அப்பேர்பட்ட அர்ப்பணிப்பிற்கு இன்றும் வழிநடத்தி வருகிறது. இவ்வருட கிறிஸ்து பிறப்புப் பண்டிகையைக் கொண்டாட இருக்கிற நாமும், இப்படிப்பட்ட முழுமை யான அர்ப்பணிப்பின் செயலைச் செய்து, இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவினுடைய பிறப்பின் மெய்யான சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்று அனுபவிப் போமாக!

*– சகோ. டேவிட் பென்னி*

# தேவாலயப் பிரதிஷ்டையும், பணித்தள விஜயமும்






தேவனுடைய பெரிதான கிருபையினால் சென்னை, சாந்தோம் பிராந்தியம் சார்பாக ஒடிசா மாநிலத்திலுள்ள பல்லிசாகி என்ற கிராமத்தில் கட்டப்பட்டுள்ள புதிய ஆலயத்திறப்பு விழாவில் கலந்துகொள்ள நாங்கள் 6 பேர் அடங்கிய குழுவாக 21.10.2021 அன்று புறப்பட்டுச் சென்று, ஒடிசா மாநிலத்தின் பங்குருசுனி கிராமத்திலுள்ள ஆலய ஆராதனையில் கலந்துகொண்டோம். சுமார் 250 விசுவாசிகள் மிகுந்த மகிழ்ச்சியோடு எங்களை வரவேற்றார்கள். 3 மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற துதி ஆராதனையில் நாங்களும் பாடல்களைப்பாடி, சாட்சிகளைப் பகர்ந்துகொண்டு, தேவச்செய்தி வழங்க தேவன் கிருபை செய்தார். ஜெபவேளையின்போது, பிசாசினால் அலைக்கழிக்கப்பட்ட வாலிபனொருவன் தரையில் புரண்டு விடுதலை பெற்றது, தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தியது. அதுமாத்திரமல்ல, பலவித வியாதிப்பட்டோர் மற்றும் பிசாசின் பிடியில் அகப்பட்டோர் அந்த ஆலயத்திற்குக் கொண்டுவரப்பட்டு, சில நாட்கள் தங்கி ஜெபித்து சுகம் பெற்றுச்செல்வதைக் கேள்விப்பட்டபோது, பெதஸ்தாவின் நினைவு எங்களை ஆட்கொண்டது.

23.10.2021 அன்று பம்பாரியா கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனையில் கலந்துகொண்டோம். 30 வயதே நிரம்பிய ஒரு புதிய விசுவாசி, 50 வயது தோற்றமுடையவராய் 8 மாத கர்ப்பிணி போல ஜெபிக்க வந்திருந்தார்கள். என்ன என்று விசாரித்தபோது, வயிற்றில் கட்டி மருத்துவமனைக்குச் செல்ல வசதி இல்லை என்றும், ஆண்டவர் ஒரு அற்புதம் செய்வார் என்றும் நம்பிக்கையுடன் தெரிவித்தார்கள். பாரத்தோடு ஜெபித்துவிட்டு வந்தோம். பின்பு 24.10.2021 அன்று பல்லிசாகி கிராமத்தில் கட்டப்பட்ட புதிய ஆலயம் தேவனுடைய நாம மகிமைக்காகப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதில் 450-க்கும் மேற்பட்ட விசுவாசிகள் கலந்து கொண்டு, ஆடிப்பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். சாட்சிகளும் பகரப்பட்டது. ஆலயக்கட்டுமானப்பணியில் மிகவும் அர்ப்பணிப்போடு செயலாற்றிய மிஷனெரி சகோ. பிரத்தியூஷ் நாயக் மற்றும் உட்கல் பிராந்தியச் செயலர் அருள்திரு. குணா சந்திர பாய்க் அவர்களுக்கும், அங்குள்ள விசுவாசிகளுக்கும் நன்றி தெரிவிக்கிறோம். பின்பு 25.10.2021 அன்று படடெப்தா என்ற எளிய கிராமத்திற்குச் சென்றோம். அங்கு ஆலயம் ஏதுமில்லை. 40 விசுவாசிகளோடு ஆண்டவரை ஆராதித்து விட்டுச் சென்னைக்குத் திரும்பினோம். தேவனுக்கே மகிமை!

சாந்தோம் பிராந்தியம், சென்னை.

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



## திருமதி. லிடியா ஜூலியட் அகஸ்டஸ்

(09.04.1972 - 16.11.2021)

நமது மிஷனெரி திருமதி. லிடியா ஜூலியட் அகஸ்டஸ் அவர்கள் (வயது-49), திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் 2021, நவம்பர் 16-ம் தேதி அதிகாலை 2 மணியளவில் தேவ ராஜ்யத் திற்குள் பிரவேசித்தார்கள். இவர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மேற்கு மண்டல விரிவுப்பணி செயலாளரான அருள்திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ் அவர்களின் அன்பு மனைவியாவார்.

சகோதரி. லிடியா ஜூலியட் அவர்கள், 1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ம் தேதி, கிறிஸ்தவப் பெற்றோர்களான திரு. ஞானமணி & திருமதி. ஜானகி அவர்களின் மகளாக ஈரோடு மாவட்டத் திலுள்ள எல்லீஸ்பெட்டில் பிறந்தார். இவருக்கு ஒரு மூத்த சகோதரரும், மூன்று இளைய சகோதரி களும் உண்டு. இவர் தனது இளம்பிராயத்தி லேயே தனது தகப்பனாரை இழந்ததால், தாயின் பராமரிப்பில் கர்த்தருக்குப் பிரியமான முறையில் வளர்க்கப்பட்டார். இவர் கோயம்புத்தூரில் CSI தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் படித்துக்கொண்டிருக்கும்போது, இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். பின்னர் நமது ஜெபக்குழுக்களில் இணைந்து ஜெபிக்கலானார். அப்போது இவருக்கு மிஷனெரிப்பணியின் மீது அதிக தாகம் ஏற்பட்டது. எனவே, இவர் 18.05.1995-ல் முழுநேர ஊழியராக நமது இயக்கத்தில் வந்து இணைந்தார். பின்பு சகோதரி. லிடியா ஜூலியட்டிற்கு, 1992-ம் ஆண்டு நமது இயக்கத்தில் சேர்ந்து ஜார்க்கண்ட் மாநில மால்தோ மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்த அருள்திரு. அகஸ்டஸ் புஷ்பராஜுடன் 15.02.1996 அன்று ஈரோட்டிலுள்ள CSI பிரப் நினைவாலயத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது. பின்னர் இவர்கள் இருவருமாக 10 ஆண்டுகளுக்கு மேலாக ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள மால்தோ மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்தார்கள். அதன்பின் 2005-ம் ஆண்டில் தேவன் இவர்களுக்கு சாமுவேல் ஜோனத்தான் என்ற மகனைத் தந்து ஆசீர்வதித்தார். பின்பு 2008-ம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் விரிவுப்பணி ஊழியத்தில் பணி செய்து வந்தார்கள்.

திருமதி. லிடியா அகஸ்டஸ் அவர்கள், பெண்களி டையே ஜெபக்குழுக்களை நிறுவிப் பெண்களை மிஷனெரிப்பணிகளுக்காக ஜெபிக்கவும், செயல்படவும் மிகச் சிறப்பாக ஊக்குவித்து வந்தார்கள். இவர் கடந்த 2021, நவம்பர் 13-ம் தேதி மேற்கு மண்டலத்தின் சார்பாக நடந்த ஊழியத் திட்டமிடல் கூடுகையின்போது, பெண்கள் மத்தியில் ஊழிய வளர்ச்சிக்கான தனது தரிசனங்களையும் யுக்திகளையும் சிறப்பாகப் பகிர்ந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

2021, நவம்பர் 15-ம் தேதியில் திருமதி. லிடியா அகஸ்டஸிற்கு சற்று மூச்சுத்திணறல் ஏற்பட்ட தால், இவர் மருத்துவமனையில் சிகிட்சைக்காகச் சேர்க்கப்பட்டார். ஆனால் சிகிட்சை பலனளிக் காமல், நவம்பர் 16-ம் தேதி அதிகாலை 2 மணிக்கு இவர் இவ்வுலக ஓட்டத்தை முடித்தார். அவருடைய அடக்க ஆராதனை நவம்பர் 16-ம் தேதி மாலை 4 மணிக்கு நடைபெற்று, அவருடைய சரீரம் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஆம்! திருமதி. லிடியா அகஸ்டஸ் அவர்கள், தேவ னுக்காக 'தன்னால் இயன்றதைச் செய்தார்கள்' (மாற்கு 14:8). இயக்கமாக திருமதி. லிடியா ஜூலியட் அகஸ்டஸ் அவர்களின் அழகிய அர்ப்பணிப்புள்ள வாழ்விற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். அவரது பிரிவால் வாடும் அவருடைய கணவர் அருள்திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ் அவர்களையும், 11-ம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் அவர்களது ஒரே மகன் சாமுவேல் ஜோனத்தானையும் தேவன்தாமே ஆறுதல்படுத்தி, பெலப்படுத்த நமது ஜெபங்களில் அவர்களைத் தாங்கிக்கொள்வோம்.



# காத்திருப்பதின் பலன்!

தமிழ்நாட்டிலுள்ள பெரியமலை – தேன்கனிக்கோட்டை பணித்தள நமது விசுவாசி அஷ்வினி ஓர் கிறிஸ்தவ குடும்பத்தைச் சார்ந்தவராய் இருந்தாலும், கிறிஸ்துவை அறியாத இராஜேந்திரன் என்பவரைத் திருமணம் செய்திருந்தார். திருமணத்தின்போது, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதாகக் கூறிய கணவர், காலப்போக்கில் கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டுவிட்டதோடு, அவரது மனைவியையும் கிறிஸ்துவை மறுதலிக்க வற்புறுத்தினார். ஆனால், அஷ்வினி அதற்கு ஒப்புக்கொள்ளாமல், தனது கணவரின் இரட்சிப்புக்காக தேவனிடம் இடைவிடாது ஜெபித்து வந்தார். தேவன் அவருக்குத் தமது வாக்குத்தத்தத்தைக் கொடுத்து பெலப்படுத்தியதின் பொருட்டு, அவரும் தொடர்ந்து தனது கணவரின் இரட்சிப்புக்காக அன்றாடம் கண்ணீருடன் தேவனிடம் மன்றாடி வந்தார். ஆண்டுகள் கடந்தோட, அஷ்வினியின் தாய் “இனி உன் கணவர் இரட்சிக்கப்படமாட்டார்” என்று கூறிய வார்த்தைகள், அஷ்வினியின் விசுவாசத்தைச் சற்றும் குறைக்கவில்லை.

இதற்கிடையில், அஷ்வினியின் கணவர் அசுத்த ஆவியின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்த வேளையில், அஷ்வினி ஜெபித்த ஜெபம் அவருக்கு விடுதலையைக் கொடுத்ததோடு, படிப்படியாக அவர் கிறிஸ்துவின்மேல் விசுவாசத்தை வைக்கவும் வழிநடத்திற்று. திடீரென்று ஒரு லாரி விபத்தில் படுகாயமடைந்த அவர், அற்புதமாகச் சுகம் பெற்றார். ஆயினும், அவர் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கிடையில் அஷ்வினியின் தகப்பனாருக்கு ஒரு விபத்தினால் கல்லீரல் பாதிப்படைந்து, இனி அவர் பிழைக்க மாட்டார் என்று மருத்துவர்கள் கூறிய நிலையில், அவசர சிகிட்சைப்பிரிவு பகுதிக்கு வெளியில் நின்று அஷ்வினி நான்கு நாட்களாக ஜெபித்த ஜெபத்தின் விளைவாக, அவருடைய தகப்பனார் மீண்டும் உயிர் பிழைத்தார். அந்த அற்புதத்தைக் கண்ட அஷ்வினியின் கணவர், கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு திருச்சபையில் இணைந்தார்.

என்ன ஆச்சரியம்! தொடர்ந்து 13 ஆண்டுகள் தனது கணவரின் இரட்சிப்புக்காக அஷ்வினி செய்த கண்ணீரின் ஜெபத்திற்கு தேவன் பலனளித்தது, இளம் விசுவாசியான இப்பெண்ணின் அசைக்க முடியாத விசுவாசத்தை நமக்கு எடுத்துக் காட்டுகிறதன்றோ!

# மகிமைக்குள் பிரவேசித்தார்



சகோ. தனபால்சிங் அவர்கள் (வயது–73), மதுரை – திருமங்கலத்தை மையமாக வைத்து கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக ஜெபக்குழு தலைவராகவும், பின்னர் கௌரவ விரிவுப்பணி செயலாளராகவும் செயல்பட்டு வந்தார்கள். கிரமமாக ஜெபக்குழு நடத்துவதிலும், காணிக்கை சேகரித்து அனுப்புவதிலும் இவர் பெரும்பங்கு வகித்து வந்தார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தை அதிகமாக நேசித்த இவர், அநேகருக்கு இவ்வூழியத்தை அறிமுகம் செய்து வைத்தார். இவரது உற்சாகமான தொனியும், ஊழிய ஈடுபாடும் அநேகர் நமது ஊழியத்தில் தோள்கொடுக்க வழிநடத்திற்று. கடந்த 10.11.2021 அன்று இவர் இவ்வுலக ஓட்டத்தை இனிதே முடித்து, நித்திய மகிமைக்குள் பிரவேசித்தார். இவரைப் பிரிந்து வாடும் மகள்கள் மற்றும் குடும்பத்தாரை நமது ஜெபங்களில் தாங்கிக்கொள்வோம்.

1 டிசம்பர்
புதன்

உபவாச
ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நிஷா மாங்வெய் ஃபோம்

# ஜம்மு

## ஆர். எஸ். புரா & அக்னூர்:

### டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** புதிதாக இரு நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்துள்ளனர். 3 கிராமங்களில் முதன்முறையாக இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆக்ரா சாக் கிராமத்திலிருந்து இரு குடும்பத்தினர் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கின்றனர். சாக் தலாப் பகுதியைச் சேர்ந்த ராகேஷை குடிப்பழக்கத்திலிருந்தும், சின்னூர் பகுதியைச் சேர்ந்த அனுராதாவைத் தீய ஆவியின் பிடியிலிருந்தும் தேவன் விடுவித்துள்ளார். கோட் பகுதி நமது விசுவாசி ரெபேக்காவிற்கு தகுந்த வேலையொன்று கிடைத்துள்ளது. ஒருமாத காலமாய்க் காணாமல் போயிருந்த படியல் கிராம இத்வாரி ஜெபத்தின் மூலம் மீண்டும் தனது வீட்டிற்குத் திரும்ப கர்த்தர் உதவி செய்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தில் கர்த்தரை ஆராதிக்க ஓர் நல்ல இடம் கிடைக்க; ஆக்ரா சாக் பகுதியைச் சேர்ந்த சபிலாலா கோவிட்-19னின் பாதிப்பிலிருந்தும், படியல் பகுதியைச் சேர்ந்த விக்கி சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும், சாக்ராய் பகுதியைச் சேர்ந்த சுனிதா மனநோய்ப் பிரச்சனையிலிருந்தும் பூரண குணமடைய; கோட் பகுதி நமது விசுவாசி ஹீனாவின் திருமணத்தேவைகள் யாவும் கர்த்தரால் சந்திக்கப்பட; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருப்போர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

## போராட்டம், விசுவாசிக்கு ஓர் ஆர்ப்பாட்டம்!

*மத்தியப் பிரதேசம், நேப்பா நகர் பணித்தளம். தனது குடும்பத்தில் தன்னந்தனியே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசத்தில் மிக உறுதியாக இருப்பவர், நமது விசுவாசி ஷோபாராம். கடந்த 8 மாதங்களாக இவர் சந்திக்கும் போராட்டங்களுக்கு அளவே இல்லை எனலாம். இவருடைய சரீரத்தில் அதிகமான பெலவீனம். மருத்துவப் பரிசோதனைக்குப்பின் இவருக்கு எலும்பில் காசநோய் இருப்பதாக மருத்துவர் கூறிவிட்டார். பின்பு அதற்கென மருந்துகள் சாப்பிடத் தொடங்கியபோது, இவருக்கு எந்த வாசனை வீசினாலும் ஒருவிதமான குமட்டல் உண்டாகி வாந்தி எடுக்க ஆரம்பித்தார். ஒருகட்டத்தில், இவரால் தனது சரீர வேர்வையின் வாசனையைக் கூட சகிக்க முடியாமல் தன் எல்லை மீறி வாந்தியெடுக்கத் தொடங்கினார். எனவே, இவரால் எந்த உணவையும் உட்கொள்ள முடியாதபடி மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். இது போதாதென்று அடுத்தடுத்து இவருக்குப் போராட்டங்கள் வந்து கொண்டேயிருந்தது. இதன் மத்தியில் திடீரென ஒருநாள் இவரது இளைய மகனை வெறிநாய் ஒன்று கடித்துவிட்டது. அதன்பின் இவருடைய காளைமாட்டிற்கு கழுத்திலும் காலிலும் வீக்கம் ஏற்பட்டது. பின்பு 3 முறை இவரது வீட்டிற்குள் ஒரு பெரிய பாம்பு வந்தது. எனவே, இவரது குடும்பத்தினர் அதிக அச்சத்திற்குள்ளாயினர். இதற்கிடையில் இவர் தனது கனவில், பிசாசானவன் தனக்கு அதிக இன்னல்களைத் தந்து தன்னை விரைவில் கொன்று விடப்போவதாக மிரட்டுவது போல் கண்டார். எனினும், இவர் தனது விசுவாசத்தை விட்டுக்கொடுக்கவே இல்லை. தேவவார்த்தை மற்றும் ஜெபத்தின் மூலம் அநுதினமும் கர்த்தரால் ஆற்றித்தேற்றப்பட்டார். இவர் ஒவ்வொரு முறை ஜெபிக்கும்போதும், விரைவில் அனைத்துப் போராட்டங்களுக்கும் கர்த்தர் நல்ல முடிவு தருவார் என்று ஆழமாகத் தனது மனதில் விசுவாசித்தார். அந்த விசுவாசத்தைக் கர்த்தர் கனப்படுத்தி, ஷோபாராமை முழுவதுமாகச் சுகப்படுத்தினார். இதைக் கண்ட இவரது குடும்பம் முழுவதும் இயேசுவை ஏற்றுக்கொண்டனர். போராட்டங்கள் தீர்ந்து இப்போது இவர் தன் குடும்பத்தாருடன் கர்த்தரை மிகுந்த ஆர்ப்பரிப்போடே ஆராதிக்கின்றார்! அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண்சன் ராஜதுரை
திருமதி. புஸாரே ஷைலா சிந்தாமன்
செல்வி. அனாமிகா பெகு

# ஹிமாச்சலப் பிரதேசம்

## ஹிமாச்சல் பிராந்திய அலுவலகம்:

### த்சாங்சே சங்தம் & சுச்சானோ

**துதிக்க:** நமது ஜீப்குழு ஊழியர்களின் வாகனத்திற்கு நல்ல ஓட்டுனர் கிடைக்கவும், அநேக கிராமங்களை ஜீப்குழு ஊழியம் மூலம் சந்திக்கவும் தேவன் அநுக்கிரகம் பாராட்டியுள்ளார். தகுந்த காலச்சூழ்நிலை அமையாதபோதும் இங்குள்ள ஆப்பிள் தோட்டங்களில் நமது விசுவாசிகளுக்கு தேவன் நல்ல அறுவடையை ஈந்துள்ளார். இயேசுவை ஏற்றுக் கொண்டதினால் தன் குடும்பத்தாரால் வெறுத்து ஒதுக்கப்பட்டிருந்த நமது புதிய விசுவாசி ராம் கிருஷ்ணனை மீண்டும் அவரது குடும்பத்தினர் ஏற்றுக்கொண்டுள்ளனர். சஞ்ஜய், பிங்கு, ரிங்கு, பகத்ராம், கமலா, கல்பனா ஆகியோர் நமது ஊழியத்தில் புதிதாகத் தொடர்பு கொண்டுள்ளனர். ராம்பூர் பணித்தள காஷாபட் திருச்சபையினருக்கு ஓர் ஆலயம் கட்ட பிரகாஷ் சாந்த் குடும்பத்தினர் ஒரு சிறிய நிலத்தை நன்கொடையாகக் கொடுத்துள்ளனர். தானேதார் பணித்தள ஜாலோக், ஜமோலி ஆகிய கிராமங்களில் சிறிய வேதாகம வகுப்புக்குழுக்கள் உருவாக்க கர்த்தர் உதவி செய்துள்ளார். மனு மற்றும் பூஜாவைப் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்து கர்த்தர் விடுவித்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநோய்ப் பிரச்சனைக்குட் பட்டிருக்கும் நமது புதிய தொடர்பாளர் பபிதாவிற்கு முழுசுகம் கிடைக்க; சமீபத்தில் தனது கணவரை இழந்து ஆறுதலற்று தவிக்கும் பிரேம்தேவியின் மனஆறுதலுக் காக; நிலப்பிரச்சனையினால் எதிர்ப்பைச் சந்திக்கும் நமது சுதேச ஊழியர் வீரேந்திர னின் குடும்பப் பாதுகாப்பிற்காகவும், அந் நிலப்பிரச்சனை சுமூகமாகத் தீர்க்கப்படவும்; குடிப்பழக்கத்திலிருக்கும் ரிங்கு மனந்திரும் பவும், அப்பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும்; சுரேந்தரின் குடும்பத்தில் சமாதானம் நிலவ; பகத்ராமை அவரது இடுப்புப்பகுதி யில் பாதித்திருக்கும் புற்றுநோயிலிருந்தும், சஞ்ஜய் மற்றும் ராம்தேவைப் பொல்லாத ஆவிகளின் பிடிகளிலிருந்தும் தேவன் காப்பாற்றி இரட்சிக்க ஜெபிப்போம்.

## *கடினமானது கனிவானது!*

*ஹிமாச்சலப் பிரதேசம், ராம்பூர் பணித்தளம். எதிர்பாராதவிதமாக 3 சுயேட்சை போதகர்கள் தாங்கள் செய்து வரும் சுவிசேஷப்பணியினி மித்தம் மதத்தீவிரவாதிகளினால் பொய்க் குற்றஞ்சாட்டப்பட்டு, ராம்பூர் காவல்நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டனர். ஏனெனில் அம்மூவரில் ஒருவர் வேறொரு காரணத்திற்காகத் தனது கைப்பெட்டியில் ரூ.40,000/- வைத்திருந்தார். அதைப் பார்த்த மக்கள், அவர்கள் பணம் கொடுத்துதான் ஆட்களைக் கட்டாய மதமாற்றம் செய்கிறார்கள் என தவறாகப் புரிந்துகொண்டு, அத்தகவலைப் பிற மக்கள் மத்தியில் இணையதள பகிர்வுகளின் மூலம் வதந்தியாகப் பரப்பினர். இது ஒட்டுமொத்தமாக நமது ஊழியங்களையும் வெகுவாகப் பாதிக்கத்தொடங்கியது. சபைக்கு மக்கள் வருவது அதிகளவு குறைந்தது. அநேக விசுவாசிகளும் சுவிசேஷத்தைத் தங்களது உற்றார் உறவினர் நண்பர்களுக்குச் சொல்வதை நிறுத்தினர். ஆயினும் கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும் மகா இரக்கத்தினாலும் தற்போது ராம்பூர் பகுதியின் நிலைமை சற்று மாறி வருகிறது. கடந்த மாதம் முழுவதும் நமது ஊழியர்கள் தங்களுக்கு அருகில் வசிக்கும் விசுவாசிகளை நேரில் சந்தித்து, அவர்களை உற்சாகப்படுத்தியும், ஊக்கப்படுத்தியும் வர கர்த்தர்தாமே நற்பாதுகாப்பு அருளினார். கடினமான சூழ்நிலையைக் கனிவானதாக மாற்றுகிற தேவனுக்கே கோடாக் கோடி ஸ்தோத்திரங்கள்! அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பியூலா பிரைட்

# பஞ்சாப்

## புத்லாடா:

### சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா

**துதிக்க:** புதிதாக 13 நபர்கள் கிறிஸ்துவை அறியும் அறிவிற்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. பின் மாற்றமடைந்திருந்த நமது விசுவாசிகளான வீர் மற்றும் செம்மா மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். தோஹனா பகுதி சதீஷை கொடிய காய்ச்சலிலிருந்தும், தல்வாடி கிராம ஜெய்சிங்கின் மகனை நெஞ்சுசளிப் பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகமாக்கியுள்ளார். நமது விசுவாசி மம்தா கௌரின் குடும்பத்தினர் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். ஜெபத்தின் மூலம் கரம்ஜித் மற்றும் தேசா சிங் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுதலை பெற்றுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அசோக், தோஹனா பகுதி சதீஷ் ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; மூணாக் மற்றும் தல்வாடி துணைமையங்களில் சுதேச ஊழியர்கள் பணியமர்த்தப்பட; பவானிகார் திருச்சபைக்கு விரோதமாக நிலுவையில் இருக்கும் நீதிமன்ற வழக்கு விரைவில் நல்தீர்வுக்கு வர; டெங்கு காய்ச்சலினால் அவதியுறும் நமது சுதேச ஊழியரும், நமது அநேக விசுவாசிகளும் பூரண குணமடைய ஜெபிப்போம்.

## பகாபூரானா: ராஜேந்திரன் & ஹேனா மேரி ஸ்லெஸ்ஸர்

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். பாரு, திராஜ், பாஞ்கெரெய்ன் ஆகிய 3 கிராமங்களிலும் முதன்முறையாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பாரு கிராம சுக்பிரீத் கௌரின் குடும்பத்தில் தேவ சமாதானம் நிலவுகிறது. கிரண்தீப் குடும்பத்தை தேவன் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதித்துள்ளார். மகாந்த்வாலா காளி பகுதி பல்ஜிந்தர் சிங் மற்றும் மதிரான் பகுதி பல்தேவ் சிங்கின் விசுவாசத்தைக் கர்த்தர் கனம்பண்ணி, அவர்களைப் பக்கவாதத்திலிருந்து சுகப்படுத்தியுள்ளார். பின்மாற்றமடைந்திருந்த நமது விசுவாசி பூஜா கௌரை மீண்டும் விசுவாசத்திற்குள் தேவன் கொண்டு வந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கேட்டிருக்கும் பாஞ்கெரெய்ன் கிராம மக்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்களது இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சமத்பாய், புத்சிங்வாலா, மர்ரி, தெற்கு புத்சிங்வாலா, நதுவாலா ஆகிய கிராமங்களில் திருச்சபைகள் தொடங்கப்பட; முக்லுபட்டி கிராமத்தில் பின் மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; ஒரேயொரு குடும்பம் மட்டும் இயேசுவை ஏற்றுக்கொண்டிருக்கும் ராமுவாலா கிராமத்து பிற மக்கள் அனைவரின் இரட்சிப்பிற்காக; பல்ஜிந்தர் சிங், ஜஸ்விந்தர் சிங், குர்பிரீத், வினோத் குமார், பர்தன், ராஜு, பல்விந்தர் குமார் ஆகிய நமது புதிய தொடர்பாளர்கள் குடிப்பழக்கத்திலிருந்து முழுமையாக வெளிவர; ஆராதனையில் கலந்து கொள்ளவிடாமல் தனது மனைவியைத் தடுக்கும் இக்பால் சிங் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; கணவரால் கைவிடப்பட்டு 3 குழந்தைகளோடு தவிக்கும் நதுவாலா கிராம ராஜ்தீப் கௌரின் குடும்பத்தில் சமாதானம் பிறக்க ஜெபிப்போம்.




# ஹரியானா

## ஜீவன் நகர்:

### அலியாக்கீம் ஜெனா & தீபிகா

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நடந்த விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியம் மூலமாக 30 சிறுபிள்ளைகள் வேதவசனங்களை முறையாகக் கற்றுக் கொண்டுள்ளனர். ஓட் சமுதாயத்தினரான பிரேம் நகரைச் சார்ந்த ரஞ்சித், பிங்கி மற்றும் ராஜ்புட் இன மக்கள் யாவரும் சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டுகின்றனர். வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகளின் வாயிலாக நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வு கிரமமாக வளர்ந்து வருகின்றது. ஜெபத்தின் வாயிலாக அபுப் சாகர் பகுதி நானி குடிப்பழக்கத்திலிருந்து விடுபட கர்த்தர் உதவி செய்துள்ளார். சாந்த் நகர் பகுதியைச் சேர்ந்த நமது சுதேச ஊழியர் ராஜேந்தர் சிங்கின் மாமனார் குல்வந்த் சிங்கிற்கு டெங்கு காய்ச்சலிலிருந்து நல்ல சுகம் கிடைத்துள்ளது. குந்தி தபாவாலி பகுதி சுக்விந்தர் கௌர் பிசாசின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். கபிர் பஸ்தி தபாவாலி பகுதி சந்தீப்பின் குடும்பத்தில் தேவன் மழலை பாக்கியத்தைக் கட்டளையிட்டுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகள் நற்சாட்சியுள்ள வாழ்வு வாழவும், தங்களுக்கு அருகாமையில் வசிப்போருக்குக் கர்த்தரின் வார்த்தைகளை எடுத்துச் சொல்லவும்; ஜெபக்குழுக்கள், வேதாகம வகுப்புக் குழுக்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான ஊழிய நிகழ்ச்சிகள் யாவும் தொடர்ந்து நடைபெற; அலிக்கா கிராம பல்வீரை மனக்கோளாறிலிருந்தும், எல்லினாபாத் கிராம கிருஷ்ணனை டெங்கு காய்ச்சலிலிருந்தும் தேவன் குணமாக்க ஜெபிப்போம்.

## கலான்வாலி:

### விஜயகுமார் & ஜெபலா

**துதிக்க:** முதன்முறையாக 4 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. சில மாதங்களாக ஆலயத்திற்கு வருவதை நிறுத்தியிருந்த மோதிராம் மீண்டும் ஆலயம் வரத் தொடங்கியுள்ளார். மத்தியப் பிரதேசத்திலிருந்து புலம் பெயர்ந்து வந்துள்ளோர் நமது ஆசீர் கிராம ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். சரண்ஜித் குடும்பம் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகள் தங்களது பிள்ளைகளுக்குச் சரியான வாழ்க்கை துணைகளைக் கண்டெடுப்பதிலும், அவர்களைச் சபை ஆராதனையில் பங்கெடுக்க வைப்பதற்கு ஊக்குவிப்பதிலும் சிறந்து விளங்க; வாய்ப்பேச இயலாமலும் காது கேளாமலும் இருக்கும் 5 வயது சிறுவனான ராஜிற்கு தேவன் அற்புத சுகம் தர; தனது மனைவி மற்றும் இரு சிறுபெண்பிள்ளைகளைத் தவிக்க விட்டுவிட்டு ஓடிப் போய்விட்ட சப்னம் மனந்திரும்பி மீண்டும் தன் குடும்பத்தினருடன் வந்துச்சேர; ஓதான் துணைமையத்திலுள்ள நமது சுதேச ஊழியர் மங்கல் சிங்கின் சரீர மற்றும் ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.




**தோஷம்:**

**ஜாண் டேவிட்சன் செல்வராஜ்**

**துதிக்க:** புதிதாக 5 நபர்கள் கிறிஸ்து வண்டை வந்துள்ளனர். புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. அலாக்புரா கிராமத்திலிருந்து அநேகர் நமது ஊழியத்தொடர்பிற்குள் வருகின்றனர். கமலாவைப் பலவித சுகவீனங்களிலிருந்தும், ரோஷனைச் சரீரக்கட்டியிலிருந்தும் தேவன் குண மாக்கியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்கப்போகும் வெளிப்புற சந்திப்பு ஊழியம் மற்றும் இதர நமது ஊழிய நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்துத் தர; பாலா, மனிஷா கௌர், சுமித்ரா, லட்சுமி ஆகியோரின் குடும்பங்களில் மழலை பாக்கியங்கள் கர்த்தரால் அருளப்பட; போஜ்ராஜ் கிராம ரோஹித், அஞ்சலியை உடல் ஊனப்பிரச்சனைகளிலிருந்தும், பிரேமாவை வயிற்றுக்கட்டியிலிருந்தும் தேவன் சுகமடையச் செய்ய ஜெபிப்போம்.

## உத்தராகண்ட்

**தினேஷ்பூர்: ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்**

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் இயேசுவை விசுவாசத்துடன் நோக்கிப் பார்க்க ஆரம்பித்துள்ளனர். புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. நமது ஊழியர்கள் நடத்திய விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சியில் பங்கேற்ற தீனாவும் அவளது சகோதரனும் கிறிஸ்து வின் மேல் நம்பிக்கை வைத்ததினால் தங்களது தாயார் வலிப்புநோயிலிருந்து சுகம் பெற்றதாகச் சாட்சி கூறியுள்ளனர். திம்ரி பிளாக் பகுதி பிரேமை தேவன் மாரடைப்பிலிருந்து காப்பாற்றி மறுபடியும் அவருக்கென பிழைத்திருக்க ஜீவன் கொடுத்துள்ளார். தெஜோ பூஜா கிராம நமது விசுவாசி ஜஷ்வந்த் சிங்கை தேவன் பெரிய விபத்தினின்று காப்பாற்றியுள்ளார். மச்சஹாட் கிராம ஜஷ்வந்தர்கௌரின் குடும்பத்தில் சமாதானம் நிலவிவருகிறது. பர்வாலா கிராம சூச்சாவைப் போதைப் பொருட்களின் அடிமைத்தனத்திலிருந்து கர்த்தர் மீட்டுள்ளார். திலியா கிராம சுந்தரியையும் முகத்பூர்திரா கிராம ஹர்தீப்பையும் தேவன் பிசாசுகளின் பிடிகளிலிருந்து விலக்கிக் காத்து இரட்சித் துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சரீர பெலவீனம் மற்றும் பண நெருக்கடியால் அவதிப்படும் திம்ரி பிளாக் பகுதி விசுவாசி ராஜேஷின் குடும்பத்தைக் கர்த்தர் சுகமாக்கவும், அவர்களது பணத்தேவையைச் சந்திக்கவும்; தெஜோ பூஜா கிராமத்திலிருக்கும் சுனிதா கௌருக்கு நல்ல சுகப்பிரசவம் நேரிட; நய்பஸ்தி கிராம ஜஷ்வந்த் கௌர் மனந்திரும்ப; சமீபத்தில் தனது குடும்ப நபர்களில் 5 பேரை இழந்துத் தவிக்கும் சய்திலிகன்ஜ் கிராம சாஹிப் திட்டாவின் மனஆறுதலுக்காக; நடந்து முடிந்த பெரிய விபத்தினிமித்தம் தோள்பட்டை எலும்பு முறிந்து காணப்படும் திலியா கிராம பூனம் முற்றிலும் சுகம் பெறவும், தெஜோ பூஜா கிராம கிரண் கௌரைப் பக்கவாதத்தி லிருந்து தேவன் சுகப்படுத்தவும்; நய்பஸ்தி கிராம அஜய் & ராதிகா மற்றும் சவ்ஜித் கௌர் & பரம்ஜித் கௌர் தம்பதிகளுக்கு மழலை பாக்கியங்கள் கிடைக்கப் பெற; தான்பூர் கிராம ஜஷ்விந்தர் சிங் மற்றும் தெஜோ பூஜா கிராம தர்ஷன் சிங்கின் குடும்பங்களில் தேவசமாதானம் காணப்பட ஜெபிப்போம்.




### நானக்மட்டா:

**சிவகுமார் & சுசிலா மராக்**

**துதிக்க:** புதிதாக 10 கிராமங்கள் சுவி சேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. கரையா கிராமத்தில் வைத்து நடைபெற்ற சிறுவர் நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர் வதித்துக் கொடுத்துள்ளார். இஸ்லாம் நகரைச் சேர்ந்த மன்ஜீத் கௌரின் குழந்தையை இனம்புரியாத நோயி லிருந்து தேவன் மீட்டுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வேத வசனத்தின் மீது ஆவல் காட்டும் மன்கீத் கௌரின் இரட்சிப்பிற்காக; நமது விசுவாசி பல்தேவ் சிங்கிற்குத் தகுந்த அரசாங்க வேலையொன்று கிடைக்க; இஸ்லாம்பூரைச் சேர்ந்த கமல்சிங்கின் குடும்பத்தில் நடைபெறப்போகும் திருமணத் திற்கான பணத்தேவைகள் யாவும் அற்புத மாகச் சந்திக்கப்பட; ரத்தா ஃபாராம் கிராம நமது விசுவாசி சோனுபாயிற்கு அவர்தம் வியாபாரத்திற்கேற்ற நல்ல கடையொன்று வாடகைக்குக் கிடைக்க ஜெபிப்போம்.

## டெல்லி

### பட்பர்கன்ஜ்:

**P.G. கிறிஸ்டோபர் & மேபல்**

**துதிக்க:** 10 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் புதிதாக வந்துள்ளனர். நமது விசுவாசிகளான ரவி & எலிச பெத்தின் திருமணம் கிறிஸ்தவ முறையில் நடைபெற கர்த்தர் உதவி செய்துள்ளார். தீபா மற்றும் சோனியாவிற்கு சுகப் பிரசவங்கள் நடந்துள்ளன. நமது வாலிப விசுவாசிகளான தினேஷிற்கு அரசு சார்பற்ற தொண்டு நிறுவனமொன்றிலும், குல்சானிற்கு பாராளுமன்ற வளாகத்திலும் நல்ல வேலைகள் கிடைத்துள்ளன. பல் வேறு வியாதிகளிலிருந்து குருதீனையும், டெங்கு காய்ச்சலிலிருந்து ரூபன், ஸ்ரீபால், அர்ஜுன், ஹரிஷையும் மற்றும் குடற்புண் காய்ச்சலிலிருந்து விமலையும் அவரது தாயாரையும் தேவன் சுகப்படுத்தியுள்ளார். அசுத்த ஆவிகளின் பிடிகளிலிருந்து அபா வையும், தீ விபத்தினின்று பாப்பாத்தி யையும் தேவன் விடுவித்துக் காத்துள்ள தற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியத்தில் உதவி செய்ய முன்வந்துள்ள புதுமணத்தம்பதி ரவி & எலிசபெத்தின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; ரட்சணாவை இழந்துத் தவிக்கும் அவரது குடும்பமக்கள் மற்றும் தங்களது தகப்பனார் ராம்வீரை இழந்துத் தவிக்கும் நவீன் & தீபா ஆகியோரின் மனஆறுதலுக்காக; ஷியாம் மற்றும் சுரேஷின் குடும்பங்களில் சமாதானம் பிறக்க; நமது விசுவாசிகளான வேணி, அர்ஜுன், பரத், சகுந்தலா மற்றும் சுனிதாவிற்குத் தகுந்த வேலைகள் கிடைக்க; சரஸ்வதி, முத்துகுமார், முகேஷ், மணிமேகலை, பூஜா, வித்யா மற்றும் மகேஷ்வரியின் குடும்பத்தினர்கள் யாவரும் இரட்சிக்கப்பட; நமது ஏழை விசுவாசிகளின் வாழ்வாதாரத்திற்குக் கரம் கொடுக்க ஒரு தையற்கூடம் அமைத்து அவர்கள் யாவருக்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க; வயதில் முதிர்ந்த நமது 35 விசுவாசிகளுக்கு ஆடியோ வேதாகமம் வழங்கப்பட; பக்கவாதத்தி லிருந்து ரவி, ராம்லால், ராம் கிஷோர், சுபோத், திலீப் மற்றும் ஜார்ஜ், வலிப்பு நோயிலிருந்து கௌதம் மற்றும் சுரேஷ், எலும்பு மூட்டு வலிகளிலிருந்து மல்லிகா, பிரமிளா மற்றும் ராஜ் பகதூர் ஆகியோரை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பீனாக்ஷி B. வசாவா சுனில்

திரு. பிதான் ஹன்ஸ்தா

# ராஜஸ்தான்

## ஸ்ரீ கங்காநகர்:

### V. குமார் & பெட்ரிஷியா தமிழ்ச்செல்வி

**துதிக்க:** சுவிசேஷத்தினால் புதிதாக ஒரு கிராமம் சந்திக்கப்பட்டுள்ளது. கோனி சமுதாய பின்னணியத்தைக் கொண்ட நமது விசுவாசி குல்தீப் சிங்கிற்குக் கர்த்தர் மழலை பாக்கியம் தந்துள்ளார். ராய்சீக் சமுதாயத்தைச் சார்ந்த கஜாரன் சிங் புதிதாக நமது ஊழியத்தில் தொடர்பு கொண்டுள்ளார். நமது புதிய தொடர்பாளர்களான சந்தோஷ் அரோதா, பிரவின் மற்றும் பவன் சுவிசேஷத்தின் மீது அக்கறை காட்டி வருகின்றனர். அங்ரஜ் சிங்கும் ரூபாவும் நமது சத்சங் கூடுகையில் தவறாமல் கலந்து கொள்கின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிரசவத்தில் உண்டான சிக்கலின் பொருட்டு தனது பேரனை இழந்திருக்கும் லொபோரா கிராம வீர்பாலின் குடும்பத்தினருடைய மனஆறுதலுக்காக; அனிதா குடும்பத்தினரின் வியாபாரம் செழிக்க; குடிக்கு அடிமையாகி இருக்கும் பிரவீன் அப்பழக்கத்திலிருந்து விடுபட; ரெனுகா கிராம மோகன்லால் மற்றும் சாந்தி தேவி நமது திருச்சபையில் வந்து இணையவும், அவர்கள் பகுதியிலிருந்து அநேகரை அவர்கள் கிறிஸ்துவண்டை கொண்டு வரவும்; 16S, SSB காலனி, மஜிவாலா ஆகிய பகுதிகளில் சபைக் கமிட்டிகள் உருவாக்கப்பட ஜெபிப்போம்.

## பாவோட்டா:

### சத்திய பிரகாஷ் & அஞ்சனா மஸிஹ்

**துதிக்க:** சவ்க்கி, கல்யாண்புரா, ஃபத்தேஹ் புரா, கலான் ஆகிய 4 கிராமங்களில் புதிதாகச் சுவிசேஷப்பணி நடந்துள்ளது. பயின்ஸ்லானா கிராம ராகுல் டெங்கு காய்ச்சலிலிருந்து சுகம் பெற்றுள்ளார். இப்பணித்தள விசுவாசிகள் நாளுக்குநாள் கிறிஸ்துவில் வளர்ந்து வர தேவன் காண்பிக்கின்ற கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிடக் காத்திருக்கும் நமது தமேதா கிராம விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; நமது விசுவாசி ராஜேந்திராவின் வங்கிக்கடன் தீர; பயின்ஸ்லானா கிராமத்தில் ஆலயம் கட்ட நல்ல நிலமொன்று கிடைக்க; கோட் புத்தாலி கிராம சோனுவிற்கு டெங்கு காய்ச்சலிலிருந்து பூரண சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

## *ஒன்று சேர்க்கும் ஜெபம்!*

*உத்தராகண்ட், தினேஷ்பூர் பணித்தளம். தேஜா பூஜா கிராம நமது விசுவாசி லஜோயியின் மகள் விக்கிக்குப் பிறந்த மூத்த மகன் 8 மாதங்கள் கழித்து மரித்துப்போனான். பின்னர் பிறந்த இரண்டாவது மகனும் சமீபத்தில் மரித்துப்போனான். இதனால் விக்கி தனது கணவரின் குடும்பத்தினருடைய கடும் கோபத்திற்கு ஆளானார். கணவருடைய வீட்டிலிருந்து தனது சொந்த தாய் தகப்பனுடைய வீட்டிற்கு துரத்தியடிக்கப்பட்டார். அதுமட்டுமல்லாது விக்கியின் கணவருடைய குடும்பத்தினர் அவர்மீது பொய்யான குற்றச்சாட்டு ஒன்றையும் வழக்காகப் பதிந்தனர். ஆயினும் விக்கியின் தகப்பனாகிய நமது விசுவாசி லஜோயி, தன் மகளுடைய குடும்பப் பிரச்சனை தீரும்படியாகத் தனது சபை விசுவாசிகளுடன் சேர்ந்து ஜெபிக்கத் தொடங்கினார். அதன் விளைவு, ஒருநாள் காலைப்பொழுதில் விக்கியின் கணவர் விக்கியைத் தனது வீட்டிற்கு அழைத்துப்போக வந்தார். கணவனும் மனைவியும் அன்புடன் ஒன்று சேர்ந்தனர். அவர்கள் ஒன்று சேர்ந்ததைக் கண்ட இரு பெற்றோரின் குடும்பங்களும் தங்களது குடும்பங்கள் யாவும் மீண்டும் தேவ கிருபையால் ஒன்று சேர்ந்ததற்காக தேவனைத் துதித்தனர்! அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. டோன்ஸாசின்

திருமதி. ரீனா ஆரோன்சிங்

## அஜீத்கார்:

### ஜெய்பீர் சிங் & தேவி ராணி

**துதிக்க:** கிறிஸ்துவை இரட்சகராக அறிகிற அறிவின் வாசனைக்குள் புதிதாக 15 நபர்கள் வந்துள்ளனர். முதல்முறையாக ஒரு கிராமத்து மக்கள் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். ஜெய்ராம் புரா மற்றும் ஹனுத்புரியா பகுதிகளில் தேடுவோர் முகாம்கள் சிறப்பாக நடந்தேறி யுள்ளன. 6 வருடங்களாகத் தனது வீட்டின் ஓர் அறையில் தன்னைத் தனிமைப்படுத்திக்கொண்டு வாழ்ந்து வந்த ரமேஷை தேவன் தொட்டதினால், இன்று அவர் இயல்பான வாழ்வு நிலைக்குத் திரும்பி இருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அருகில் வசிப்போர் மத்தியில் நமது விசுவாசிகள் கிறிஸ்துவிற்குள் நற்சாட்சியுள்ள வாழ்வு வாழ; குடிப்பழக் கத்தில் சிக்கித் தவிக்கும் பிரதாப் மற்றும் சுமனின் விடுதலைக்காக; கடந்த 13 வருடங்களாகத் தனது கணவரால் கைவிடப்பட்டு தனித்து வாழும் ரஜினியின் குடும்பத்தில் தெய்வீக சமாதானம் உண்டாக; சஞ்ஜய் & நீட்டுவிற்கு மழலை செல்வம் பிறக்க ஜெபிப்போம்.

# உத்தரப் பிரதேசம்

## சிக்கந்ரா & பாக்ய நகர்:

### பொன்னுசாமி & சித்ரா

**துதிக்க:** புதிதாக ஒருநபர் கிறிஸ்துவிற்குள் வந்துள்ளார். புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. தவறான குற்றச்சாட்டினால் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நமது விசுவாசி வினய் விடுதலை அடைந்துள்ளார். 40 இடங்களில் ஊழியப் பின்தொடர் பணிகளையும் சபை ஆராதனைகளையும் நடத்தி முடிக்க தேவன் கிருபை செய் துள்ளார். ஊரடங்குச் சமயத்தில் தன் வேலையை இழந்த நமது விசுவாசி தேஜ்பிரதாப் சிங்கிற்கு மீண்டும் அவ் வேலை கிடைக்க தேவன் ஒத்தாசை காண்பித்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களால் எதிர்ப்பைச் சந்திக்கும் நமது விசுவாசி களுடைய பாதுகாப்பிற்காகவும், சாந்தபூர் மற்றும் பிற பகுதி எதிர்ப்பாளர்களும்கூட மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும்; நமது சுதேச ஊழியர் ஷியாம் சுந்தர் சிறையிலிருப்பதால் சமாதானமின்றிக் காணப்படும் அவருடைய பராமரிப்புக் குட்பட்ட அவுரையா திருச்சபையில் தேவசமாதானம் காணப்பட்டு, அச்சபை மக்களனைவரும் கூடி அவருக்காக ஊக்கமாய் ஜெபிக்கவும், அவர் சீக்கிரத்தில் விடுதலையடையவும்; மித்லேஷை வலிப்பு நோயிலிருந்தும், திப்பன்சுவை விரைவீக்கப் பிரச்சனையிலிருந்தும், லட்சுமியைக் காசநோயிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; நமது விசுவாசிகளான ரீனா மற்றும் ராஜ்குமாரிக்கு மழலை பாக்கி யங்கள் கிடைக்க ஜெபிப்போம்.




## கைம்கஞ்ச்:

**எபநேசர் G. சாம் & ஜெபராணி**

**துதிக்க:** கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் புதிதாக 7 நபர்கள் வந்து சேர்ந்துள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் தேவ வார்த்தைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. காபூல்பூர் கிராமத்தில் வாழும் பீஹார் மக்களுக்குச் சுவிசேஷம் சொல்ல தேவன் திறந்த வாசலைத் தந்துள்ளார். பிரித்வி தர்வாஜா பகுதி நமது விசுவாசி ரித்திக் 4 மாதங்களுக்குப் பின் மீண்டும் ஆராதனைக்கு வரத் தொடங்கியுள்ளார். கர்த்தர் நமது விசுவாசிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் பலரை டெங்கு காய்ச்சலிலிருந்து சுகம் தந்து காப்பாற்றியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லால்பூர் கிராம ராஜேந்தர் குடும்பத்தினரின் இரட்சிப்பிற்காக; அஜாம்பூர், கம்பிள், லஜோரி, அய்யாபூர் ஆகிய கிராமங்களில் நடந்த சிறுவர் வேதாகம வகுப்புகளில் தவறாமல் பங்கேற்ற சிறுவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; குடிப்பழக்கத்திற்கு ஆளாகியிருக்கும் பாஹ்லோல்பூர் கிராம பிரேம்சந்த் மற்றும் சிலங்கா கிராம ஷானுவின் மனந்திரும்புதலுக்காக; அலிகன்ஜ் கிராம சேத்தனைச் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்தும், எட்டாஹ் கிராம மகேஷை பித்தப்பை பிரச்சனையிலிருந்தும், அர்சானிக் கிராம அமித்தை நரம்பு சம்பந்தமான பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகமாக்க; ரிங்கி, பப்லி, பிரியங்கா, சுக்தேவி ஆகிய நமது விசுவாசிகளுக்கு நல்ல வாழ்க்கை துணைகளமைய ஜெபிப்போம்.

## காட்டம்பூர்:

**ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்**

**துதிக்க:** புதிதாக 13 நபர்கள் கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். 8 கிராமங்களில் முதன்முறையாக இயேசுவின் அன்பு சுவிசேஷ வார்த்தைகளால் பகிரப்பட்டுள்ளது. சில்லி, பவான் ஆகிய பகுதிகளில் நடந்த திருச்சபை ஆண்டுவிழாக்களை தேவன் சிறப்பாக ஆசீர்வதித்துத் தந்துள்ளார். சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளுக்கென வைத்த 2 நாட்கள் உபவாச ஜெபக்கூடுகையை தேவன் அதில் பங்குப்பெற்றோருக்கு மிகுந்த ஆவிக்குரிய பலனுள்ளதாக மாற்றித் தந்துள்ளார். நமது விசுவாசி மனோஜிற்குத் தகுந்த வேலையொன்றை தேவன் கொடுத்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கான்வர்லால், ரவிகுமார் மற்றும் புதிய தொடர்பாளர்களின் இரட்சிப்பிற்காக; ஜெகனாபாத் பகுதி ஆலயப்பிரதிஷ்டை ஆசீர்வாதமாக நடைபெற; சில்லி பகுதி திருச்சபை மூப்பர்கள் திருச்சபைச் செயல்பாடுகளில் மிகுந்த உற்சாகமாக ஈடுபட ஜெபிப்போம்.




பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜாண் குல்லு

# மத்தியப் பிரதேசம்

## நேப்பாநகர்:

### ஜூபராஜ் பர்தன் & ஷீபா ஜாஸ்மின்

**துதிக்க:** புதிதாக 8 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் சேர்ந்துள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ அநேக விசுவாசிகளுக்கு இவ்வருடம் தேவன் விவசாயத்தில் ஆசீர்வாதமான அறுவடையைக் கொடுத்துள்ளார். அனிதாவின் குடும்பத்திற்கு தேவன் மழலை செல்வத்தைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். துகாய்தட் கிராம சுனிதாபாய் மற்றும் மசாக் கிராம கைலாஷ் & சுமன்பாயின் குடும்பத்தைப் பாம்புக்கடியிலிருந்தும், நிஹ்வால் பாபாவை மரணப்படுக்கையிலிருந்தும் தேவன் காப்பாற்றியுள்ளார். பாக்டி கிராம நவால் சிங்கிற்கு ஜெபத்தின் மூலம் பொல்லாத ஆவியின் மந்திரப்பிடியிலிருந்து தேவன் கொடுத்துள்ள விடுதலைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளுடைய பிள்ளைகளுக்குத் தகுந்த வாழ்க்கை துணைகளமைய; சபையின் ஆவிக்குரிய செயல்பாடுகளில் விசுவாசிகள் உற்சாகமாகப் பங்கெடுக்க; பம்லாபாத் கிராம அனிலிற்கு வயிற்றுவலியிலிருந்தும், ஜிர்பானி கிராம ஜானுவிற்கு தலையிலுள்ள கட்டியிலிருந்தும் பூரண சுகம் கிடைக்க; நமது சுதேச ஊழியரின் மனைவி கோமலிற்குச் சுகப்பிரசவம் நேரிட ஜெபிப்போம்.

## நிவாலி:

### சன்னமல்லப்பா & ரூபா ஏலவாகி

**துதிக்க:** கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் புதிதாக இரு நபர்கள் வந்துள்ளனர். முதன்முறையாக இயேசுவின் நற்செய்தி 5 கிராமங்களில் பறைசாற்றப்பட்டுள்ளது. இரண்டு குடும்பங்கள் சுவிசேஷத்தின் மேல் நாட்டம் காட்டுகின்றனர். கன்னத் கௌளன், கவியாகுந்தி, காஜல்மாதா ஆகிய கிராமங்களில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியங்களை தேவன் அநேகருக்கு ஆசீர்வதித்துத் தந்துள்ளார். கண் பிரச்சனையிலிருந்து சஞ்ஜீவ்பாயிற்கு தேவன் கொடுத்துள்ள சுகத்திற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கள்ளப்போதனைகளால் குழப்பத்திற்கு ஆளாகியிருக்கும் கம்பானி கிராம நமது விசுவாசிகளின் நல்ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; கோல்யாபானி திருச்சபையினருக்கு ஒரு ஆலயம் கட்டப்பட; சட்டாலி திருச்சபையினருக்கு ஆலயம் கட்ட நல்ல நிலமொன்று கிடைக்க; நமது ஊழியத்தைத் தடை செய்யும் நாயுடு மனந்திரும்ப ஜெபிப்போம்.

## *அற்புதங்கள் செய்கிறவர் இன்றும் நமக்குள் வசிக்கிறார்!*

*மகாராஷ்டிரா, முக்காடா பணித்தளம். இங்கே இம்மழைக்காலத்தில் அநேகர் இடி, மின்னலுக்கு இரையாயினர். நமது விசுவாசி பாரதி சந்தர் கதாலேயும் இடி, மின்னலினால் பெரிதும் பாதிக்கப்பட்டு, சில நாட்கள் சுயநினைவற்றவராகவே சிகிட்சையில் இருந்தார். சரீரத்திற்குச் சிறிது ஊக்கம் கொடுக்கும் உப்பு நீர் ஏற்றலைக் கூட (Saline Infusion) இவரது சரீரம் ஏற்க மறுத்ததினால், எல்லாச் சிகிட்சையும் வீணாய்ப் போனது. கடைசியில், இவரது சபை விசுவாசிகள் யாவரும் ஒன்றுக்கூடி இவருக்காக உபவாசம் இருந்து ஊக்கமாக ஜெபித்தனர். இன்றும் ஜெபத்தைக் கேட்டு அற்புதங்கள் செய்யும் ஆண்டவர், இவருக்கு மீண்டும் புதுவாழ்வு தந்தார். கர்த்தருக்கே புகழ்!*

## 11 டிசம்பர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. துங்சிபெனி சுமித்குமார்

### டப்ரா: சத்திகந்த் பரிச்சா & சகரிகா

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை விசுவாசத்துடன் ருசிக்க ஆரம்பித்துள்ளனர். புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. நமது ஜீப்குழு ஊழியம் மூலம் 5 புதிய தொடர்பாளர்கள் கிடைத்துள்ளனர். நமது விசுவாசி சகரிகா டிகலுக்கு கிருபையாய் மழலை பாக்கியம் கிடைத்துள்ளது. நமது தன்னார்வ ஊழியர் அத்தார் சிங் சிறப்பாய் ஊழியம் செய்ய நன்கு கற்று வருகிறார். சிம்ரியா, மெஹ்கான் ஆகிய கிராமங்களில் மீண்டும் ஆராதனைகள் துவங்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டப்ரா பணித்தளத்திற்கென நல்ல ஆவிக்குரிய அர்ப்பணமுள்ள ஊழியர் கிடைக்க; நில்காப் மற்றும் கார்யாவதி பகுதிகளில் நடக்கும் நமது ஊழியங்களில் விசுவாசிகள் ஊக்கமாய்ச் செயல்பட; சபை மூப்பர்களும் சபைச்செயல்பாடுகளில் சிறப்பாகச் செயல்பட ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### பதரியா: அகஸ்டின் பிஜி & மன்னா ராஜ வித்யா

**துதிக்க:** குடியா கொடா கிராமத்தில் புதிதாக 22 நபர்கள் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். சோட்டா சின்னி, சாத்பேடா, ஆடுகொடா, தும்ரிகொடா ஆகிய பகுதிகளில் ஆலயக்கட்டுமானப்பணிகள் யாவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அகோயா கிராம சாரா மஞ்சள்காமாலை நோயிலிருந்தும், பஸ்கோபிட்டா கிராம சஞ்சு கண் பிரச்சனையிலிருந்தும் சுகமடைந்துள்ளனர். விவசாயத்திற்குப் போதுமான நல்ல மழையை தேவன் கட்டளையிட்டுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிடுசப்பேடி பகுதியில் நடைபெற்று வரும் சிறுவர் பராமரிப்பு மையக் கட்டிடப்பணிகள் யாவும் விரைவில் நிறைவடைய; பிடு அம்பாடா, சிக்குடு, காட கொடா, லிக்ருபிட்டா, பால்கமி, கோபாலி, ஆன்ட்ரோ கொடா, ஜாலோ, படோடி ஆகிய கிராமங்களில் ஆவிக்குரிய பின்மாற்றடைந்திருக்கும் நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; நடக்கப்போகும் சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி மற்றும் வீடு சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; கெர்ஹோக் கிராம காலேபையும் சுமனையும் வலிப்பு நோயிலிருந்து தேவன் சுகப்படுத்த ஜெபிப்போம்.

## என்ன வந்தாலும் நம்புவேன்!

*ராஜஸ்தான், ஸ்ரீ கங்காநகர் பணித்தளம். லோஹரா கிராம நமது விசுவாசி வீர்பால் கிறிஸ்துவின் மீது தான் வைத்த விசுவாசத்தின் பொருட்டு, அந்த விசுவாசம் கிறிஸ்துவிற்குள் மேலும் வலுப்பெறுவதற்கு அவர் சந்திக்கும் பரீட்சைகளோ ஏராளம்! எனவே, அவரது கணவர் கலாசிங்கும் மகன் குர்பிரீத்தும் அவரை ஆராதனைக்குச் செல்லாமலிருக்கும்படி கூறினர். ஆயினும் வீர்பால், 'என்ன வந்தாலும் நம்புவேன் என் நேசர் மீட்பரை!' எனச் சொல்லி, தொடர்ந்து ஜெபித்து வந்தார். அவரது ஜெபம் கேட்கப்பட்டு, அவருடைய மூத்த மகளின் குடும்பப்பிரச்சனை தீர்ந்தது. அதன்பின், அவருடைய கணவரும் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கினார். ஆனால் அதன்பின், பிறந்து 16 நாட்களேயான அவர்களுடைய பிஞ்சு ஆண் பேரக்குழந்தை மரித்துப் போனது. அதனால், அவருடைய மகனின் குடும்பத்தினர் அவர்களுடைய கிறிஸ்தவ விசுவாசத்திற்கு மிகவும் எதிரிகளாயினர். எனினும், வீர்பாலும் அவருடைய கணவரும் விசுவாசத்தில் சற்றும் பின்னடையவில்லை. பின்பு கிருபையால் அவர்களது இரண்டாவது மகள் இயேசுவை ஏற்றுக்கொண்டாள். இருப்பினும் அவர்களது வாழ்க்கையில் விசுவாசப்பரீட்சைகள் இன்னும் தொடர்ந்து கொண்டேதான் செல்கிறது. இவர்களது போராட்டம் கிறிஸ்துவிற்குள் முற்றிலும் ஜெயமாய் முடிய நாமும் இவர்களுக்கென நமது ஜெபங்களின் மூலம் கரம் கொடுப்போம். தேவ நாமம் மகிமைப்படுவதாக!*




### தம்னி:
**ஜாண்பால் ஹாரிஸ் &**
**விமலா டெய்சி**

**துதிக்க:** எட்டு இடங்களில் நடந்த விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சிகளின் மூலமாக 360 பிள்ளைகளை தேவன் ஆசீர்வதித்துள்ளார். குட்டமு கிராமத்தில் நடந்த மருத்துவ முகாமின் மூலம் 7 கிராமங்களிலுள்ள 60 நபர்கள் மருத்துவப்பயன் பெற்றுள்ளனர். மால் பஹாடியா பகுதியில் வைத்து நடைபெற்ற சிறுவர் மேளாவின் மூலம் அநேகர் தேவாசீர்வாதம் பெற கர்த்தர் உதவி செய்துள்ளமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லிலா தோனி கிராமத்தில் சுவிசேஷத்தின் மீது நாட்டம் காட்டும் 3 நபர்களின் இரட்சிப்பிற்காக; தம்லி கொடா கிராம பெய்தா மால்தோவின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; பிடுபூரா கிராம தேவதாஸ் மால்தோ மனந்திரும்பவும், ஆராதனையில் வந்து கலந்துகொள்ளவும்; குந்தி கொடா மற்றும் குட்டமு கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக்கட்டுமானப்பணிகள் யாவும் சிறப்பாக நிறைவு பெற; புசுருகுடியா கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்குத் தேவையான சாலை வசதிகள் உருவாக ஜெபிப்போம்.

### ராம்கார்:
**செந்தில் குமார் தீமோத்தேயு &**
**முத்துச்செல்வி**

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்துள்ளனர். புதிதாக 13 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. விசுவாசிகள் மத்தியில் வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. பின்மாற்றமடைந்திருந்த அநேகர் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்திருப்பதினால் மீதமுள்ள விசுவாசிகள் மத்தியில் நல்ல ஆவிக்குரிய மறுமலர்ச்சியும் எழுப்புதலும் உண்டாகியுள்ளது. தவறாமல் நமது ஆராதனையில் வந்து கலந்துகொள்ளும் ரூபன் மராண்டி மற்றும் சுரேந்தரைக் கர்த்தர் அவர்களது பெலவீனங்களிலிருந்து சுகப்படுத்தியுள்ளார். அதிக சுகவீனங்களினிமித்தம் படுத்தப்படுக்கையாக இருந்த நமது ஏனைய விசுவாசிகள் ஜெபத்தின் மூலம் அற்புத சுகமடைய தேவன் ஒத்தாசை நல்கியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கந்துவா பகுதியில் ஒரு ஆலயம் கட்ட முயற்சிக்கும் ஆயத்தப்பணிகளை தேவன் கனப்படுத்த; நமது திருச்சபைகளை முன்நின்று நடத்தும் அதிக பட்ச சபைமூப்பர்கள் தங்கள் தொழில் ரீதியாகப் பிற மாநிலங்களுக்குச் சென்றுவிட்டதினால், நமது திருச்சபைகளில் ஆராதனைகள் நின்றுவிடாமல் தொடர்ந்து நடைபெற; குணமாக்கும் மற்றும் ஆசீர்வதிக்கும் வரம் பெற்ற பல விசுவாசிகள் புதிய விசுவாசிகளைத் தவறான பாதைக்கு நடத்திச் செல்வதிலிருந்து மனந்திரும்ப; மந்திர பில்லி சூனியக் கட்டுகளினால் பாதிப்பிற்குள்ளாகும் காஞ்சிரியா கிராம நமது விசுவாசிகளின் சரீர மற்றும் ஆவிக்குரிய பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷீபா ஜாஸ்மின் ஜுபராஜ்

### சந்தால் சீஷத்துவப்பயிற்சி ஊழியம் – சோட்டாகக்கிரி:

**சுதாகரன் & ஃப்ளாரன்ஸ்**

**துதிக்க:** போட்பந்த், கரோனி, கான்புரா, பாகபாரா மற்றும் கிஜுர்தாங்கல் பகுதிகளில் நடைபெற்ற சபைத்தலைவர்கள் கூடுகைகளைக் கர்த்தர் அதில் கலந்து கொண்டோருக்கு மிக அதிகமாக ஆசீர்வதித்துத் தந்துள்ளார். பாட்னா பணித் தளத்தைச் சார்ந்த 10 திருச்சபைகளில் வேதாகம வகுப்புக்குழுக்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. பூர்மி மராண்டி & அனிதாவின் குடும்பத்திற்கு தேவன் குழந்தை செல்வம் தந்து ஆசீர்வதித்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சந்தால் இன மக்கள் மத்தியில் இயங்கி வரும் எல்லாத் திருச்சபைகளிலும் வேதாகம வகுப்புக்குழுக்களும், ஞாயிறு வேதாகமப்பள்ளிகளும் தொடங்கப்பட; லாசரஸ் ஹெம்ரோம் & சுமிதா மற்றும் லோபின் ஹன்ஸ்தக் & லீனா தம்பதிகளின் குடும்பங்களில் தேவன் குழந்தை பாக்கியங்களைக் கட்டளையிட ஜெபிப்போம்.

## மேற்கு வங்காளம்

### பாக்குவாஹாட்: ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** புதிதாக ஒருநபர் கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளார். 15 கிராமங்களில் முதன் முறையாகக் கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. பன்னாபூர் மற்றும் சல்போனி திருச்சபைப் பகுதிகளில் சிறிய ஜெபக்குழுக்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன. ஹெலன்தங்கா, உளத்தூர், கொய்னாதிஹி, மௌதங்கா, மானிக்பூர் ஆகிய கிராம மக்கள் சுவிசேஷத்தின் மீது அதிக வாஞ்சை காட்டுகின்றனர். சில மாதங்களுக்குப்பின் காலு சோரேன் மற்றும் சூர்ஜு சோரேனின் குடும்பங்கள் மீண்டும் ஆலய ஆராதனைக்கு வரத் தொடங்கியுள்ளனர். சுட்கி டுடுவை மஞ்சள் காமாலை நோயிலிருந்தும், எலிசபெத் சோரேனை நாள்பட்ட சளி இருமல் தொல்லையிலிருந்தும், புத்ராய் முர்முவை இனம்புரியாத நோயிலிருந்தும், ரெபேக்கா மர்தியை நெஞ்சு வலியிலிருந்தும் தேவன் குணப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாக்குவாஹாட் பணித்தளத்தில் ஆவிக்குரிய பேரசைவு மக்கள் மத்தியில் உருவாக; சல்போனி கிராமத்தில் திருச்சபை உருவாக்குவதில் இருக்கும் தடைகள் நீங்க; அரசியல் செல்வாக்கு மிகுந்த நமது புதிய தொடர்பாளரான ஸ்ரீநாத் முர்மு தனது விசுவாசத்தைத் தைரியமாக கிறிஸ்துவில் அறிக்கையிட; நமது சுதேச ஊழியர் ராஜேஷ் முர்முவிற்குத் தனது வருமானத் திற்குத் தகுந்த நல்ல வீடொன்று கிடைக்க; வலிப்பு நோயிலிருந்து மராங் முர்மு முழுசுகம் பெற; உளத்தூர் கிராம ஸ்ரீநாத், ஹெலன்தங்கா கிராம சுஷில் முர்மு மற்றும் ஹோப்னி முர்மு, பிந்தர் கடியா கிராம தலு சோரேன், குட்கு கிராம சிபிலால் முர்மு, சல்போனி கிராம தீனா முர்மு மற்றும் ஸ்ரீநாத் மர்தி, சந்தாபன் கிராம மோசஸ் டுடு, பிர்தோலா கிராம சுபாஷ் மர்தி, கொய்னாதிஹி கிராம ராமு மர்தி, சுதிர் மர்தி, காந்த் முனி பெஸ்ரா ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ராணி ஜெஸிலெட் பால் ஆல்பர்ட்

## தபன்:

### R. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** 3 நபர்கள் புதிதாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளனர். 6 கிராமங்களில் ஊழியப்பின் தொடர்பணிகளை வீடு வீடாகச் சென்று செய்யவும், அநேகர் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்டவும் தேவன் நமது ஊழியர்களுடனிருந்து நற்கிரியை செய்துள்ளார். சபை மூப்பர்கள் முகாம் திரளானோருக்கு ஆசீர்வாதமாக இருந்துள்ளது. நமது விசுவாசி பல்தான் முர்முவைப் பாம்புக்கடியிலிருந்து தேவன் மீட்டுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது சமுதாயத்தின ரிடையே நமது இளம் விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் வெற்றியுள்ள வாழ்வு வாழ்ந்து தங்களது சாட்சியைப் பாதுகாத்துக்கொள்ள; தங்களின் பழைய பாவப்பழக்கவழக்கங்களிலிருந்து முழுமையாக விடுபட முடியாமல் தவிக்கும் நமது புதிய தொடர்பாளர்களுக்காக; சோம்பூர் கிராம சஞ்ஜிலா முர்முவும், கக்னா கிராம பிஸ்னுவின் குடும்பமும் இரட்சிக்கப்பட; தானி கிஸ்குவைச் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும், புதின் கிஸ்கு, தினாய் முர்மு, மைக்கோ மராண்டி மற்றும் அனிதாலால் டுடுவைப் பலவித நோய்களிலிருந்தும் தேவன் குணமாக்க ஜெபிப்போம்.

# அஸோம்

## வடகிழக்குப் பிராந்தியம்:

### C.H. ஜாண் & வேணி

**துதிக்க:** 18 நபர்கள் முதன்முறையாகக் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் இணைந்துள்ளனர். புதிதாக 17 கிராமங் களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு விதமான பெலவீனங்கள், தொற்றுநோய்கள் மத்தியில் தேவன் நமது ஊழியர்களையும், சுதேச ஊழியர்களையும், விசுவாசிகளையும் இம்மட்டும் பாதுகாத்து நடத்தி வருகிறார். தேமாஜி பணித்தள உஜ்ஜால் பத்ரி சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டு கின்றார். ஜோனை மற்றும் நாராயண்பூர் பணித்தளங்களில் வைத்து நடைபெற்ற உபவாச ஜெபக்கூடுகை அநேகருக்கு அதிக ஆசீர்வாதமாக அமைய தேவன் தயவு காட்டியுள்ளார். தீராத வியாதி யிலிருந்து தேவன் நமது சிலபதார் பணித்தள விசுவாசி ரமணாவை ஜெபத்தின் மூலம் சுகப்படுத்தியுள்ளதற் காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காபூர்திரியா, சீத்தல்மரி, பகோட்டியா, கோலிகரி, ஜாமுகுரி, பூல்பாரி, குவார்பாரி ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; நமது புதிய தொடர்பாளர்களான தெபோஜித், ராய்ரா, ரமேஷ், அஞ்சலி, குமாரி, வங்காசி, ஹேமகாந்தோ, தீனா பெகு ஆகியோரின் இரட்சிப்பிற்காக; பல்வேறு விதங்களில் எதிர்ப்பு தெரிவிக்கும் தியோரி சமுதாய ஜெகநாத், ஜிஸ்மி மற்றும் மிஸ்ஸிங் சமுதாய கைலாஷ், சங்கீதா, சூரஜ், மனோஜ், மாங்கி ஆகியோர் தங்களது எதிர்ப்பை முற்றிலுமாய் விட்டுவிட்டு இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஏஞ்சல் ரோஞ்ஜய் நர்சாரி

# சத்தீஸ்கட்

## பையாதன் - 1:

### முத்துக்குமார் & நேத்ரவதி

**துதிக்க:** வன்ஜிஹா, சிர்சி, கேவ்ரா ஆகிய கிராமங்களில் ஆராதனைகள் நடத்த தேவன் உதவி பாராட்டியுள்ளார். பல்தாலி மற்றும் தாரிபாரா கிராமங்களில் நடந்த வெளிசந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளின் மூலம் அநேகர் முதல்முறையாக இயேசுவின் அன்பை அறிய தேவன் கிருபை நல்கியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோண்ட் இன மக்கள் வாழும் கிராமங்களில் கர்த்தர் சுவிசேஷத்திற்குத் திறந்தவாசலைத் தர; வரும்நாட்களில் நடக்க இருக்கின்ற ஊழிய நிகழ்ச்சிகளின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிப்போம்.

## பையாதன் - 2:

### தாங் சின் லியான் & உங் தியான்சிங்

**துதிக்க:** புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பணித்தளத்தில் அநேகர் முதல்முறையாகச் சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். கோண்ட் இன மக்கள் மத்தியில் நடக்கும் ஊழியப் பின் தொடர்பணிகளை தேவன் ஆசீர்வதித்து வருகின்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தொடர்ந்து இன்னும் அநேக இடங்களில் நடக்க இருக்கின்ற ஊழியப் பின்தொடர்பணிகளையும் தேவன் ஆசீர்வதித்துத் தர; சுவிசேஷத்தைக் கேட்டிருக்கும் மக்கள் யாவரும் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட ஜெபிப்போம்.

## சம்ப்பா:

### ரமேஷ்வர் தயாள் நிர்மல் & மதுகலா

**துதிக்க:** புதிதாக 7 நபர்கள் கிறிஸ்துவை அறிகிற அறிவின் வாசனைக்குள் வந்துள்ளனர். பத்ரியா, தோபி என்ற இரண்டு கிராமங்களில் முதல்முறையாகக் கிறிஸ்துவின் நற்செய்தி பகரப்பட்டுள்ளது ரசோன்தா, சர்கோர் மற்றும் காம்ரியா கிராமங்களில் நடந்த இயேசு திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்துள்ளார். ஜோராதோலி சபையில் வைத்து நடைபெற்ற சுதேச ஊழியர் பயிற்சிக்கூடுகையில் கலந்துகொண்ட அனைத்து சுதேச ஊழியர்களுக்கும் அக்கூடுகை மிகுந்த ஆவிக்குரிய ஊக்கமளிப்பதாக இருந்துள்ளது. பல்வேறு வியாதிகளினால் கஷ்டப்பட்டு வந்த ஜாகேஷ்வர், ரத்னாகர், தேவ்பிரசாத், காந்தே, ராஜ் பர்த்வாஜ், ராகுல் பன்ஜாரி, உஷா குர்ரி, நரேஷ் ஜாங்தி ஆகியோரை தேவன் குணமாக்கியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** செமரியா, சோனி ஆகிய கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட இருக்கின்ற நிலங்கள் யாவும் நியாயமான முறையில் பதிவு செய்யப்பட; நமது விசுவாசிகளான மஞ்சு, பிரியங்கா, போலி, ஜோதி யாதவ், ரஜனி, புஷ்பா, பூலேஸ்வரி, உஷா குர்ரி, ரஞ்சிதா ஆகியோருக்கு குழந்தை பாக்கியங்கள் அருளப்பட; சுவிசேஷத்தின் மீது ஆர்வம் காட்டும் சாத்னமி, சாகு, பெய்னிகா, யாதவ், நிசாத், பட்டேல், சபரியா, தாங்சாகா, கும்ஹார், கஹார், டோபி, நய், தேவர், சாரதி, கொர்வா மற்றும் திமார் மக்களினங்களின் மத்தியில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாக; இப்பணித்தளத்தில் ஊழியம் செய்ய இரண்டு சுதேச ஊழியர்கள் கிடைக்க; நமது ஊழியத்தில் உதவிபுரிகின்ற பீர்பால் திகா, சூரஜ் குமார், நராங்கி, கணேஷ் சுன்வானி, புதானி ஆகியோருடைய குடும்ப மக்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கவிதா திம்மேஷ்
திரு. ஃபெலிக்ஸ் கமாலியேல் எட்வர்ட்

### கர்கோடா:

**கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன் & மீனா**

**துதிக்க:** மாக்ரி கிராம நமது விசுவாசி சந்திரமணி சாகு தனக்கு நேரிட்ட எதிர்ப்புகளின் மத்தியில் கிறிஸ்துவின் மீது தான் கொண்டுள்ள விசுவாசத்தில் தளர்வில்லாமல் உறுதியாக நிற்க தேவன் அவருக்கு பெலன் ஈந்துள்ளார். அதிக பயத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் ஜெய்பிரகாஷ் யாதவிற்குத் தந்துள்ள விடுதலைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரத்தியா மக்களினம் மத்தியில் சுவிசேஷம் கடந்துச்செல்ல தேவன் திறந்தவாசலைத் தர; சௌகான், சாரதி, மசாகு ஆகிய மக்கள் கூட்டங்கள் மத்தியில் நமது ஊழியங்கள் வளர்ச்சிப் பெற; நமது ஊழியத்தைப் பகிரங்கமாக எதிர்க்கும் மாக்ரி கிராம தேவ் பிரகாஷை தேவன் மனந்திரும்பச் செய்ய ஜெபிப்போம்.

### லுடேக்:

**டேவிட் மசிஹ் & நிஷா டேவிட்**

**துதிக்க:** தும்பார் கிராமத்திலிருந்து புதிதாக 5 நபர்கள் கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். 7 கிராமங்களுக்குப் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. இரு சக்கர மோட்டார் வாகன விபத்திலிருந்து நமது சுதேச ஊழியரின் குடும்பத்தைக் கர்த்தர் காப்பாற்றி இருக்கின்றார். சைமன் திகா மற்றும் அஞ்சனா திகாவை மலேரியா நோயிலிருந்தும், கிரணை குடற்புண் காய்ச்சலிலிருந்தும் தேவன் சுகப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பென்டுஜோர் கிராம ஆபிரகாமை வாய்ப்புற்றுநோயிலிருந்தும், நமது சுதேச ஊழியர் எலிசா டொப்போ மற்றும் அவரது மனைவியை மஞ்சள் காமாலை நோயிலிருந்தும், கெக்ரா பாரா கிராம மெனிட்டாவைக் காதுப் பிரச்சனையிலிருந்தும், ரஞ்சிதாவை வலிப்பு நோயிலிருந்தும் முற்றிலுமாக தேவன் குணமாக்க ஜெபிப்போம்.

### காட்கோரா:

**வால்வி தினா தானா &**
**ஷைலா புஸாரே**

**துதிக்க:** புதிதாக 14 கிராமங்களில் சுவிசேஷம் பகர்ந்தளிக்கப்பட்டுள்ளது. கார்தி, செப்தாபரி, பர்னுஜாரியா, கேராமுரா மற்றும் லக்கார் கிராமங்களில் நடந்த மாலைநேர ஆவிக்குரிய கூட்டங்களில் கர்த்தர் மகத்தான கிரியைகளைச் செய்துள்ளார். பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து தேவன் கிருஷ்ணாபாயை விடுவித்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தை எதிர்க்கும் ரமேஷ் மற்றும் ஜெய்சிங் அகர்வாலின் மனந்திரும்புதலுக்காக; கேசல்பூர், பர்மதா, ஜோராலி, அங்ராய், பக்ரிதந்த், காக்கா, தாவிகுடி, செமர்தாரி ஆகிய கிராமங்களில் ஆவிக்குரிய அசைவு உண்டாக; ஜீன் குமார், சந்தோஷ் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களின் ஆத்தும மீட்பிற்காக ஜெபிப்போம்.

## 17 டிசம்பர் வெள்ளி

### பாலி:

**டிட்டிங்பௌ & மலங்மெய் சனாலுங்**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் கூறப்பட்டுள்ளது. சில்லி கிராமத்தில் புதிதாக ஆராதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அமர்பூர் கிராமத்தில் 23 நபர்கள் கிரமமாக நமது ஆராதனையில் வந்து கலந்து கொள்கின்றனர். சுதேச ஊழியர்களோடு இணைந்து நமது பாலி திருச்சபையிலுள்ள அனைத்து அங்கத்தினர்களையும் நேரில் சந்தித்து ஆவிக்குரிய ஊக்கமளிக்க தேவன் நமது மிஷனெரிகளுக்கு உதவி செய்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது கோண்ட் மற்றும் சாகு இன விசுவாசிகள் பிற விசுவாசிகளுடன் இணைந்து ஒருமனதோடு கர்த்தரை ஆராதனை செய்யவும், விசுவாசிகள் மத்தியில் காணப்படும் பிரிவினைகள் மறையவும்; லிலா துல்லாபூர் கிராமத்தில் மாலைநேர ஆவிக்குரிய கூட்டங்கள் தொடங்கப்பட; குடியார் மற்றும் தக்டோயா கிராமங்களைச் சார்ந்த நமது விசுவாசிகள் கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள விசுவாசத்தில் எல்லாச் சூழ்நிலையிலும் ஸ்திரமாய் நிற்க; மஜ்கவா கிராமத்தில் மீண்டும் ஆராதனை துவங்கப்பட ஜெபிப்போம்.

## குஜராத்

### நஸ்வாடி, டபோயி:

**யுவனேஷ் & ஜான்சி ராணி**

**துதிக்க:** எல்லா ஊழிய நிகழ்ச்சிகளையும் எந்தத் தடையுமின்றி நடத்தி முடிக்கவும், நடந்த வாலிபர் கூட்டம் ஏராளமான வாலிபப்பிள்ளைகளுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக அமையவும் தேவன் உதவி செய்திருக்கின்றார். ரத்திபேனைத் தீராத வயிற்றுப்பிரச்சனையிலிருந்தும், ரத்தன்பாயை மனநோயிலிருந்தும் தேவன் சுகப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டுங்ராபீல் மக்கள் மத்தியில் சமுதாய மேம்பாட்டுப்பணிகள் வளர்ச்சியடைய; வாலிப விசுவாசிகள் ஜெபக் குழுக்களை நடத்த முன்வர; கமித் கிராம கிறிஸ்தவ விசுவாசிகளின் சாட்சியுள்ள வாழ்வைக் கண்டு, அங்குள்ள விசுவாசிகளல்லாதோர் தங்கள் கிராமத்திற்கு 'இயேசுவே வந்திருக்கிறார்!' என எண்ணி, அவ்விசுவாசிகளை எதிர்க்கின்ற அந்த தீய எண்ணம் அவர்களிலிருந்து எடுபட்டு அவர்களும் இயேசுவை மனதார இரட்சகராக ஏற்றுக்கொள்ள; தீய ஆவியின் பிடியில் சிக்கியிருக்கும் கல்பனாபேனைக் கர்த்தர் விடுவிக்க; மற்ற இடங்களுக்குப் புலம் பெயர்ந்துச் சென்றுள்ள நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்விற்காக ஜெபிப்போம்.

### *யார் அது!*

*மகாராஷ்டிரா, தலசாரி பணித்தளம். வார்வாடா கிராம நமது விசுவாசி சீலேஷ்பாய் தனது நண்பர்கள் பலருடன் சேர்ந்து ஓர் வாகனத்தின் மூலம் தனது வேலை ஸ்தலத்திற்குப் பயணித்துக் கொண்டிருந்தார். அந்த வாகனம் தேசிய நெடுஞ்சாலையில் சென்றுக்கொண்டிருக்கும்போது, திடீரென பெரும் விபத்திற்குள்ளானது. வாகனம் முழுவதும் சேதமடைந்து, 2 பணியாளர்கள் சம்பவ இடத்திலேயே மரித்துப் போயினர். மேலும் பலர் அதிகக் காயமடைந்தனர். இதில் என்ன விந்தையென்றால், அப்பெரும் விபத்தின் மரண விளிம்பிலிருந்து யாரோ ஒருவர் தன் கரம் நீட்டி, நமது விசுவாசி சீலேஷ்பாயை வெளியே இழுத்துக் காப்பாற்றியுள்ளார். அது யாரென்று இன்று வரை அவருக்குத் தெரியவில்லை. ஆனால், பெரும் மரண ஆபத்திலிருந்து தன் உயிரைக் காப்பாற்றிய அந்த அதிசயக்கரத்திற்காகக் கர்த்தரை உளமார்ந்த நன்றியோடு இன்றும் துதிக்கின்றார், அந்த விசுவாசி. கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!*




பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பால் சாலமோன் D.

## சூரத் :

### மாதவராய் & ஜெபதங்கம்

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. உத்தரப்பிரதேசம், பீஹார், மகாராஷ்டிரா மாநிலங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள மக்கள் மத்தியிலிருந்து திரளான புதிய தொடர்பாளர்களை தேவன் நமக்கு ஊழியத்தில் தந்துள்ளார். ஜெபத்தின் விளைவாகப் பெரியதொரு பெலவீனத்தி னின்று சுரேஷையும், கால் வீக்கத்திலிருந்து சுரேஷ் கமித் அஞ்சுபேனையும் கர்த்தர் குணப்படுத்தியுள்ளார். திருமணத்திற்கென புதிதாக நிச்சயம் செய்யப்பட்ட பிரியங்கா & நிதின்பாயின் இரு குடும்பங்களுக்கிடையே காணப்பட்ட குழப்பங்கள் தீர்க்கப்பட்டு, அத்திருமணம் நல்லமுறையில் ஒழுங்குச் செய்யப்பட தேவன் தந்துள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தில் ஓர் ஆலயம் கட்டுவதற்கு நகராட்சி ஒப்புதல் கிடைக்க; நமது ஆராதனைகளில் பங்குப்பெறுகின்ற புதிய விசுவாசிகள் மற்றும் புதிய தொடர்பாளர்களின் ஆவிக் குரிய வளர்ச்சிக்காக; வெவ்வேறு மத நம்பிக்கையினிமித்தம் பிறருடன் சண்டை யிட்டுக் கொள்ளும் நமது விசுவாசி வித்யாபேன் மற்றும் அவரது பக்கத்து வீட்டார் மத்தியில் தெய்வீக சமாதானம் காணப்பட; லால்பேனைத் தோல் ஒவ்வாமை நோயிலிருந்தும், உஷாபேனைத் தீராத காய்ச்சலிலிருந்தும் தேவன் சுகமாக்க ஜெபிப்போம்.

## வலியா:

### மார்கஸ் மால்தோ & சாரா மார்கஸ்

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. ஹீரா குடிப்பழக்கத்திலிருந்து கிருபையாய் மீட்கப்பட்டுள்ளார். தட்கேஷ்வர் மற்றும் ஜார்புனியா கிராமங்களில் நடைபெற்ற சிறுவர் முகாமை தேவன் ஆசீர்வதித்து, அதில் பங்குப் பெற்ற 65 குழந்தைகளுக்கும் அதை மிகவும் பயனுள்ளதாக மாற்றித் தந்துள்ளார். பின்மாற்றமடைந்திருந்த கமலேஷ்பாய் மீண்டும் நல்மனமாற்றம் பெற்றவராய்த் தனது வீட்டாருடன் கட்காச் கிராம ஆராதனைக்கு வர தேவன் பாராட்டியுள்ள தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரஸ்வாத் கிராமத்தில் விரைவில் மாலைநேர ஆவிக்குரிய கூட்டங்கள் தொடங்கப்பட; ராகேஷ்பாய் தம்பதியருக்கு தேவன் ஓர் அழகிய மழலை செல்வத்தைக் கட்டளையிட; நமது விசுவாசி ஆஸிஷிற்கு நல்ல வாழ்க்கை துணையமைய ஜெபிப்போம்.

## நோக்கிப் பார்!

*மகாராஷ்டிரா, ஆலப்பள்ளி பணித்தளம். நமது விசுவாசி செவந்தபாய் கோமதி தனது பிரசவத்திற் காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப் பட்டார். அவரைப் பரிசோதித்துப் பார்த்த மருத்து வர்கள், "இது மிகவும் கடினமான பிரசவமாக இருக்கும். ஆகவே, உயிருக்கு உத்திரவாதம் இல்லை. உடனே அழைத்துச் சென்று விடுங்கள்!" என்று கூறி அனுப்பிவிட்டனர். அவருடைய வீட்டாரும் வேறு வழியின்றி அவரை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டனர். ஆயினும், அவரது சகவிசுவாசிகள் அனைவரும் ஒருமனதோடு அந்நிறைமாத கர்ப்பிணிக்காகக் கர்த்தரை நோக்கிப் பார்த்தனர். கர்த்தர் அப்பெண்ணின் வாழ்வில் அற்புதமாக இடைப்பட்டார். எந்தவிதப் பிரச்சனையோ, கூக்குரலோ, அறுவை சிகிட்சையோ இன்றி அவர் சுகமாகப் பிள்ளையைப் பெற்றெடுத்தார். தேவனுக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. நிஷா டேவிட் மஸிஹ்

## தனக்லா:

### ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா

**துதிக்க:** காலுபுரா, கபரியா ஆகிய இரு கிராமங்களில் சுவிசேஷம் முதல்முறையாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. தாலுவி மற்றும் பீல் இன மக்கள் அனைவரும் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கின்றனர். கடோத் மற்றும் ஜெர் கிராமங்களில் நடந்த மாலைநேர ஆவிக்குரிய கூடுகைகளையும், சுக்கிலிவாசன் மற்றும் சிந்தா புரா கிராமங்களில் நடந்த உபவாச ஜெபக் கூடுகைகளையும் கர்த்தர் ஆசீர்வதித்துத் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிர்காம் மற்றும் ஜக்தியா கிராம மக்கள் யாவரும் இரட்சிப்படைய; கொலகாமுடி மற்றும் முடாஷா கிராம மக்கள் யாவரும் குடிப்பழக்கத்திலிருந்தும், தீய ஆவிகளின் பிடிகளிலிருந்தும் விடுபட; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மதன்லால், சுரேஷ்பாய் மற்றும் மோகன்பாய் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ள; கனமழையினாலும், வெள்ளத்தினாலும் தங்களது விளைநிலங்களில் சேதம் கண்டிருக்கும் நமது விசுவாசிகளுக்காக ஜெபிப்போம்.

## கடோத்:

### ராம்சிங்பாய் வசாவா & ஊர்மிளாபேன்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. சபை மூப்பர்கள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கான கூடுகைகளை நடத்த தேவன் நமது ஊழியர்களுக்கு கிருபையளித்துள்ளார். தியாகஸ் கிராமத்தில் வைத்து நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் ஏறத்தாழ 80 நபர்கள் முதன்முறையாகச் சுவிசேஷத்தை ஆவலுடன் கேட்க தேவன் தயவு பாராட்டியுள்ளார். நமது விசுவாசிகளின் ஜெபத்தைக் கேட்டு ரூவா கிராம பரத்பாயின் வாழ்விலிருந்து தீய ஆவிகளின் ஆக்கிரமிப்புகளை தேவன் அகற்றியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தாக்கர்பாயின் மகன் குடிப் பழக்கத்திலிருந்து விடுபடவும், இரட்சிக்கப்படவும்; நமது எல்லா விசுவாசிகளின் சரீர மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; பரத்பாயின் பெலவீனமான சரீரம் முழு ஆரோக்கியம் பெற ஜெபிப்போம்.

## மேற்கு மண்டலம்:

### ஜோசப் துரைராஜ் & எலிசபெத்

**துதிக்க:** நேத்ரங்கில் வைத்து நடைபெற்ற வாலிபர் கூடுகையில் 200 வாலிபர்கள் கலந்து கொண்டு, தேவாசீர்வாதம் பெற கர்த்தர் அவர்களுக்கு தயவு செய்துள்ளார். சுதேச ஊழியர்கள், சபை மூப்பர்கள் மற்றும் உபதேசிமார்கள் யாவருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாக அங்கு நடந்த ஊழியப்பயிற்சி நிகழ்ச்சிகளைக் கர்த்தர் கனப்படுத்தி தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10 கிராமங்களில் நடக்கும் ஆலயக்கட்டுமானப்பணிகள் யாவும் தடையின்றி நடைபெற; குந்தி மற்றும் பத்தல்தேவி கிராமங்களில் நடக்கப்போகும் ஆலயப்பிரதிஷ்டை ஆராதனைகளை தேவன் ஆசீர்வதித்துத் தர; CNI குஜராத் பேராயத்தோடு நமது திருச்சபைகளை இணைத்து அவைகளைத் தன்னிச்சையாக செயல்படச்செய்ய எடுக்கும் முயற்சிகள் யாவும் சுமூகமாக கையாளப்பட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. தேவ கிருபை விஜய் பாபு

**மாண்சா:**

**செல்லதுரை & கனகநேசம்**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. வேத வசனம் மற்றும் ஜெபங்களின் வாயிலாக நமது விசுவாசிகள் ஆவிக்குரிய நற்பண்பு களில் வளர்ந்து வருகின்றனர். போர்ட்ஸ், உனாவா, வெளவல் ஆகிய கிராமங்களில் நடந்த வெளிப்புற சந்திப்பு ஊழியங்களைக் கர்த்தர் பலவிதங்களில் ஆசீர்வதித்து தந்துள்ளமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காவல்துறைப்பணிகளில் இணைய விரும்பி முயற்சிக்கும் நமது வாலிப விசுவாசிகள் அதற்குரிய தகுதித் தேர்வுகளில் வெற்றி பெற; சுவிசேஷத் தின் மீது ஆர்வம் காட்டும் சூரியாபேன், மோனிகா, அனிட்டா, கோபிபாய், தேவராஜ் ஆகியோர் இரட்சிப்படைய; புதிய ஏற்பாட்டைப் பெற்றிருப்போர் அதைச் சீராய்ப் பயன்படுத்தி இரட்சிப்படைய ஜெபிப்போம்.

**ஜாலோத்: குமார் பால் & அமுதா**

**துதிக்க:** சபை மூப்பர்கள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கான கூடுகைகளை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்துள்ளார். குந்தியா கிராம பயலை தேவன் பாம்புக்கடியிலிருந்து காப்பாற்றியுள்ளார். மாதவா கிராம மனிஷா விற்கு தேவன் மழலை செல்வத்தைக் கொடுத்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கலியா கிராம தர்சிங்பாய் மற்றும் ரமேஷ்பாயிற்கு இடையே சமாதான உறவுகள் காணப்பட; லக்கன் பூரில் ஆலயம் கட்டுவதற்கு இருக்கும் தடைகள் மறைய; தனது பணியைச் சரியாகச் செய்யாமல் வாழ்ந்துக் கொண்டிருக்கும் பீட்டர்பாய் மனம்மாற; நமது விசுவாசிகளான கனபாயிற்கும் ரிமிலாபேனிற்கும் குழந்தை பாக்கியங்கள் கிடைக்க ஜெபிப்போம்.

## தாத்ரா & நகர் ஹவேலி

**கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா**

**துதிக்க:** நமது ஊழியத்திற்குப் புதிதாக ஓர் நல்ல சுதேச ஊழியரை தேவன் தந்துள்ளார். தபானா பகுதியில் ஆலயம் கட்டுவதற்குரிய நிலத்தை முறைப்படி நிலப்பதிவு செய்ய தேவன் கிருபை செய்துள்ளார். நமது விசுவாசிகளான பிப்லி கிராம அனிதாபேன் தனது வீட்டின் இரண்டாவது மாடியிலிருந்து விழுந்தபோது கர்த்தர் அவரை அற்புதமாக உயிர்ச்சேதமின்றி பாது காத்துள்ளதற்காகவும், சிஸ்தா கிராம ஸ்ரீவன்பாயைப் பாம்புக்கடியிலிருந்து கர்த்தர் காப்பாற்றியுள்ளதற்காகவும் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்நாட்களில் நடக்க இருக்கும் ஊழிய நிகழ்ச்சிகளில் நமது விசுவாசிகளில் ஏனையோர் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிடக் காத்திருப் பதினால், அவ்வூழிய நிகழ்ச்சிகளில் கர்த்தரின் வல்லமை பலமாய் இறங்க; தபானா கிராம ஆலயக்கட்டுமானப்பணி நல்லமுறையில் நடைபெற; சிண்டி தோலா கிராம சோமாபாய் பக்கவாதத்திலிருந்தும், அனிதாபேன் சரீரக்கட்டிகளிலிருந்தும் அற்புத சுகமடைய; பிப்ரோனி கிராம அனில்பாயிற்கு மழலை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.




# மகாராஷ்டிரா

## காண்ட் பாரா:

**பாலாஜி நெட்டாலம் & ஜெகதீஷ்வரி**

**துதிக்க:** புதிதாக 3 குடும்பங்கள் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க ஆரம்பித்துள்ளனர். முதன்முறையாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கூக்லிபாண்டாவில் வைத்து நடைபெற்ற மூப்பர்கள் கூடுகையையும், பாக்தாத்தில் வைத்து நடைபெற்ற பெண்கள் கூடுகையையும், கர்ஹாரில் வைத்து நடைபெற்ற புதிய விசுவாசிகள் கூடுகையையும் கர்த்தர் நமக்குப் பலவிதங்களில் ஆசீர்வதித்துக் கொடுத்துள்ளார். டாங் கிராமத்தில் புதிதாக வீட்டு ஜெபக்கூட்டத்தைத் துவங்க தேவன் அநுக்கிரகம் ஈந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கலம்பா, ரணலா, நவபாடா ஆகிய கிராமங்களில் வரும்நாட்களில் நடக்கவுள்ள வெளிப்புற சந்திப்பு ஊழியங்களின் ஆசீர்வாதங்களுக்காக; கர்த்தரின் பணியைச் சீரான முறையில் செய்ய நமது சபைமூப்பர்களிடையே தேவசமாதானம் நிலவ; உபவாச ஜெபக் கூடுகைகளில் நமது விசுவாசிகள் உற்சாகமாகக் கலந்து கொள்ள; ரூபேஷை இரத்தச் சம்பந்தமான நோயிலிருந்தும், தேவதாஸைச் சிறு நீரகப் பிரச்சனையிலிருந்தும் மற்றும் சிவராமை மூலப்பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகமாக்கி இரட்சிக்க ஜெபிப்போம்.

## மொல்கி, நர்மதா & வத்ஃபாலி:

**பரணிதரன் & செல்வராணி**

**துதிக்க:** புதிதாக 18 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் சேர்ந்துள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஓல்பாடா, பார்குந்த், வெல்காடி, குவனிசாபாடா, முக்குடி, கிக்தாபரி, தெல் மற்றும் குட பாடா கிராமங்களில் நடந்த பெண்கள் கூடுகைகளின் மூலம் ஏராளமான மக்கள் தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். மொல்கி, நர்மதா மற்றும் வத்ஃபாலியில் உள்ள பணித்தள சபைக்குழுவையும், பார்குந்த் மற்றும் தல்பாடாவில் உள்ள கிராம சபைக்குழுவையும் தேவன் சபை மக்களின் ஆவிக்குரிய நன்மைக் கேதுவாக ஆசீர்வதித்துத் தந்திருப்பதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஆராதனையில் தவறாமல் வந்து கலந்துகொள்ளும் விசுவாசியொருவரின் கணவரான திலீப் இரட்சிக்கப்பட; சல்லிபேன், மொர்தி ஆகிய இடங்களில் நடைபெறப்போகும் இயேசு திரைப்பட ஊழிய நிகழ்ச்சிகளின் மூலம் தேவன் திரளான மக்களுடைய மனக்கண்களைத் திறக்க; பல விதங்களில் நமது ஊழியங்களுக்கு இடையூறு செய்யும் ஆர்த்தி, அமர்சிங், விதால், விக்ரம், சோனு, செல்வராணி ஆகியோர் மனந்திரும்பி கர்த்தரை ஏற்றுக்கொள்ள; புற்றுநோயிலிருந்து சவிதாபாயைக் கர்த்தர் குணமாக்க ஜெபிப்போம்.




## முக்காடா:

**நாகராஜன் & திலகவதி**

**துதிக்க:** புதிதாக 16 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. வேதாகம வகுப்புகள் மற்றும் நல்லாலோசனை நிகழ்ச்சிகள் யாவும் சிறுவர் பராமரிப்பு மையக் குழந்தைகளுக்கென தொடங்கப்பட்டுள்ளன. கதடிபாடா கிராம ரமேஷின் மகளுக்கு ஏற்பட்ட விபத்தினால் உண்டான தலைக்காயத்திலிருந்து அம்மகளையும், ஜெபத்தின் வல்லமையைக் காண்பிக்கும்பொருட்டு அசுத்த ஆவியின் பிடியிலிருந்து நந்துகால் கிராம சுரேகாவையும் தேவன் அற்புதமாகச் சுகப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீராத காய்ச்சலிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்ற பூய்சீத் கிராம சஞ்ஜனிற்கு இருக்கும் சரீரச்சோர்பு போன்ற பெலவீனத்திலிருந்து பூரண சுகம் கிடைக்க; காந்திபூல் கிராம விஷ்ணுவை வாய்ப்பேச இயலாத நிலையிலிருந்தும், கதடிபாடா கிராம ஆராதனாவைக் காதுப்பிரச்சனையிலிருந்தும், ராஜாராம், லட்சுமி, பிரபாகர் ஆகியோரைத் தீராத வயிற்றுப்பிரச்சனையிலிருந்தும் தேவன் விடுவித்துக் காப்பாற்ற ஜெபிப்போம்.

## ஆலப்பள்ளி:

**எலிசா தய்மி, நிங்தௌஜம் அலோன்சிங் & லியான்பியக்நெமி**

**துதிக்க:** புதிதாக 20 நபர்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் விருப்பத்துடன் வந்துள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிக்கென விசுவாசிகள் மத்தியில் 6 குழுக்களைத் தெரிந்தெடுத்து, அவர்கள் மூலம் பக்கத்து கிராமங்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச்செல்ல தேவன் கிருபை பாராட்டியுள்ளார். தாலேந்தி கிராம புஷ்பாபாயை உயர் இரத்தஅழுத்தப் பிரச்சனை மற்றும் சர்க்கரை நோயிலிருந்தும், ஜாங்கவார் கிராம சுனிதாவை இருதயநோய்ப் பிரச்சனையிலிருந்தும், சீத்தம் கிராம மங்களாவை இரத்த வாந்தியிலிருந்தும், கவுசியாலாபாயை அதிக நெஞ்சுசளித் தொல்லையிலிருந்தும் கர்த்தர் முழுசுகம் தந்து விடுவித்திருப்பதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பெத்ரதா, சித்திகனூர், நகபள்ளி, கொம்னி, மல்லேரா, வித்தல்வாடி பகுதிகளில் நடந்த வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் மூலம் கர்த்தரின் வார்த்தையைக் கேட்டுள்ள ஜனங்கள் யாவரும் இரட்சிக்கப்பட; நிகல்வார் பகுதியைச் சார்ந்த நமது புதிய தொடர்பாளர் அரிதாஸ் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட; இந்தாராம் பகுதி ஏலையா, ஆலப்பள்ளி பகுதி சந்தீப் தாகூர், சுவாமி, பீமானி பகுதி திவாகர் மொடப்பி, உம்ரி பகுதி கீதாபாய் மிஷ்ராம், கொரம்பி பகுதி விமேஷ் சான்டி ஆகிய நமது புதிய தொடர்பாளர்கள் யாவரும் கிறிஸ்துவின் விசுவாச மந்தையில் இணைய; சுவிசேஷத்திற்கு விருப்பம் தெரிவிக்கும் மக்கள் வாழும் பகுதிகளில் ஆராதனைக்குழுக்கள் உருவாக ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. அர்ச்சனா மோகன்

## டெக்கான் பிராந்தியம்:
### விஜயன் & ஜெபரோஸ்

**துதிக்க:** காட்சந்தூர் பணித்தளத்தைச் சார்ந்த லினிகுடா, ஹாகுர்வாடா கிராமங்களில் நடத்திய ஊழிய நாடக நிகழ்ச்சிகளை தேவன் மக்களுக்கு ஆசீர்வதித்துத் தந்துள்ளார். காட்சந்தூர் பணித்தளத்தில் ஜீப்குழு மூலம் வெளிப்புற சந்திப்பு ஊழியம் செய்ய கர்த்தர் தயவு பாராட்டியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மடியா திருச்சபைக்குழு அங்கத்தினர்களான 20 பேரும் கர்த்தரில் ஒருமித்து வளரவும், அவர்கள் தங்களது திருச்சபையை ஆவிக்குரிய உற்சாகத்துடன் நடத்தவும், அவர்களுடைய முழு சமுதாயத்தினரையும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் கொண்டு வரவும்; காட்சந்தூர் பணித்தளத்தில் நடக்கும் நமது ஜெபக்கூடுகைகளில் புதிதாக வந்து பங்குப்பெறும் 23 குடும்ப மக்களும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; வெளிப்புற சந்திப்பு ஊழிய மையங்கள் அமைந்திருக்கும் எட்டப்பள்ளியிலுள்ள கட்டா, பண்டேயிலுள்ள இர்பனார், ஆலப்பள்ளியிலுள்ள வித்தல்வாடி & தாபா ஆகிய இம்மூன்று பகுதிகளில் அதிகமான ஆத்தும கனிகள் கிடைக்க; கவேரப்பா, பொடிகாவ், விரூர், பர்வா, நர்னூர், அமிர்குடா ஆகிய இடங்களில் பணி செய்ய அர்ப்பணிப்புள்ள சுதேச ஊழியர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

## திண்டூரி:
### அலெக்ஸ் பிரபு & பிரியா கெத்ஸி

**துதிக்க:** பிரவீன் என்ற வாலிபர் சுவிசேஷத்தின் மீது அதிக வாஞ்சை காட்டுகின்றார். மனிஷ் மற்றும் அவரது குடும்பம் முழுவதும் நமது ஆராதனையில் வந்து புதிதாகப் பங்கேற்கின்றனர். ஜெபத்தின் மூலம் கவிதா அழகிய குழந்தை செல்வத்தைப் பெற்றெடுக்கும் பாக்கியம் பெற்றுள்ளார். ரோகிணியைப் பயத்தின் ஆவியிலிருந்தும், சுரேகாவைக் கெட்ட கனா காணும் பிரச்சனையிலிருந்தும், ஆகாஷை சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும் கர்த்தர் விடுவித்து சுகப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஜெபக்கூட்டத்தில் ஒழுங்காகப் பங்குப்பெறும் அஜய் இரட்சிப்படைய; வில்வந்தி கிராம விதால் மற்றும பன்லாதய் கிராம யோகேஷ் விசுவாசத்தில் அநுதினமும் வளர; அம்லிகன், சதுகாவ், தொண்டிகாவ், ஜல்கத்தே, கோகன்காவ், நயக்வாடி, ஓஜார்கத்தே ஆகிய கிராமங்களில் பின்மாற்றமடைந்து காணப்படும் நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; ஜெய்ஸ்ரீயின் குடும்பத்தில் தேவசமாதானம் நிலவ; சுனிதாவைக் கொரோனா தடுப்பு ஊசியினால் உண்டான மோசமான பக்கவிளைவுகளிலிருந்தும், வைஷ்ணவியை மனநோயிலிருந்தும், கங்காராமை மூலப்பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகமாக்கி விடுவிக்க; அதிக நாட்களாகப் பலவித பாவச்செயல்களில் அடிமைப் பட்டுக் கிடக்கும் மக்களுக்கு அதிலிருந்து முழுவிடுதலை கிடைக்க; நம்முடன் ஊழியத்தில் கரம்கோர்த்துச் செயல்படும் பாஸ்கர், தேவாரம், குலாப், மாதவ், ஜாஜு, ஹிரமான், சுனில் ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. வேணி ஜாண்

## எட்டப்பள்ளி:

## குல்தீப் சிங் & குர்பிரீத் கௌர்

**துதிக்க:** கிறிஸ்தவ விசுவாச வாழ்விற்குள் புதிதாக 4 நபர்கள் வருகை தந்துள்ளனர். 6 கிராமங்களில் முதன்முறையாகக் கிறிஸ்துவின் சுவிசேஷம் எடுத்துச் செல்லப் பட்டுள்ளது. பர்சல்கொண்டி பகுதியைச் சேர்ந்த ருஷி கவாடி, இர்பா மகா ஆகியோரின் குடும்பங்கள் புதிதாக வந்து நமது ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். நமது விசுவாசிகள் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் மூலம் இப்பணித்தளத் திற்கு அருகிலுள்ள 25 கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷத்தை பிரசங்கித்துள்ளனர். பந்தேவாசி திருச்சபையில் வைத்து நடை பெற்ற பெண் தலைவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை அதில் பங்குபெற்ற 33 பெண்களுக்கு தேவன் மிகுந்த ஆவிக்குரிய பயனுள்ளதாய் மாற்றி தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய தொடர்பாளர்களான ராம்சு அத்ரா, இர்பா மகா, ருஷி கவாடி ஆகியோரின் குடும்ப இரட்சிப்பிற்காக; மடியா இன மக்களின் சமிதி தலைவர்கள் திருச்சபை ஊழியத்தில் ஆர்வமுடன் ஈடுபட; ஹல்வாரா மற்றும் கன்சனூர் பகுதிகளில் ஆலயங்கள் கட்டத் தேவையான நல்ல நிலங்கள் கிடைக்க; ஜானு ஹிச்சமி சரீர பெலவீனங்களிலிருந்து சுகமடையவும், ஆத்தும இரட்சிப்படையவும் ஜெபிப்போம்.

## தலாசரி: விஜய்பாபு & தேவ கிருபை

**துதிக்க:** புதிதாக 15 நபர்கள் கிறிஸ்துவண்டை சேர்ந்துள்ளனர். புதிதாக 5 கிராமங்களில் இயேசுவின் அன்பின் நற்செய்தி எடுத் துரைக்கப்பட்டுள்ளது. கான்சா மற்றும் பிப்பள்சேத் பகுதிகளில் சுவிசேஷத்திற் கான திறந்தவாசல் கிடைத்துள்ளது. 2 மணிநேரங்களாக மூச்சுப்பேச்சின்றிக் கிடந்த ஷியாமின் மகனைக் கர்த்தர் உயிர் பிழைக்கச் செய்துள்ளார். ஜெபத்தினால் மகேஷ்பாயின் குடும்பத்தில் மழலை பாக்கியம் கிடைத்துள்ளது. சிவந்திபேனைத் தீய ஆவியின் பிடியிலிருந்து கர்த்தர் விடுவித் திருக்கிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கான்சா, பிப்பள்சேத், சார்னி, ரங்கோல், மெடிகன்ஜ் ஆகிய கிராமங்களில் நடக்க இருக்கும் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளில் தேவ அருள் பொங்கி வழிய; இப்பணித்தளத்திலுள்ள 114 கிராமங்களிலும் சுவிசேஷம் கடந்துச்செல்ல; கண் பிரச்சனையிலிருந்து நந்தாபேன் சுகமடைய ஜெபிப்போம்.

## கண்களை நம்ப முடியவில்லை!

*ஹிமாச்சலப் பிரதேசம், பகத் சாந்தின் மனைவி யும் அவரது குழந்தைகளும் நமது புதிய விசுவாசிகள். ஆனால், பக்த் சாந்தோ கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, அடிக்கடி தனது குடும்பத்தினரையும் ஆராதனைக்குப் போகவிடாமல் தடுப்பார். அவர்களது ஆப்பிள் பழத்தோட்டம் அறுவடைக்கு மிக ஆயத்தமாக இருந்தது. அறுவடைக்கு முந்தைய நாள் எதிர்பாராதவிதமாக அதிக கனமழையும், பனிப்பொழிவும் நேரிட்டன. அதிர்ச்சியில் உறைந்துபோன பகத் சாந்த் நமது ஊழியர்களைப் பிரத்தியட்சமாக தனது பழத்தோட்ட பாதுகாப்பிற்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார். ஊழியர்களும் பகத் சாந்தின் ஆத்தும மீட்பை மனதில் கொண்டு, பாரத்துடன் அவர் சொன்ன காரியத்திற் காக ஜெபித்தனர். விசுவாச ஜெபத்தின் பலன், பகத் சாந்தின் தோட்டத்திலுள்ள எந்தவொரு ஆப்பிள் மரமோ, பழமோ சிறிதும் சேதமடையாதபடி கர்த்தர் பாதுகாத்துக்கொண்டார். பகத் சாந்திற்கோ தன் கண்களை நம்ப முடியவில்லை. ஏனெனில், தனது தோட்டத்திற்கு அருகிலுள்ள பிறருடைய தோட்டங்கள் யாவும் மிகவும் சேதமடைந்திருந்தன. இவ்வாறு தேவனின் அற்புதச்செயலைக் கண்டு பிரமித்த பகத் சாந்த் தற்போது தனது குடும்பத்தாருடன் தேவனை ஆராதிக்க கிரமமாக ஆலயத்திற்கு வருகின்றார். அல்லேலூயா!*




பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. லிபெனி ஜமி

### குண்டாமோடி: பிதுயூத் குமார் சிங்

**துதிக்க:** புதிதாக இரு நபர்கள் கிறிஸ்துவின் அன்பை ருசிக்கத் தொடங்கியுள்ளனர். புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. தலாய்மல் மற்றும் ஹோடு பகுதிகளில் நடத்திய மாலைநேர ஆவிக்குரிய கூட்டங்களின் மூலம் 75 பேர் ஆவிக்குரிய நன்மையைப் பெற்றுள்ளனர். அமுகியநிலையில் இருந்த தலாய்மல் கிராம பூலாபாயின் கால்களில் தேவன் அற்புத சுகம் கொடுத்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பன்பாரி மற்றும் மோக் பகுதி களின் திருச்சபை மக்களிடையே தவறான கருத்துக்களைப் பரப்பும் நமது முன்னாள் சுதேச ஊழியர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து மனம்மாற; புதிய இடங்களில் நடக்கவுள்ள ஊழிய நிகழ்ச்சிகளைக் கர்த்தர் ஆசீர்வதித்துத் தர; இரத்த அணுக்கள் கோளாறினால் கஷ்டப்படும் அம்ருத் பத்வியும், அவரது மகன் ஈஸ்வர் பத்வியும் விரைவில் பூரண குணமடைய ஜெபிப்போம்.

### வடாலி: மூர்த்தி & பாரதி

**துதிக்க:** அன்ரத்பாரி கிராம நமது ஆராதனையில் அநேக புதிய குடும் பங்கள் வந்து பங்கேற்கின்றனர். கௌதுடி, வட்சில், அன்ரத்பாரி, நிம்போரா ஆகிய கிராமங்களில் நடந்த வெளிப்புற சந்திப்பு ஊழியங்களை தேவன் வெகுவாக ஆசீர்வதித்துக் கொடுத்துள்ளார். நிம்போரா கிராம லட்சுமிபாய் மற்றும் அன்ரத்பாரி கிராம சீதாபாயைத் தீராத காய்ச்சலிலிருந்து தேவன் குணப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மொகிதா கிராம கிரண் பாயின் குடும்பம் மனந்திரும்பி நமது ஆராதனையில் வந்து ஒழுங்காகப் பங்குப் பெற; பின்மாற்றமடைந்திருக்கும் நமது உபதாகெத் மற்றும் புன்வசான் கிராம விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; நமது விசுவாசி ரக்கேபாயிற்கு நல்ல வேலையொன்று கிடைக்க ஜெபிப்போம்.

## கர்நாடகா

### ஷிறஹட்டி: ஆஷாபிரப்தா பால் & தீனாகுமாரி பெபர்தா

**துதிக்க:** நமது ஆராதனையில் புதிதாக 3 நபர்கள் தொடர்ச்சியாக வந்து கலந்து கொள்கின்றனர். சுவிசேஷத்தை அதிகமாய் எதிர்த்து வந்த பர்சப்பா தற்போது சுவிசேஷத்தின் மீது அலாதி பிரியம் காட்டுகின்றார். பிரகாஷின் வாழ்வாதாரத் தேவைக்கேற்ப ஓர் சிறிய வியாபாரத்தைத் தொடங்க கர்த்தர் அவருக்குக் கிருபை செய்துள்ளார். நமது ஊழியர் சகோதரி. சுனந்தாவிற்கு தேவன் அருமையான வாழ்க்கை துணையை அருளியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அசுத்த ஆவியின் பிடியி லிருந்து முழுவதுமாக மத்திவக்கா விடுதலை பெற; காவல்துறைப் பணி களுக்கென காத்திருக்கும் நமது விசுவாசி களான கிருஷ்ணாவிற்கும் சல்மா விற்கும் தேவன் கிருபையளிக்க; சிவ லிங்கா இருதயக்கோளாறிலிருந்தும், முத்தண்ணா சிறுநீரகப் பிரச்சனை யிலிருந்தும் அற்புத சுகமடைய ஜெபிப் போம்.




### ஷிக்காவ்: சுனில் குமார் & சங்கீதா

**துதிக்க:** புதிதாக 50 நபர்கள் நமது ஆராதனையில் வந்து தேவனைக் கிரமமாக ஆராதிக்கத் தொடங்கியுள்ளனர். நமது இளவயது விசுவாசி புஷ்பாவிற்குத் தனது செவிலியர் பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கவும், நல்ல மருத்துவமனையொன்றில் சிறப்பாய்ப் பணியில் அமரவும் கர்த்தர் அநுக்கிரகம் செய்துள்ளார். செங்கற்கட்டுகள் தீக்ஷாவின் மீது சரிந்து விழுந்து விடாதபடி தேவன் அவரைப் பாதுகாத்திருக்கிறதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சந்தோஷ், செக்கப்பா மற்றும் பிஜாக்காவின் இருபிள்ளைகள் நமது ஆராதனையில் தவறாமல் வந்து பங்குப்பெற; பலவிதங்களில் எதிர்ப்பைச் சந்திக்கும் நமது துந்தாசி சபை விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் ஸ்திரமாய் நிற்க ஜெபிப்போம்.

### கானாப்பூர்:
### வினயராஜ் & சாந்தா வினயராஜ்

**துதிக்க:** கானாப்பூர் மற்றும் நந்தன்கத்தா பகுதிகளின் சபை மூப்பர்கள் தங்களது ஊழியர் சகோ. வினயராஜ் தனது சுகவீனத்தினிமித்தமாகச் சபைக்கு வராமலிருக்கும் பட்சத்தில், தாங்களாகவே சபை ஆராதனைகளைத் தொய்வின்றி சிறப்பாக எடுத்து நடத்தி, தேவ நாமத்தை மகிமைப்படுத்தி வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வேலூர் மருத்துவமனையில் (CMC) தொடர்ந்து சிகிட்சை பெற்றுவரும் நமது ஊழியர் சகோ. வினயராஜிற்கு தேவன்தாமே மேலான பரிகாரியாக இருந்து விரைவில் அற்புத சுகம் தர கண்ணீருடன் ஜெபிப்போம்.

## ஆந்திரப் பிரதேசம்

### தாமலச்செருவு:
### பிரசாந்த் மீசலா & ரூபா குமாரி; ஜாண்டேவிட்ராஜ் & ஞானசேகரி

**துதிக்க:** கொடுகுசிந்தா பகுதியிலிருந்து 6 நபர்கள் புதிதாக இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். தின்னிபெட்டா மற்றும் கட்டகிந்தபள்ளி கிராமங்களில் மீண்டும் ஆராதனைகள் துவங்கப்பட்டுள்ளன. தின்னிபெட்டா கிராம டேனியல், சல்லவாரிபள்ளி கிராம கலாவதி மற்றும் தாமலச்செருவு பகுதி ஐசக் ஆகியோரது குடும்பங்கள் மீண்டும் ஆராதனைக்கு வரத் தொடங்கியுள்ளனர். தாமலச்செருவு, ராவணாயஹரிபள்ளி, ராமாபுரம், பட்டூர் ஆகிய பகுதிகளைச் சார்ந்த ஆலயங்களில் மின்கம்பி சம்பந்தமான கோளாறுகள் சரிசெய்யப்பட்டுள்ளன. ஏறத்தாழ அனைத்துத் திருச்சபைகளும் புத்துயிர் பெற தேவன் கிருபை செய்துள்ளதோடு, புதிதாக 10 நபர்களைத் திருச்சபையில் இணைக்கவும் ஆயத்தப்படுத்திக் கொண்டிருப்பதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மாதந்தோறும் அனைத்து 2-ம் சனிக்கிழமைகளிலும் நடக்கும் தலைவர்கள் பயிற்சி நிகழ்ச்சிகளை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்துத் தர; நமது மிஷனெரி ஆதரவாளர் திரு. மூர்த்தி அவர்களின் மரணத்தை முன்னிட்டு அதிகக் கவலையோடிருக்கும் அவருடைய குடும்பத்தாருக்கு தேவன் நல்ல மனஆறுதலைத் தர; தங்களது விசுவாசத்தைச் சபையார் முன் அறிக்கையிட ஆயத்தமாகும் நமது புதிய விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஹேமலதா ரவிராஜ்

## மதனபள்ளி:

### வெங்கடேசன் & சசிகலா

**துதிக்க:** புதிதாக நாகப்பா மற்றும் கங்குலம்மா தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளனர். சிங்கிரிகுந்தா கிராம வாலிபப்பிள்ளைகளான வினித், இந்து, பாரதி, காயத்ரி, ஜோதி, தீனாகுமாரி, நிரஞ்ஜினி ஆகியோர் வேத வசனத்தின் மீது அதிக ஆர்வம் காட்டுகின்றனர். பாம்புக்கடியிலிருந்து பிரமிளாவையும், கர்ப்பப்பை பிரச்சனையிலிருந்து ஈஸ்வரம்மா வையும் தேவன் காப்பாற்றியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இன்னும் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டிராத அருகாமையிலுள்ள இடங்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச்செல்ல தேவையான மிகுந்த அர்ப்பணிப்புள்ள ஆட்கள் கிடைக்க; தொண்டுலூரு பகுதியில் தொடங்கப்பட்டுள்ள சிறுவர் வேதாகம வகுப்புகள் தொய்வில்லாமல் தொடர்ச்சியாக நடைபெற; கமலம்மாவைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் மீட்க; தொண்டுலூரு பகுதியில் கர்த்தரை ஆராதிக்க நிரந்தரமான ஓரிடம் கிடைக்க; வரும்நாட்களில் நடக்கவுள்ள அனைத்து ஜெபக்கூடுகைகளின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிப்போம்.

## புலிவேந்துலா:

### விஜய் குமார் & சுஷீலா

**துதிக்க:** ராமாபுரத்தில் நடத்திய ஆத்தும ஆதாய நிகழ்ச்சிகளின் மூலம் 5 நபர்கள் புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்டு அவருடைய விசுவாச மந்தையில் இணைந்துள்ளனர். நமது விசுவாசிகளுக்கு தேவன் விவசாயப்பலனில் நல்ல ஆசீர்வாதத்தைக் கட்டளையிட்டுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கலாம் குந்தலபள்ளி பகுதியில் சிறியதொரு ஆலயம் கட்டப்பட; கலாம் குந்தலபள்ளி, அடப்பவந்தலபள்ளி ஆகிய கிராமங்களில் ஞாயிறு வேதாகமப்பள்ளி வகுப்புகள் மீண்டும் தொடங்கப்பட; 3 வேதாகம வகுப்புக்குழுக்களைச் சேர்ந்தோர் தவறாமல் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க; பெரிய விபத்தினால் படுத்தப்படுக்கையாக இருக்கும் சரஸ்வதி பள்ளி கிராம வேணுகோபால் தனது தலையில் ஏற்பட்டுள்ள காயத்திலிருந்து விரைவில் அற்புத சுகம் பெற்று எழும்பி நடக்க ஜெபிப்போம்.

## அதிசயத் தொடுதல்!

*மகாராஷ்டிரா, காட்சந்தூர் பணித்தளம். சந்திராபூர் பகுதியைச் சேர்ந்த லலிதா ஜாதவ், நமது துக்கும் திருச்சபையின் ஓர் புதிய தொடர்பாளர். இவர் இரத்தப் புற்றுநோயினால் அவதிப்பட்டு வந்தபடியால், அங்குள்ள அரசு மருத்துவமனையொன்றில் சிகிட்சைக்காக அனுமதிக்கப்பட்டார். ஆனால் இவருடைய உடல்நிலை மிகவும் ஆபத்திற்குள்ளானதாய் மாறிக்கொண்டிருந்ததால், இவரை உடனே மேற்சிகிட்சைக்காக நாக்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல மருத்துவர்கள் பரிந்துரைத்தனர். நமது விசுவாசிகளில் பலரும், தேவ ஊழியர்களும் இவருடைய ஜீவனுக்காகக் கர்த்தரிடத்தில் மன்றாடி ஜெபித்தனர். இப்பெண்மணி மருத்துவமனையில் உணவுக்குக்கூட பணமின்றித் தவித்தபோது, நமது விசுவாசிகள் பலரிடமும் சென்று பணம் சேகரித்து இவருக்கு ஏற்ற உதவிகளை ஓடியோடிச் செய்தனர். இதைக் கண்ட தேவன், இவருடைய நோய்வாய்ப்பட்ட சரீரத்தைத் தொட்டார். என்ன அதிசயம்!! இறுதியில் மருத்துவப் பரிசோதனையில், இவருடைய உடல்நிலை மிக ஆரோக்கியமாக இருப்பதாகவும், இனி இது சம்பந்தமாக எந்தத் தொடர் சிகிட்சையும் இவருக்கு அவசியமில்லை என்றும் மருத்துவர்கள் கூறிவிட்டனர். தாங்கொண்ணா சந்தோஷத்தில் திளைத்துப் போன இப்புதிய தொடர்பாளர் நமது ஞாயிறு ஆராதனையில் கலந்துகொண்டு, கர்த்தருடைய அதிசயத் தொடுதலை சாட்சியாகப் பகிர்ந்து கொண்டு கர்த்தரை மகிமைப்படுத்தினார். அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேவிட் மஸிஹ்
திருமதி. பாருட் சிலாபாய் ரடியா

## கலக்கடா: வேடியப்பன் & லக்ஷ்மி

**துதிக்க:** புதிதாக 8 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ராமராவ்பள்ளி கிராம கௌரம்மா, கோத்த பள்ளி கிராம பிரமிளா, துர்கா, அஞ்சலி, ரமேஷின் குடும்பம் ஆகியோர் நமது ஆராதனையில் தவறாமல் வந்து கலந்து கொள்ள தேவன் ஒத்தாசை காண்பிக் கின்றார். தவறான கருத்து வேறுபாட்டினால் 3 ஆண்டுகள் பிரிந்திருந்த சிரவாணி & சதீஷ் தம்பதியர் ஜெபத்தின் உதவியால் கிருபையாக மீண்டும் ஒன்று சேர்ந்திருக் கின்றனர். நமது விசுவாசிகள் ஹேமந்த் மற்றும் ஹேமலுவிற்கு நல்ல அரசாங்க வேலைகள் கிடைக்க தேவன் அருள்புரிந் துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சில எதிர்ப்பாளர்களினால் ஆராதனைக்கு வர இயலாமல் தடைப் பட்டிருக்கும் கும்ராம்கொண்டா கிராம சின்னக்காவிற்கு அத்தடைகளை மேற் கொள்ள தேவன் ஆத்ம பெலன் தரவும், எதிர்ப்பாளர்கள் மனம்மாறவும்; நுரையீரல் பிரச்சனையிலிருந்து ராதிகாவையும், கண் பிரச்சனையிலிருந்து அம்மாஜியையும் தேவன் சுகம் தந்து விடுவிக்க; ராம் அஞ்சலிக்கு எதிராக வைக்கப்பட்டிருக்கும் பில்லிசூனியக் கட்டுகள் யாவும் நிர்மூல மடைய ஜெபிப்போம்.

## அனந்தப்பூர் பிராந்தியம் & சில்லமத்தூர்:

### பால் ரவிராஜ் & ஹேமலதா

**துதிக்க:** மல்லப்பள்ளி, பாலண்ணா ஹரிபள்ளி, எர்ராபள்ளி, களிகுந்தலபள்ளி, கனஹனபள்ளி, திம்மாடிபள்ளி ஆகிய 6 கிராமங்களில் நமது ஊழியர்கள் தடையின்றி ஊழியம் செய்து வர தேவன் கிருபை செய்துள்ளார். குடிகொண்டா சபையில் வைத்து நடத்திய சபை மூப்பர்கள் கூடுகை பலருக்கும் ஆசீர்வாதமாய் அமையும்படி தேவன் கிரியை செய்திருக் கின்றார். சோமகட்டா கிராம நந்தினி மலேரியா காய்ச்சலிலிருந்தும், இந்து கழுத்துக்கட்டியிலிருந்தும் சுகமடைந் துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சோமகட்டா, குடிகொண்டா, குட்டசமலபள்ளி ஆகிய கிராமங்களில் நடைபெறும் நமது ஆராதனைகளில் அநேக மக்கள் வந்து கலந்துகொண்டு, ஆத்தும மீட்புப் பெற; குகவண்டலபள்ளி மதிரெட்டிபள்ளி, முரசவண்டலபள்ளி, சிப்பரெட்டிபள்ளி, கோத்தபள்ளி, புதிக் பெத்தபள்ளி, பாப்பிரெட்டிபள்ளி, முத்து ரெட்டிபள்ளி, தண்டாபள்ளி ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; வினய், சாமுவேல், அசோகா, வெங்கடேசா, தேவா, சிரஞ்ஜீவி ஆகிய நமது இளம் விசுவாசிகள் சபைச்செயல் பாடுகளில் ஆர்வமுடன் ஈடுபட; நமது விசுவாசிகளான நரசிம்மா, ராமஞ்ஜி, சூரி, பன்னி, ஷைலஜா, கௌதமி, ராமக்கா, லட்சுமிபாய், ரமாபாய், சுவப்னா ஆகியோர் தங்களது விசுவாசத்தில் ஸ்திரப்பட; கிறிஸ்தவ நம்பிக்கையின் மீது பற்றுள்ள முன்னாள் கிராமத்தலைவர்களான சோமசேகர், பாலாஜி, அஷ்வத்தப்பா மற்றும் தற்போதைய தலைவரான ராஜாரெட்டி அனைவரும் கிறிஸ்துவின் சிலுவையன்பைச் சொந்தமாக ருசிக்க; நமது ஊழியத்தை எதிர்க்கும் சீனப்பா, திருபட்டையா, முரளி, ஹரிஷ் ரெட்டி ஆகியோர் மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மணிசெல்வி சாரதி

### ரோதம்: தேபதத்தா லிமா & சோனியா ராணி

**துதிக்க:** நமது விசுவாசி ஹரிஷிற்கு தேவன் தகுந்த வேலையொன்றைக் கட்டளையிட்டுள்ளார். நவஜோரியைச் சிறுநீரகப்பிரச்சனையிலிருந்தும், இஞ்ஜித்தை அதிக சளி இருமல் தொல்லையிலிருந்தும், ஸ்ரீனிவாஸை விபத்தினால் உண்டான காயங்களிலிருந்தும் தேவன் சுகப்படுத்தியுள்ளார். ஜெபத்தின் வாயிலாக தேவன் நமது ஹனுமக்காவின் சிறிய வியாபாரத்தின் மூலம் அவரது வாழ்வாதாரத் தேவைக்கேற்ற வருமானத்தை வரச் செய்கின்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தின் மீது நாட்டம் கொண்டுள்ள நரசம்மாவின் குடும்பத்தை தேவன் இரட்சிக்க; நமது விசுவாசிகள் அனைவருடைய குடும்பத்ினரும் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்துச்சேர; கோவிந்தம்மாவைக் கொடிய காய்ச்சலிலிருந்தும், சானிபள்ளி கிராம ஷைலஜாவைப் பிள்ளைப்பேற்று அறுவை சிகிட்சையினால் உண்டான தொற்றிலிருந்தும், லட்சுமிதேவியை நாள்பட்ட வியாதியிலிருந்தும் தேவன் சுகப்படுத்த ஜெபிப்போம்.

### கொத்தச்செருவு & பெனுகொண்டா: தேசாய் திலீப் பாய் & ராந்தே லக்ஷ்மிபேன்

**துதிக்க:** மரவக்குந்தலபள்ளி, நாகிபள்ளி, சோமண்டிபள்ளி ஆகிய இடங்களில் நடந்த வெளிப்புற சந்திப்பு ஊழியங்களை தேவன் வெகுவாக ஆசீர்வதித்துத் தந்துள்ளார். எர்ராபள்ளி கிராம பிரார்த்தனாவைக் குடற்புண் காய்ச்சலிலிருந்தும், சென்னார்ஜுபள்ளி நரசம்மாவைத் தீராத வியாதியிலிருந்தும் தேவன் சுகமாக்கியுள்ளார். மரவபள்ளி கிராம ஒபுலேசு அசுத்த ஆவியின் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளார். மரவபள்ளி கிராம நமது புதிய தொடர்பாளர் லட்சுமி கர்த்தரை ஆராதிக்க தவறாமல் ஆலயத்திற்கு வருகின்றார். ஊக்கமான ஜெபம் மற்றும் ஞான ஆலோசனைகளுக்குப்பின் இஸ்லாபுரம் கிராம ஸ்ரீனிவாசலு தனது தற்கொலை முயற்சியைக் கைவிட கர்த்தர் கிருபை செய்திருப்பதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசி வெங்கடராமலுவின் நிலப்பிரச்சனை சுமூகமாகத் தீர; பின்மாற்றத்திற்குள்ளிருக்கும் அஞ்சலி மற்றும் கங்கம்மா மீண்டும் கர்த்தரை விசுவாசிக்கத் தொடங்க; மம்மவாருபள்ளி கிராம துளசிக்கு சுகப்பிரசவம் நடக்க; ஷகாராவின் குடும்பத்தில் தேவசமாதானம் ஆட்கொள்ள; லட்சுமி, நரசிம்மா, பிரபாவதி, மல்லிகார்ஜுனா ஆகியோரது குடும்பங்கள் இரட்சிப்பிற்குள் வர; நமது புதிய விசுவாசிகளான கோவிந்தம்மா மற்றும் திம்மய்யா தங்களது சரீர பெலவீனங்களினிமித்தம் விசுவாசத்தில் சோர்ந்து போகாமலிருக்க; பல இடங்களில் நமது ஊழியத்தை எதிர்ப்போர் அனைவரும் கிறிஸ்துவுக்குள் மனந்திரும்ப; சோமண்டிபள்ளி கிராம நமது புதிய தொடர்பாளர்களான மது மற்றும் திப்பம்மாவின் இரட்சிப்பிற்காக; லட்சுமி, நளினி, நந்து, சங்கரா, தீக்ஷித், பத்மாவதி ஆகியோர் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட; சகரியா, எலிசபெத் மற்றும் ரமாஜினம்மா நமது ஆராதனைகளில் தவறாமல் வந்து கலந்து கொள்ள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. அன்பையா P., திரு. அருண்குமார் G.
திரு. டேனியல் மார்வெல்ராஜ்

## சி.கே. பள்ளி:

### கென்னத் கரியப்பா & கீதா

**துதிக்க:** நமது ஊழியர் சகோ. கென்னத் கரியப்பாவிற்கு ஏற்பட்ட பெலவீனத்தினிமித்தம் மருத்துவர்களால் புற்றுநோய்க்கான மருத்துவப்பரிசோதனை செய்யப்பட்டு, பின்பு அது புற்றுநோய்க்கான பெலவீனமல்ல என நிரூபிக்கப்பட தேவன் செய்துள்ள மகத்தான கிரியைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியர் சகோ. கென்னத்தும் அவரது மனைவியும் தங்கள் வாழ்வில் கர்த்தர் செய்த அற்புதக் கிரியைகளை எண்ணிப்பார்த்து, தங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள இப்புதிய பணித்தளத்தில் கர்த்தருக்கென பெரிய காரியங்களை நற்சாட்சியுடன் சாதிக்க ஜெபிப்போம்.

## நல்லமடா விரிவுப்பகுதி:

### தினேஷ் மரையா & மேரி முர்மு

**துதிக்க:** நமது ஊழியர்கள் கோத்தபள்ளி, பிம்மனகொண்டபள்ளி மற்றும் தண்டா ஆகிய 3 கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷம் அறிவித்துள்ளனர். நல்லமடா கிராம மக்கள் யாவரும் சுவிசேஷ வார்த்தைகளைக் கேட்க மிகுந்த ஆவலுடன் உள்ளனர். நமது விசுவாசிகளில் பலர் தாங்களாகவே சுவிசேஷத்தைத் தங்கள் உறவினர்களிடம் பகருகின்றனர். ரெட்டிபள்ளி, ராமாபுரம், பொகலபள்ளி, ராகனிபள்ளி, கோபானபள்ளி, எதுலவண்டலபள்ளி, அப்பையா காரிபள்ளி, கோத்தபள்ளி, பிம்மனகொண்டபள்ளி, தண்டா படவண்டலபள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியங்களை தேவன் அநேகருக்கு ஆசீர்வாதமாக மாற்றித் தந்துள்ளார். நமது புதிய தொடர்பாளர் பாய்னாவிற்கு வேதவசனம் மீது தேவன் கொடுத்துள்ள மனவாஞ்சைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய தொடர்பாளர்களான சிலபதி, லட்சுமன் ரங்கம்மா மற்றும் பாய்னாவிற்கு கிருபையாய் தேவன் தமது இரட்சிப்பை அருள; சிவாரெட்டி மற்றும் வெங்கடேஷ் ரெட்டியின் குடும்பங்களில் தேவ சமாதானம் நதி போல ஓட; ரெட்டிபள்ளி கிராம லட்சுமிதேவி மற்றும் கங்கம்மாவிற்குக் குடற்புண் காய்ச்சலிலிருந்தும், ராமாபுரம் கிராம சின்னாதேவிக்கு கண் பிரச்சனையிலிருந்தும், ஓபலம்மாவிற்குத் தீராத கால்வலியிலிருந்தும் தேவன் சுகம் கொடுக்க ஜெபிப்போம்.

# தமிழ்நாடு

## திருவள்ளூர்:

### பால் ஆனந்தன் & சாரா ஜோதி

**துதிக்க:** நமது விசுவாசிகளான கவிதா & கோவர்தன் மற்றும் தெய்வானை & சிட்டிபாபு தம்பதிகளுக்கு தேவன் அழகிய குழந்தை செல்வங்களை ஈந்து ஆசீர்வதித்துள்ளார். தீராத பல நோய்களிலிருந்து பட்டம்மாவிற்கு தேவன் தந்துள்ள சுகத்திற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காககந்திகை கிராம மக்கள் இரட்சிப்படைய; தனது தாயாரை இழக்கக் கொடுத்து தவிக்கும் தட்சணாமூர்த்தியின் குடும்பத்தினரை தேவன் ஆறுதல்படுத்த; நமது விசுவாசிகளின் பிள்ளைகளுடைய கல்வி நிலைகள் மேம்படவும், எதிர்காலத்தில் அவர்கள் கர்த்தருக்குச் சாட்சியாக எழும்பிப் பிரகாசிக்கவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சௌதரி ராஜேஷ் தாவ்லிபாய்
திரு. அனில் மாகாளி

## தமிழ்நாடு மண்டல அலுவலகம்:

### ஆல்பின் & விஜயராணி

**துதிக்க:** புதிதாக 20 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் சேர்ந்துள்ளனர். பெரியமலை மற்றும் பல பணித்தளங்களை 7 ஜெபக் குழு அங்கத்தினர்கள் நேரில் சென்று பணித்தள விஜயம் செய்ததினிமித்தம் கர்த்தருடைய பணியை இன்னும் வெகு ஆர்வமுடன் செய்ய நமது ஜெபக்குழு அங்கத்தினர்களும் நமது ஊழியர்களும் ஆவியில் உற்சாகப்படுத்தப்பட்டுள்ளனர். விவசாய நிலத்தில் புல் என நினைத்து பாம்பைக் கையில்பிடித்து வெட்டியபோது, ராணியை தேவன் பாம்புக்கடியிலிருந்து அற்புதமாக மீட்டுள்ளார். ஜெபத்தினால் பெரியதம்பி மற்றும் மேரியின் குடும்பத்தை அசுத்த ஆவியின் பிடியிலிருந்து கர்த்தர் காப்பாற்றியுள்ளார். தவறான புரிந்து கொள்ளுதலினால் ஏற்பட்ட சில மாதப் பிரிவிற்குப் பின் ராணியின் 3-வது மகளை தேவன் அவரது கணவருடன் சேர்ந்து வாழும்படி உதவி புரிந்துள்ளார். ஜெனிஃபருக்கு சுகப்பிரசவம் நேரிடவும், சிடுமல்தி கிராம மாடப்பன் பக்கவாதத்திலிருந்து சுகம் பெறவும் கர்த்தர் தயவு காண்பித்துள்ளார். தொழிலினிமித்தம் பீஹாருக்குப் புலம் பெயர்ந்துச் சென்ற மீனாக்ஷியின் கணவர் பத்திரமாக வீடு வந்துச்சேர தேவன் பாராட்டியுள்ள நன்மைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வையப்பன், லட்சுமணன், ராஜன், சிவா, முனிராஜ், முனியம்மா ஆகியோரின் இரட்சிப்பிற்காக; ஓய்வு பெற்ற நமது ஊழியர் சகோ. மேத்யூ ஜெபராஜ் தனக்கு ஏற்பட்டுள்ள பக்கவாதப் பிரச்சனையிலிருந்து அற்புத சுகம் பெற; எட்டாவட்டி கிராம சிவா மற்றும் பசுபதி குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; ஹிந்தி மொழி பேசும் மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களுக்காக; விபத்தினால் தனக்கு ஏற்பட்ட காயங்களின் மீது ஜெபத்துடன் எண்ணெய்ப்பூசி வரும் நமது விசுவாசி ஜாண் பரிபூரண சுகம் பெற ஜெபிப்போம்.

## *வாக்குப் பண்ணினவர் உண்மையுள்ளவர்!*

*குஜராத், அஹ்வா & டாங் வெளிப்புற சந்திப்பு ஊழியம். காப்ரி கிராம ரமேஷ்பாய் & சுமித்ராபேன் தம்பதியர் தங்களது நிலத்தை உழுதுவிட்டு, தங்களுடைய உழுவை மாடுகளுடன் தங்களின் இல்லத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். இல்லத்திற்குப் போகும் வழியில் அவர்கள் ஓர் ஆற்றைக் கடந்தாக வேண்டும். அன்று அது ஓர் மாலைநேரம்! அவர்கள் ஒன்றொடொன்று கட்டப்பட்ட தங்களது உழுவை மாடுகளுடன் ஆற்றில் இறங்கினர். அப்பொழுது ஆற்றுநீரின் அளவு முழங்கால் அளவே இருந்தது. ஆனால் அவர்கள் ஆற்றின் நடுப்பகுதிக்கு வரும்போது, ஆற்றின் உயர்ந்த மலைப்பகுதியில் அதிக கனமழை பெய்துக்கொண்டிருந்ததினால், இங்கே அவர்களுக்கு ஆற்றுநீரின் அளவு மிக வேகமாக உயரத் தொடங்கியது. ஆனால், அவர்கள் அக்கரையை அடைய இன்னும் 5 லிருந்து 7 நிமிடங்கள் வரை ஆகக்கூடும். எனவே, அவர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை! ஆற்றின் நீரோட்டமும் மிகக் கடுமையான வேகத்தில் இருந்தது. மாடுகளும் ஒன்றொடொன்று கட்டப்பட்டு இருந்ததினால் அவைகளால் துரிதமாக நீந்தவும் முடியவில்லை; அவர்களுக்கும் அவைகளை விரட்டி முடுக்கி விடவும் முடியவில்லை. இந்தச் சூழ்நிலையில் ரமேஷ்பாயிற்குத் தனது மாடுகளை விட்டுவிட்டு ஓடவும் மனமில்லை. ஆகவே “நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை” என்று வாக்குப் பண்ணியுள்ள கர்த்தரிடம் தங்களைக் காப்பாற்றும்படி ஒருகணம் மன்றாடினார். வாக்குப் பண்ணினவர் உண்மையுள்ளவரல்லவா! யோசுவாவையும் அவனுடைய கூட்டத்தையும் கொண்டு யோர்தானைக் கடக்கச் செய்த தேவன், ரமேஷ்பாயையும் அவரது மனைவியையும் அவர்களது உழுவை மாடுகளையும் எச்சேதமுமின்றி கரை சேர கிருபை செய்தார். அல்லேலூயா!*

மிஷனெரி ஆல்பம்

370

தமிழ்நாடு, கிருஷ்ணகிரி மாவட்டம், மேடுபள்ளி என்ற கிராமத்தில் திரு. கரியப்பா & திருமதி. தொட்டம்மா என்ற கிறிஸ்தவரல்லாத தம்பதியருக்கு ஏழாவது பிள்ளையாக பிப்ரவரி 7-ம் தேதி, 1974-ம் ஆண்டில் பிறந்தார். இவர் 9-ம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த சமயத்தில், ஒரு தேவமனிதரிடமிருந்து ஒரு சுவிசேஷப்பிரதியைப் பெறும் வாய்ப்பு கிட்டியது. அதில் 115-ம் சங்கீதம் குறிப்பிடப்பட்டு இருந்தது. அதை வாசித்தபொழுது, 'இயேசுவே, மெய்யான தேவன்!' என நம்பும்படியாக அவ்வார்த்தைகள் இவர் உள்ளத்தில் இடைப்பட்டன. 1992-ம் ஆண்டு இவர் பொறியியலில் தனது டிப்ளமோ படிப்பைப் படித்துக்கொண்டிருக்கும்போது, 'இயேசுவே கர்த்தர்!' என அறிக்கையிட்டு, தனது கிராமத்திலேயே முதல் விசுவாசியாக திருச்சபையில் வந்து இணைந்தார். பின்பு சேலம், டேனிஷ்பேட்டையில் நடந்த நமது இயக்க தமிழ்நாடு மாநில முகாமில் பங்குப்பெற்று, தன்னை முழுநேர மிஷனெரிப்பணிக்கென அர்ப்பணித்தார். அதன்படி 1994-ம் ஆண்டு இவர் நமது இயக்கத்தில் இணைந்து, பின்பு தனது குடும்ப சூழ்நிலையினிமித்தம் சிலகாலம் தன்னார்வ ஊழியராகப் பணிபுரிந்தார். அதன்பின் பெத்தேல் வேதாகமக் கல்லூரியில் தனது B.Th., பட்டப்படிப்பைப் படித்து முடித்தார்.

சகோதரி. ஜெயந்தி, ஏப்ரல் 10-ம் தேதி, 1979-ம் ஆண்டில் கிறிஸ்தவரல்லாத குடும்பத்தில் திரு. பத்தியப்பன் & திருமதி. லட்சுமி என்ற தம்பதியருக்கு மூத்த மகளாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உலகம் என்ற கிராமத்தில் பிறந்தார். ஒருமுறை நமது இயக்க மிஷனெரிகள் இவருக்காக ஜெபித்தபோது, இவர் பிசாசின் பிடியினால் உண்டான கட்டிலிருந்து கர்த்தரால் விடுவிக்கப்பட்டார். எனவே இவர் இயேசுகிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, 1996-ம் ஆண்டில் திருச்சபையில் வந்து இணைந்தார்.

சூளகிரி பணித்தளத்திலேயே முதல் கிறிஸ்தவ திருமணமாக சகோ. பிரான்சிஸ் & சகோதரி. ஜெயந்தியின் திருமணம் 1996, ஜூன் மாதம் 26-ம் தேதியில் சிறப்பாக நடைபெற்றது. பின்னர் சகோதரி. ஜெயந்தி ஒருநாள் தனது கனவில், கர்த்தரின் கண்களில் தனக்கு தயவு கிடைத்ததாகக் கண்டதினால் தன்னைக் கர்த்தருடைய பணிக்கென அர்ப்பணித்தார். எனவே, ஜூன் 2006-ல் இவர்கள் முழுநேரப் பணியாளர்களாக நமது இயக்கத்தில் வந்து குடும்பமாக இணைந்தனர். அதன்பின் கர்நாடகாவில் சுவிசேஷ ரத ஊழியத்திலும் பின்பு வட கர்நாடகா, பங்காரப்பேட்டை, மாலூர் ஆகிய இடங்களிலும் பணியாற்றி, தற்போது குடும்பமாக கர்நாடகா மாநிலம், கௌரிபித்தனூர் பணித்தளத்தில் பணியாற்றி வருகின்றனர்.

கர்த்தர் இவர்களுக்கு மூன்று பெண் பிள்ளைகளைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகள் ரீனா (D.O.B: 04.04.1997) B.Tech., படிப்பு முடித்துள்ளார்; இரண்டாவது மகள் பிரியா (D.O.B: 08.07.2003) BBA (III - Year) சென்னை கிறிஸ்தவ கல்லூரியிலும், மூன்றாவது மகள் கிறிஸ்டினா பிரீத்தி ஏஞ்சல் (D.O.B: 04.10.2007) 9-ம் வகுப்பு டோனாவூர், சந்தோஷ வித்யாலயாவிலும் படித்து வருகின்றனர். இம்மிஷனெரிக் குடும்பத்தை நமது ஜெபங்களில் நினைவுகூருவோம்.



திரு. K. பிரான்சிஸ் துரைசாமி & திருமதி. ஜெயந்தி குடும்பம்

Regd. Newspaper for India No.17759/69

# நிதி அலுவலகத்திலிருந்து

**Online Banking**

## இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

ICICI - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icici**

SBI - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

Indian Bank - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Venkatapuram

தாங்கள் காணிக்கை அனுப்புகிறபோது remark column பகுதியில் தங்களது பெயர், விலாசம் மற்றும் பிரத்தியேக எண் ஆகியவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பவும். முதல் முறையாக online-இல் அனுப்பும்போது முகவரியுடன் எந்த வகை ஊழியத்திற்கு பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் **receiptsfinance@fmpb.org** என்ற மின்னஞ்சல் வழியாக, **WhatsApp: 7904648270** உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் கவனத்திற்கு:**
காணிக்கை செலுத்தும் படிவத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை தயவுசெய்து தெரியப்படுத்துங்கள்.

## நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

இணையதளம் மூலமாக பணம் பரிவர்த்தனை செய்ய, பாரத ஸ்டேட் வங்கியில் கட்டண நுழைவாயில் **(Payment gateway)** மூலமாக அனைவரும் பணம் செலுத்தும் வசதி பெற்றுள்ளோம். நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**FMPB SB COLLECT** என்ற இணையதளத்தின் மூலமாக பணம் அனுப்பும்போது எந்த நோக்கத்திற்காக பணம் செலுத்துகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கும்படி பட்சமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண நுழைவாயிலுக்குள் நுழைவதற்கு உங்கள் இணையதளத்தில் **FMPB SB COLLECT Online subscription** என்ற வார்த்தைகளைப் பதிவு செய்து பிற தகவல்களையும் பரிமாற்றம் செய்ய தயவுடன் வேண்டுகிறோம்.

**Online Fund Transfer**

In google search type: **FMPB SB Collect**

it will show **State Bank Collect - Online SBI**

**Tick the box**

☑ (Click check box to proceed for payment)

**Proceed** State of Corporate / Institution: Select **All India**

Type of Corporate / Institution: Select **Religious Institutions**

**Go** Religious Institutions Name: **Friends Missionary Prayer Band**

**Submit** Select Payment Category: **Donations and subscriptions**

***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***